சிற்ப சாத்திரம்

தொகுதி - 2

பதிப்பும் ஆங்கில மொழிபெயர்ப்பும்

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ (தமிழ்), எம்.ஏ (ஆங்), பி.எட்.டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர் (ஓய்வு)
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம், செ-5.

பொதுப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப
முதன்மைச் செயலர் (ம) ஆணையர்
தொல்லியல் துறை
சென்னை - 600 008.

இர. சந்திரமோகன், எம்.ஏ., எம்.பில்.,
காப்பாட்சியர் (பொ)
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம்,
சென்னை - 5.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம்
சென்னை - 600 005.

2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

சிற்ப சாத்திரம்

தொகுதி - 2

பதிப்பும் ஆங்கில மொழிபெயர்ப்பும்

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ (தமிழ்), எம்.ஏ (ஆங்), பி.எட். டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர் (ஓய்வு)
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம், செ.5

பொதுப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப
முதன்மைச் செயலர் (ம) ஆணையர்
தொல்லியல் துறை
சென்னை - 600 008.

இர. சந்திரமோகன், எம்.ஏ., எம்.பில்.,
காப்பாட்சியர் (பொ)
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம்,
சென்னை - 5

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம்
சென்னை - 600 005.

2011
திருவள்ளுவர் ஆண்டு 2042

SILPA SASTRÂM

VOLUME - II

Editing and English Rendering

Dr. S.SOUNDARAPANDIAN
M.A.(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip.Skt., Ph.D.,
Curator (Retd)
Govt. Oriental Manuscripts Library & Research Centre
Chennai-5

General Editors

Dr. T.S.SRIDHAR, I.A.S.,
Principal Secretary & Commissioner
Department of Archaeology
Chennai-8

R.CHANDRAMOHAN, M.A., M.Phil.,
Curator (i/c)
Govt. Oriental Manuscripts Library & Research Centre
Chennai-5

© Govt. Oriental Manuscripts Library & Research Centre
2011

Price:Rs.112/-

முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் (ம) ஆணையர்,
தொல்லியல் துறை,

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை-600 008
தொ.பே. /நகரி 91442819
மின்னஞ்சல் tnarch@tn.nil.in
வலைதளம்:www.tnarch.gov.in.

அணிந்துரை

நம் முன்னோர்களின் நாகரிகம், பண்பாடு, கலைநுட்பம் மற்றும் சமய தத்துவங்களை எடுத்துக்கூறும் சாதனங்களில் ஒன்று சிற்பமாகும். ஒவ்வொரு சிற்பமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கருத்தை / உணர்வினைக் காட்டுவன. பண்டைக் காலத்தில் சிற்பம் வடித்தல் ஒரு தொழிலாக இருந்தது. எனவே ஓர் சிற்பத்தை இப்படித்தான் உருவாக்க வேண்டும் என்பதற்கு — அதாவது சிற்பத்தில் இடம் பெற வேண்டிய உறுப்புகள், முகபாவம், ஆடை அணிகலன், ஆயுதம், சின்னம் போன்றவற்றுடன் சிற்பத்தின் நீளம், அகலம், கனம் மற்றும் சிற்பத்தை எந்த இடத்தில், எந்தத் திசையில் நிறுவ வேண்டும் என — பல்வேறு விதிமுறைகள் சமய சாத்திரம், சமய இலக்கியம், சிற்பக்கலை மற்றும் ஆகம நூல்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் கூறப்பட்டுள்ளன. இந்நூல்களை இயற்றிய ஞானிகளும், சிற்பிகளும் தமது காலத்திலும், தமக்கு முந்திய காலத்திலும் சிற்பக்கலை இலக்கணங்களிலிருந்த குறைகளைச் செப்பம் செய்து இக்கலையை வளரச் செய்துள்ளனர். இவ்விதிகளை அடிப்படையாகக் கொண்டே சிற்பிகளால் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. இவ்வாறு வடிக்கப்பட்ட சிற்பங்களில் தெய்வத் தன்மையும், சாந்தமும், அமைதியும், தெளிவும், கலைநுட்பமும் மிகுந்து காணப்படுவதை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைக்கப் பெற்ற சிற்பங்கள் மூலம் அறியலாம்.

கோவையில் 2010-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23 முதல் 27-ஆம் தேதி வரை நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு இனிதே நடைபெற்றதையொட்டி தமிழக கலை, வரலாறு, பண்பாடு, தொழில் நுட்பம் மற்றும் இலக்கியப் பெருமைகளை உலகிற்குப் பறைசாற்றும் நோக்கத்தில் 19 நூல்களை தொல்லியல் துறை வெளியிட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. அந்த 19 நூல்களில் ஒன்று 'சிற்ப சாத்திரம்'.

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் பாதுகாத்து வரும் வடமொழிச் சுவடிகளில் ஒன்று 'அம்சுமத் பேத ஆகமம்' (R.16746) அக்காலத்தில் வழக்கிலிருந்த சிற்பக்கலை குறித்த அரிய செய்திகள் இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளது. தமிழன் பெற்றிருந்த சிற்ப கலையுணர்வையும், அழகியல் நுட்பத்தையும் தமிழர் மட்டுமின்றி மேலை நாட்டவரும் படித்து பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் முன்னாள் காப்பாட்சியர்

முனைவர் சு.சௌந்தரபாண்டியன் அவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ‘சிற்ப சாத்திரம்’ எனும் இந்நூலை இரு தொகுதிகளாகப் பதிப்பித்துள்ளார்.

இதுவரை வெளிவந்துள்ள பெரும்பாலான சிற்பக்கலை நூல்கள் குறிப்பிட்ட ஒரு கோயிலிலுள்ள / இடத்திலுள்ள சிற்பம் குறித்த சிறப்புச் செய்திகளையும், கால வரிசைப்படி — அதாவது பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், விஜயநகர காலம் மற்றும் நாயக்கர் காலம் - சிற்பக்கலை வளர்ந்த முறையைக் கூறுவதாக உள்ளன. ஒரு சில நூல்களே சிற்பங்களை அமைக்கக்கூடிய இலக்கண விதிமுறைகளைக் கூறுவதாக உள்ளது. அவ்வரிசையில் இடம் பெறக்கூடிய தகுதியையும் சிறப்பையும் பெற்றது சிற்ப சாத்திரம் எனும் இந்நூல். அரிய இந்நூலை பதிப்பித்த முன்னாள் காப்பாட்சியர் முனைவர் சு.சௌந்தரபாண்டியன் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்நூலினை வெளியிட அனுமதியையும், நிதியுதவியையும் அளித்த தமிழக அரசிற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மற்றும் சுற்றுலா (ம) பண்பாட்டுத் துறை செயலர் ஆகியோர்களுக்கு தொல்லியல் துறையின் தலைவர் என்ற முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை சிறப்பாக வெளியிட பன்முகமாக பணி புரிந்த அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மைய நூலகர் (ம) காப்பாட்சியர் (பொ) திரு.இர.சந்திரமோகன் அவர்களுக்கும், இந்நூலைச் செம்மையாக அச்சிட்டு வழங்கிய ‘தி சென்னை பிரிண்டர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ-ஆபரேடிவ் சொசைட்டி லிமிடெட்’ அச்சகத்தாருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில பல்கலைக்கழகங்கள் மற்றும் நுண்கலைக் கல்லூரிகள் சிற்பக்கலையைத் தனிப் பாடமாக நடத்திவரும் நிலையில் ‘சிற்ப சாத்திரம்’ எனும் இந்நூல் சிற்பக்கலை குறித்து சிறந்த விழிப்புணர்வை மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், சிற்பக்கலை ஆர்வலர்களுக்கும் ஊட்டும் என்பதில் சிறிதும் ஐயமிலலை. மேலும் ‘சிற்ப சாத்திரம்’ எனும் இந்நூலை படிப்பவர்கள் ஒரு சிற்பத்தைக் காணும் போது அதன் சிறப்பையும், விதிமுறைப்படி சிற்பம் செதுக்கப்பட்டுள்ளதா என்று திறனாய்வு செய்யும் அளவிற்கு சிற்பக்கலையில் தேர்ச்சி பெறுவர் என்பது உறுதி.

இடம்: சென்னை (தி.ஸ்ரீ.ஸ்ரீதர்)
நாள்: -10-2010 முதன்மைச் செயலர் (ம) ஆணையர்

சிற்ப சாத்திரம்

தொகுதி - II

பதிப்புரை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்ட சிற்ப சாத்திரம் தொகுதி ஒன்றின் தொடர்ச்சியாக இது வெளிவருகிறது.

தொகுதி ஒன்று ‘அதமத் தசத்தாலம்’ என்ற பகுதியுடன் இற்றது; அதனைத் தொடர்ந்து, உத்தம நவத்தாலம் முதல் இத்தொகுதி தொடங்குகிறது.

தசத்தாலம், நவத்தாலம் என்பனவற்றுக்குத் தொகுதி ஒன்றில் விளக்கம் நல்கப்பட்டுள்ளது. தசத்தாலம், நவத்தாலங்கள் சிலைகள் வடிப்பதற்குரிய குறிப்பிட்ட அளவு முறைகளாம். “வசுக்களை உத்தம நவத்தால் செய்ய வேண்டும்” என்று ஆகமங்களில் எழுதினால், வசுக்களின் உருவங்களை (பிம்பங்களை), குறிப்பிட்ட நீள அகலங்களுடன் செய்ய வேண்டும் என்பது பொருள். அக்குறிப்பிட்ட நீள அகலங்களை இந் நூலுள் காணலாம்.

தொகுதி ஒன்றில் கூறிய சில விவரங்களை இங்கு கூற வேண்டும்; அஃதாவது, அம்சுமத் பேத ஆகமம் என்பது கசியபர் என்ற முனிவர் வடமொழியில் எழுதிய நூல் ஆகும். இதனால் காசிய சில்ப சாத்திரம் எனவும் இந்நூல் அழைக்கப்படும். தஞ்சாவூர்ச் சரசுவதி மகால் நூலகத்தில் வெளியிடப்பட்ட (1960) காசிய சில்ப சாத்திரம் என்ற நூலும், இங்கு பதிப்புப் பெறும் அம்சுமத் பேத ஆகமம் எனும் நூலும் அடிப்படையில் ஒன்றே; இரண்டும் ஒரே ஆசிரியர் பெயரால் உள்ளவையே. இருப்பினும், மூலத்திலேயே சில அளவுகள், நிறங்கள், தத்துவங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன; மேலும், சரசுவதி மகால் வெளியிட்ட நூலில் காணப்படும் உரை, அந்நூலகப் புலவர் எழுதியது. ஆனால், நமது பதிப்பானது, வடமொழி மூலத்திற்கு ஓலைச் சுவடியிலேயே இருந்த பழைய உரையாகும். இந்த இரண்டின் சிறப்பிற்காகவே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தால் அம்சுமத் பேத ஆகமம் பதிப்பிக்கப்படலாகிறது.

சரசுவதி மகால் நூலகம் வெளியிட்ட காசிய சில்ப சாத்திரம் என்ற நூலின் உதவி பெரிதும் இப்பதிப்பிற்குக் கொள்ளப்பட்டது என்பதை நன்றியுடன் இத்தருணத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

தமிழ்ச் சான்றோர்கள், ஆகமங்கள் வடமொழியில் உள்ளன என்று ஒதுக்கக் கூடாது; வடமொழியில் இருந்தாலும் அவற்றில் நம் தமிழரின் அறிவே பொதிந்து கிடக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இதை உணர்த்தும் ஒரு பெருநோக்கு இப்பதிப்பிற்கு உள்ளது.

ஆகமக் கருத்துகள் மூடநம்பிக்கை கொண்டவை எனவும் ஒதுக்குதல் கூடாது. தமிழர் திறன்களை ஆய்ந்து வெளிக் கொணரும் நோக்கோடு ஆய்வதற்கு ஆகமங்களில் எத்தனையோ

இடங்கள் உள; மூடநம்பிக்கை வேறு, தமிழர் அறிவு வேறு. மூர்த்திகளைச் செய்த திறன் வேறு, அவற்றை வணங்க வேண்டும் என்பது வேறு. மூர்த்திகளை வணங்க வேண்டும் என்ற பக்தி நோக்கோடு இங்கு இந்நூல் பதிப்பிக்கப்படவில்லை; மூர்த்திகளை வடித்ததில் தமிழர் கையாண்ட அறிவியல் நுட்பங்களை (Scientific technicalities) நாம் அறிய வேண்டும் என்பதற்காகவே இந்நூல் இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

அந்நாளில், தமிழ்ச் சான்றோர்கள் பலர் நல்ல வடமொழிவாணர்களாகவும் இருந்தனர் என்பதை நாம் மறத்தல் ஆகாது. அம்முறையில் ஆயும் போது, கசியபர் என்பாரே தமிழராகவும் இருந்திருக்க வாய்ப்பு உளது; இம்முறையில் ஆயவேண்டும் என்று ஆய்வை நெறிப்படுத்தும் ஒரு நோக்கும் இப்பதிப்புக்கு உள்ளது.

அம்சுமத் பேத ஆகமத்தின் காலம் கி.பி., 8-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி., 10-ஆம நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என்று பொதுவாக உரைக்கலாம்.

இங்கு பதிப்புப் பெறும் சுவடியில் ஓரிரு இடங்களில் போடப்பட்டுள்ள கணக்குகளில் சில திருத்தங்கள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, "யுகாம்சம் தத்யவோனகம்" என்பதற்கு, சுவடியில் 3½ என்று பொருள் கொள்ளப்பட்டுளது. ஆனால், 3 7/8 என்பதே சரியாகிறது; அ∴தாவது,

யுகம் = 4
யவம் = 1/8
ஊனம் = குறைவு

4 - 1/8 = 3 7/8 எனவரல் காணலாம்.

பிறிதோரிடத்தில், "ஜானுத் தீர்க்கம் விரல் மூன்றரை" என்று சுவடியில் உள்ள தமிழ் உரையில் உளது; ஆனால், வடமொழி மூலத்தைப் படித்தால், "ஜானுத் தீர்க்கம் கழுத்தைப் போன்றது" என்று எழுதப்பட்டுள்ளது. கழுத்தின் நீளம் 3 ¾ விரல் இதே சுவடியில் தமிழுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "ஜானுத் தீர்க்கம் விரல் மூன்றே முக்கால்" என்றே நாம் கொள்ள வேண்டியதாகிறது. (ஜானு - முழங்கால்)

இந்நூலின் ஆக்கத்திற்குப் பயன்பட்ட அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி, சிக்கலான சுவடி. இதில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ் உரை, பல இடங்களில் பொருள் தெளிவைத் தரவில்லை. இயன்ற அளவு தமிழ் உரை செப்பம் செய்து இங்கு நூலாக்கப்பட்டுள்ளது; பொருள் தெளிவே முற்றிலும் இல்லாத இடங்கள், தொடர்பற்ற இடங்கள் விடப்பட்டுள்ளன.

'அம்சுமத் பேத ஆகமம்' என்று இங்கு அச்சுப் பெறும் இந்தச் சுவடி, ஓலைச் சுவடியாக 1884 இல் வேங்கடசுப்பாச்சாரி என்ற சிற்பத் தொழில் கைவினைஞர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாகும். (Educational Report, 19 Sep. 1884, No.576, 577, p.3)

மேற்படி வேங்கடசுப்பாச்சாரி என்பவரிடமிருந்து இது மட்டுமல்லாமல், மயமதம், மானசாரம், சில்ப சங்கிரகம், காமிகாமம் முதலிய வேறு சில ஓலைச் சுவடிக்ளையும் அந்நாளில் (1884) நூலகம் பெற்றுள்ளது.

இவ் வேங்கடசுப்பாச்சாரி வேலூரில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

முன்பு உரைக்கப்பட்டது போல, நமது இப்பதிப்புக்குப் பயன்பட்ட அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியின் தமிழ் உரையில் சில திருத்தங்கள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'ஸ்கந்த' என்ற வடச்சொல்லுக்குத் தோள் என்று பொருள் கொள்ளாமல், முருகன் என்று தவறாகச் சுவடி பொருள் எழுதியுள்ளது; நடராச மூர்த்தியைக் கூறும் போது இது காணப்பட்டது. நடராச மூர்த்திக்கும் சுப்பிரமணியருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை; எனவே, இப்படிப்பட்ட குழப்பம் தரும் சுவடி இடங்கள் நமது பதிப்பில், இயன்றவரை, நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

பொதுவாக, அனைத்து ஆகமங்களிலும் 'துவிஜஹ' என்றதொரு சொல் காணப்படும்; "ஏ துவிஜஹ" என்று கூறுவது போலச் சுலோகங்கள் அமையும். இந்த இடத்திலெல்லாம் 'பிராமணன்' என்றே அனைவரும் பொருள் கொண்டுள்ளனர். இது தவறாகும். 'துவிஜஹ' என்ற சொல் "சாத்திர முறைப்படி சடங்குகள் செய்யும் முதல் 3 வருணத்தாரையும்" குறிக்கும்; அ.தாவது, சத்திரியர், பிராமணர், வைசியர் ஆகிய மூன்று பிரிவாரையும் குறிக்கும். இந்தச் செய்தியை நமக்குத் தெரிவிப்பது பிரம்மாண்டபுராணம் (1983, G.V.Tagore, ஆங். மொ.பெ. தொகுதி-I) ஆகும். ஆகமம் போன்ற தொழில் நுட்ப அறிவானது, இவ்வாறுதான், பல வகுப்பாருக்கும்தான் கூறப்பட்டிருக்குமே தவிர, குறிப்பிட்ட ஒரு வகுப்பாரை மட்டும் விளித்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை அல்லவா?

இந்த ஆகம நூலிற் காணலாகும் தொழில் நுட்பங்கள் யாவும் தமிழர் கண்ட நுணுக்கங்களே; வடமொழி ஆகமத்தில் உள்ளன என்பதால், அவை தமிழருடையவை அல்ல என்றாகாது! தொழில் நுட்பத் தன்மைகள், கலைச்சொற்கள், இப்போதைய தமிழரிடம் காணப்படும் நுணுக்கங்கள் முதலியவற்றின் அடிப்படையில் இதனை நாம் கூறமுடியும்!.

பொதுவாக, மேலாய்வுகளுக்கு வழிவகுக்கும் என்ற பெரு நோக்கோடு இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

அன்பன்
முனைவர் சு.சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ.(தமிழ்),எம்.ஏ.(ஆங்),பி.எட்.,டிப்.வ.மொ.,பிஎச்.டி.,
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

வ.எண்	உட்தலைப்பு	பக்கம்
1	உத்தம நவத்தாலம்	001
2	மத்தியம நவத்தாலம்	003
3	அதம நவத்தாலம்	006
4	அஷ்டத் தாலம்	008
5	சப்தத் தால விதி	010
6	சுகாசன விதி	013
7	சோமாஸ் கந்தர்	026
8	சந்திரசேகர மூர்த்தி	034
9	விருசப வாகன மூர்த்தி	048
10	நிருத்த மூர்த்தி	052
11	கங்காதர இலட்சணம்	069
12	திரிபுராந்தக மூர்த்தி இலட்சணம்	072
13	கல்யாணசுந்தர இலட்சணம்	079
14	அர்த்தநாரீசுவர மூர்த்தி இலட்சணம்	082
15	கஜசம்ஹார மூர்த்தி இலட்சணம்	083
16	பாசுபத மூர்த்தி இலட்சணம்	086
17	கங்காள மூர்த்தி இலட்சணம்	088
18	பிட்சாடன மகேஸ்வர இலட்சணம்	092
19	சண்டேசானுக்கிரக மூர்த்தி இலட்சணம்	095
20	தட்சினா மூர்த்தி இலட்சணம்	096

21	காலக மூர்த்தி இலட்சணம்	101
22	இலிங்கோத்பவ மூர்த்தி இலட்சணம்	103
23	விருட்ச சங்கிரக இலட்சணம்	104
24	சூல இலட்சணம்	106
25	சூலஸ்தாபனம்	115
26	ரஜ்ஜு பந்தன இலட்சணம்	121
27	மிருத் சம்ஸ்காரம்	126
28	கல்க விதானம்	130
29	வர்ண சம்ஸ்கார இலட்சணம்	133
30	சுதா கர்மார்ஹக நிருபணம்	136
31	வர்ண லேபனம்	139
32	பக்த இலட்சணம்	143
33	சண்டேசுவர இலட்சணம்	148
34	பூமி மான இலட்சணம்	150
35	கிராமாதி இலட்சணம்	151

Silpa Sastrām – Vol . II

Editor's Introduction

In continuation of Silpa Sastram –Vol I published by Govt, Oriental Manuscripts Library, this second volume of the same title is being brought out.

The first Volume published whileom ended with the chapter 'Atamattacat talam' and the present edition begins with the chapter 'Uttama navattālā'.

The terms tacattālā and navattālā have found explanation in our first volume; these are nothing but the measurements to chisel idols. When the āgamās specify, "the idols of Vasus should be executed with Uttama navattālā", it is implied that these idols should be hewn keeping the measures what are known as, collectively, uttama navattālā.

Let us digress, a little with what we observed whileom in our first volume of Amcumat Beta Agamā. Amcumat Beta Agamā, authored by Kashyapa, is a Sanskrit treatise which is also known as Kashyapa Silpa Sastrā. The texts of Amcumat Beta Agamā, utilized here and that one used by Tanjore Saraswati Mahal Library (1960) are one and the same, most probably. However, in regard to certain measures and concepts we do meet some differences between them. Moreover, the exposition available in the Saraswathi Mahal Library book has been penned by a later author while that which has found edition here is available in the original palm leaf manuscript itself. Hence the attempt of this edition.

At this juncture I, sincerelv express my gratitude to the edition of Saraswathi Mahal Library.

Tamil scholars should not spurn the agamās on the ground that they are available in Sanskrit. Tamils' knowledge is imbibed in Sanskrit agamās, we must realize. This is one of the ideals of this our present endeavour.

On the other hand, we must not execrate agamās saying that they depict only superstitions. Superstition is different from the Tamils' scientific approach. The making of idols is quite different from asking to worship them. Our present edition does not advocate to worship the idols; but to approve the technicalities of Tamils employed in idol making.

In those days, innumerable Tamil scholars were well versed in Sanskrit also. Taking this thread, we can surmise that there is a possibility, however remote, of assuming Kashyapā to be a sage of Tamil Origin. Our researches may follow, well, follow this line of thinking.

The period of our Amcumat Bēta Agamā may be assigned, in general, between 8th Century and 10th Century A.D.

Little corrections are needed to the arithmetic available in our manuscript. For example, "Yugāmcam tatyavōnakam" – has been interpreted to arrive at a result 3 ½; But, the correct calculation gives only 3 7/8 thus:-

Yugā = 4

Yavā = 1/8

ōṉā = subtracting

4 – 1/8 = 3 7/8

At another place, in manuscript, it has been incised as, "the length of Jānu is 3 ½ fingers". But in Sanskrit text, it has been given as, "Janu's length will be like that of neck". In the Tamil commentary to this portion, it has been rendered that the length of neck must be 3 ¾ fingers. So, we have to correct the length of knee as 3 ¾ fingers.

The manuscript, found print here, is not an easy one; its Tamil exposition is not the one which renders unequivocal sense. As far as possible, the Tamil meanings has been corrected and rendered here spurning the clumsy portions.

The basic palm leaf manuscript of this present book had been received by Govt. Oriental Manuscripts Library in 1884 from one Mr.Venkatasubbhachāri, a sculptor, native of Vellore. (Educational Report, 19, September 1884, No.576, 577, P.3).

This Venkatasubbachari, a limner, had also supplied several technical manuscripts including, Mayametā, Māṉasarā, Silpa sangrahā, Kamikāgama etc. in 1884.

As pointed out before, the Tamil sketches in our manuscript utilised for this edition, several corrections are needed. For example, the word 'skanda' denotes only shoulder when writing about Naṭṭarājā. But our manuscript interprets as Murugā who has no connection with Naṭṭarājā icon at all. Such clumsy portions are deleted in our edition.

The word 'twijaha', occuring in Agamas is note worthy. Many have interpreted as if it addresses towards 'brahmin'. This is untrue. 'Twijah' denotes the community which carried out various religious rites as per sastras. In other words, the word 'twijaha' denotes all the three communities viz. Catriyā, Brahmin and Vaisyā. Thus spake Brahmande purana (1983 G.V.Tagare, English translation, Vol.I). The highly technical work

like Agama must have been addressed to variegated people; we can't expect it to have been written to only one sect of people.

The technical aspects of this treatise are the wealth of Tamils. We cannot spurn this notion, simply because the treatise is in Sanskrit. The nature of technicalities, technical terms, present day Tamils' life, all these stand proof for this statement.

In general, only to augment further researches, this piece has been brought to light.

Loving
Dr.S.Soundarapandian
M.A. (Tamil), M.A.(English), B.Ed.,
Dip.Skt., Ph.D.,
Editor.

INDEX

S.No	Sub – Title	Page No
1	Uttama navattālam	001
2	Matyama navattālam	003
3	Atama navattālam	006
4	Ashtat tālam	008
5	Saptat tāla vidhi	010
6	Cukāsaṉa Vidhi	013
7	Somās kandā	026
8	Chandrasēkara murthy	034
9	Vrsaba Vāhaṉa murthy	048
10	Nrtta murthy	052
11	Gangādhara lakshaṇā	069
12	Tiripurāntaka mūrty lakshaṇā	072
13	Kalyānasundara lakshnā	079
14	Arttanāricuvara mūrty	082
15	Gajasamhāra mūrty	083
16	Pāsupata mūrty lakshaṇā	086
17	Kaṭngāla mūrty lakshaṇā	088
18	Bhikshāṭana makēshwara lakshaṇā	092
19	Caṇṭēsanukraha mūrty	095
20	Dhakshiṇā mūrty	096

21	Kālaha mūrty lakshaṇā	101
22	Lingōtpava mūrty lakshaṇā	103
23	Vrksha sangraha lakshaṇā	104
24	Shūla lakshaṇā	106
25	Shūla stapanā	115
26	Rajju bandhana lakshaṇā	121
27	Mrth Samskāram	126
28	Kalka vidhanam	130
29	Varṇa samskāra lakshaṇā	133
30	Sudā karmārhaka Nirūpaṇam	136
31	Varṇa lēpaṉam	139
32	Bhakta lakshaṇam	143
33	Chandēswara lakshaṇam	148
34	Bhūmi māṉa lakshaṇam	150
35	Grāmādi lakshaṇam	151

1. உத்ம நவத்தாலம்

1. உத்தம நவத்தாலமானது சொல்கிறேன். அஷ்ட வசுக்கள், அஷ்டவித்யேச்வரர்கள், அஷ்டதிக் பாலகர்கள் மற்றுள்ள தேவதைகளுக்கெல்லாம் நவத்தாலத்தினால் செய்வான்.

(அஷ்ட - எட்டு)

Let me articulate what is termed as Uttama navattālā. He would secure the idols of eight vasus, eight vidyēswarās, eight guards and other deities with the measures known as Uttama navattālā.

(ashṭa – eight)

2. பேரோதயத்தை நூற்றுப் பன்னிரண்டு செய்து, உஷ்ணீசம் விரல் ஒன்று, கேசாந்தம் விரல் அரை, கேசாந்தத்திலே நின்றும் அட்சிச் சூத்திராந்தம் விரல் நான்கு; அதில் நின்றும் புடாந்தம் விரல் நான்கு; புடாந்தத்தில் நின்றும் ஹனுவந்தம் விரல் நான்கு; கழுத்து விரல் நான்கு; இக்கையில் நின்றும் ஹிருதயாந்தம் விரல் பன்னிரண்டு.

(பேர + உதயம் = பேரோதயம்)

When segregated the whole height of the idol into 112 fingers, 1 finger thereof will make the height of crest; 3 fingers will form the height of hair up to the forehead; 4 fingers will constitute the gap between the end of hair and the eye-line; 4 fingers will form the length between the eye-line and the end of nose; 4 fingers may constitute the distance between the end of nose and the chin. The neck must have height of fingers 4 up to the chest from the bottom of neck, we will have a height of fingers 12.

(Bēra + utayam = Bērotayam).

3. இருதயத்தில் நின்றும் நாபிச் சீமாந்தம் விரல் பன்னிரண்டு; நாபியில் நின்றும் மேட்ர மூலாந்தம் விரல் பன்னிரண்டு.

(சீமாந்தம் - எல்லை வரையில்)

From the chest up to the navel, the distance will be fingers 12; between the navel and the base of the penis, the gap must be of fingers 12

(Cīmāntam – upto the limit).

4. ஊருத் தீர்க்கம் விரல் இருபத்து நான்கு; ஜானுத் தீர்க்கம் விரல் நான்கு; ஜங்காத் தீர்க்கம் விரல் இருபத்து நான்கு; பாதத்தலம் விரல் நான்கு.

(ஊரு — தொடை)

The thigh should have a height of fingers 24 while the knee, fingers 4. The calf must have a height of 24 fingers when the foot, fingers 4.

(ūru – thigh)

5. ஹிக்கைக்குக் கீழ், பாகுத் தீர்க்கம் விரல் இருபத்து நான்கு; பிரகோஷ்டம் விரல் பதினெட்டு; தலத் தீர்க்கம் விரல் பன்னிரண்டு.

(தலம் - விரல் மற்றும் உள்ளங்கை)

The length of upper arm from shoulder should be of fingers 24 and that of forearm, fingers 18 while that of palm, 12 fingers.

(talam – palm)

6. மத்தியாங்குலத் தீர்க்கம் விரல் ஆறு; மற்றுள்ளவையெல்லாம் கன்யசத் தசத்தாலத்தினாலே சொன்னாற் போலச் செய்வான்.

(மத்தியாங்குலம் - நடு விரல்)

The middle finger will have a height of fingers 6, while the measures of other digits embrace those advocated for kanyacattacattālā.

(Matyāṅgulā - mid finger)

2. மத்தியம நவத்தாலம்

7. மத்தியம நவத்தாலத்தை விசேஷித்துச் சொல்கிறேன். அப்சரக் கணங்கள், அஸ்திர மூர்த்திகள், மருத்கணங்கள் இவர்களையெல்லாம் மத்தியம நவத்தாலத்தினாலே செய்வான்.

Now, let me recount what is celebrated as navattālā with due emphasis. He would hew the peart Apsaras party, Astra murthys and Maruts keeping the measures Mattyama navattālā.

8. பேரோதயத்தை நூற்றியெட்டு அம்சமாகச் செய்வான். உஷ்ணீசம் விரல் ஒன்று; கேசாந்தம் விரல் இரண்டரை; கேசாந்தத்தில் நின்றும் நேத்திராந்தம் மூன்றரை.

(கேச + அந்தம் = கேசாந்தம்)

He would bifurcate the whole length of the image into 108 divisions and with 1 division thereof would be made Ushnīshā. The distance up to the extremity of hair should be of 2 ½ fingers (divisions) and from the extremity of hair to the eye, the gap must be fingers 3 ½

(Kēsa + antam = Kēsāntam).

9. நேத்திரத்தில் நின்றும் புடாந்தம் விரல் மூன்றேமுக்காலே அரைக்கால்; புடாந்தத்தில் நின்றும் ஹன்வந்தம் விரல் மூன்றேமுக்காலே அரைக்கால்; கிரீவாத் தீர்க்கம் விரல் மூன்றேமுக்கால்.

(புடாந்தம் - மூக்குத்துளை நுனி)

Between the eye and extremity of nose, the distance must be fingers 3 7/8 and the gap between the tip of nose and the chin should be fingers 3 7/8. The height of neck constitutes fingers 3 ¾.

(Putāntam – lower tip of nose).

10. ஹிக்கையில் நின்றும் ஹிருதயாந்தம் விரல் பதினொன்றரையே அரைக்கால்; ஹிருதயாந்தத்தில் நின்றும் நாப்யந்தம் விரல் பதினொன்றரையே அரைக்கால்; நாபியில் நின்றும் மேட்ராந்தம் விரல் பதினொன்றரையே அரைக்கால்.

(பானுஷ்ச அக்னி யவோனம் என்பதற்குக் கணக்கு: -

பானு = 12

அக்னி = 3

யவ = 1 / 8

ஊனம் = குறைவு

∴ 12 - (1/8 + 1/8 +1/8) = 11 5/8

(சுவடியில் 11 3/4 என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது திருத்தத்திற்கு உரியது)

Between the base of the neck and the chest, we should have a gap of 11 5/8 fingers and between lower extremity of chest and navel, the distance must be the same. The same, again, must be kept between navel and the organ penis.

(Calculation to "Bānuscha agni yavōnam";

bāṉu = 12

agni = 3

yavā = 1

ōṉam = subtract

therefore 12 - (1/8 +1/8+1/8) = 11 5/8.

(In our palmleaf manuscripts, the answer 11 3/4 given needs correction).

11. ஊருத் தீர்க்கம் விரல் இருபத்து மூன்றேகால்; ஜானுத் தீர்க்கம் விரல் மூன்றேமுக்கால் ஜங்காத் தீர்க்கம் விரல் இருபத்து மூன்றேகால்.

(ஜானு – முழங்கால்

தீர்க்கம் – நீளம்

ஜங்கா – கண்டைக்கால்)

Length of thigh must be fingers 23 ¼ and that of knee, 3 ½ while the length of calf should be of 23 ¼ fingers.

(jāṉu –knew

tīrkkam – length

jaṅgā – calf).

12. தலோதயம் விரல் [மூன்றேமுக்கால்]; பாகுத் தீர்க்கம் விரல் இருபத்து மூன்றேகால்; பிரகோஷ்டத் தீர்க்கம் விரல் பதினேழு.

(பிரகோஷ்டம் - முன்கை)

The foot will have a height of fingers 3 ¾ and the upper arm, 23 ¼ while the forearm must have length of fingers 17.

(prakōshṭā - forearm).

13. தலத் தீர்க்கம் விரல் ஐந்தரையே அரைக்கால் மத்தியாங்குலித் தீர்க்கம் ஐந்தரையே அரைக்கால்; மற்றுள்ளவை யெல்லாம் யுக்தியினால் செய்வான்.

(தலம் - உள்ளங்கை)

The palm must have a length of fingers 5 5/8 and the mid finger, the same. As for the rest, he would incise using his wits.

(talam – palm).

3. அதம நவத்தாலம்

14. அதம நவத்தாலத்தைச் சொல்கிறேன்! வித்தியாதரக் கணங்கள், அசுரர்கள், சித்தர்கள், பித்ருக்கள், கந்தருவர்கள் இவர்களை அதம நவத்தினாலே செய்வான்!

I, now, will expound what is acclaimed as Atamanavattālā. He would hew the peart statues of Vidyādarās, Asurās, Siddhās, Pitrūs and Gandharvās in accordance with the measures called, Atama navattālā.

15. பேரோதயத்தை நூற்று நான்கு செய்து, உஷ்ணீஷத்தில் நின்றும் கேசாந்தம் விரல் [இரண்டரை]; கேசாந்தத்தில் நின்றும் நேத்திரச் சூத்திராந்தம் விரல் மூன்றே முக்கால்.

(கேச + அந்தம் = கேசாந்தம்; கேசம் - தலை (முடி)

Having distributed the full length of the idol into 104 parts, he would keep the length dividing the base of ushnīshā and the extremity of hair as (2 1/2) fingers. And from the extremity of hair to the eye-line, nētrasūtrā, the distance must be fingers 3 ¾.

(kēsa + antam = kēsāntam;

kēsam – hair).

16. நேத்திரச் சூத்திரத்தில் நின்றும் புடாந்தம் விரல் [மூன்றே முக்கால்]; கிரீவோதயம் விரல் மூன்றரை.

(புட + அந்தம் = புடாந்தம்)

The end of nose will find a place only after a gap of fingers 3 ¾ from the eye-line. The neck must have a height of 3 1/2 fingers.

(puṭa + antam = puṭāntam).

17. ஹிக்கையில் நின்றும் ஹிருதயாந்தம் விரல் பதினொன்றேகால், ஹிருதயத்தில் நின்றும் நாப்யந்தம் விரல் பதினொன்றேகால், நாபியில் நின்றும் மேட்ராந்தம் விரல் பதினொன்றேகால்.

(மேட்ரம் - ஆண்குறி)

Between the base of neck and the lower extremity of chest, the gap must be of fingers 11 ¼ and the same number of fingers should be maintained between the lower extremity of chest and the navel. And, again, the same gap will be kept between the organs navel and penis.

(mētram – penis)

18. ஊருத் தீர்க்கம் இருபத்து மூன்றே முக்காலே யரைக்கால். ஜானுத் தீர்க்கம் விரல் மூன்றரை. ஜங்காத் தீர்க்கம் [இருபத்து மூன்றே முக்காலே யரைக்கால்].

(தீர்க்கம் - நீளம்)

The thigh must have a height of 23 7/8 fingers and this height holds good for calf also while the knee will have a length of fingers 3 ½ .

(tīrkkam – length)

19. பாகுத் தீர்க்கம் விரல் இருபத்து மூன்றே [முக்காலே அரைக்கால்]. பிரகோஷ்டம் விரல் பதினாறு; தலத் தீர்க்கம் விரல் ஐந்து; மத்தியமை விரல் ஐந்து.

(மத்தியமை - நடு)

The upper arm will have a length of fingers 23 7/8 and the forearm, 16 fingers. The palm's length must be fingers 5 and the same forms the length of mid finger.

(matyamai – middle).

20. மற்றுள்ளவை எல்லாம் யுக்தியினாலே செய்வான்.

The remaining measures, should be assigned according to his caliber in lapidary matters.

4. அஷ்டத் தாலம்

21. பிற்பாடு, அஷ்டத் தாலமென்று சொல்கிறேன். மனுஷ்யப் பிம்போச்சத்தை நூறு அம்சஞ் செய்து, உஷ்ணீசக் கறுப்பு விரல் ஒன்று.

(பிம்பம் - உரு)

Thereupon, let me prescribe what is understood as Ashatattālā. The entire height of human idol should be bisected into 100 parts, and 1 part thereof must be kept as the height of crest.

(bimbā – idol)

22. கேசாந்தம் விரல் இரண்டரை; கேசாந்தத்தில் நின்றும் ஹன்வந்தம் விரல் பத்தே முக்கால். இந்த நீளத்தை மூன்று செய்து, நேத்ராந்தம் ஒன்று, புடாந்தம் ஒன்று, ஹன்வந்தம் ஒன்று, களத்தீர்க்கம் [மூன்றரை].

(களத் தீர்க்கம் - கழுத்து உயரம்)

Up to the extremity of hair, the length be of 2 1/2 fingers. Between the extremity of hair and chin, we should have a gap, 10 ¾ fingers. This gap of 10 ¾ fingers must be segregated into 3 parts and with 1 part thereof, the gap between the eye-line and the extremity of hair should be maintained. With the same 1 part, the gaps between eye-line and end of nose, and end of nose and chin will be set up.

(galattīrkkam – length of neck).

23. ஹிக்கையில் நின்றும் ஹிருதயாந்தம் விரல் பதினொன்றே முக்கால்; ஹிருதயாந்த்தில் நின்றும் நாப்யந்தம் விரல் பதினொன்றே முக்கால்; நாபியில் நின்றும் மேட்ராந்தம் விரல் பதினொன்றே முக்கால்.

The lower extremity of chest from the lower extremity of neck should touch after a gap of 11 ¾ fingers. The same in between distance must be maintained between the lower extremity of chest and navel, and, navel and penis.

24. ஊருத் தீர்க்கம் விரல் இருபத்தொன்று; ஜானுத் தீர்க்கம் விரல் [மூன்றரை]; ஜங்காத் தீர்க்கம் விரல் இருபத்தொன்று.

(தீர்க்கம் - நீளம்)

Twenty one fingers length be needed to hew the thigh and the same gap must be left for calf. The length of knew will be fingers 3 ½.

(tīrkkam – length).

25. தலோதயம் விரல் [மூன்றரை]; பாகுத் தீர்க்கம் விரல் இருபத்தொன்று; பிரகோஷ்டம் விரல் பதினாறு; தலத் தீர்க்கம் விரல் ஐந்தரை.

(பாகு - மேற்கை)

Three and a half fingers height should be maintained to chisel foot and 21 fingers to upper arm while the palm's length be of 5 ½ fingers.

(bāhu – upper arm).

26. மத்தியமை விரல் ஐந்தரை; பாதத் தலாயதம் விரல் பதினைந்து, மற்றுள்ளவை கன்யசத் தசத்தாலம் போலச் செய்வான்.

(தல + ஆயதம் = தலாயதம்; ஆயதம் - நீளம்)

Five and half fingers length constitutes the height of middle finger and 15, the length of foot. As regards the remaining measures, he would observe those meant for kanyasat tacattālā.

(tala + āyatam = talāyatam, āyatam – length).

5. சப்தத் தால விதி

27. அனந்தரம் சப்தத் தால விதி சொல்லப்படா நின்றது.

(அனந்தரம் - அதன் பிறகு)

Thereafter, saptat tāla injunctions have been delineated.

(anantaram – thereafter).

28. பிரதிமோத்சேதத்தை எண்பத்து எட்டுச் செய்து, உஷ்ணீசம் விரல்[அரை]; கேசாந்தம் விரல் ஒன்று.

(பிரதிமை - சிலை)

Having parceled the full height of idol into 88 parts, ½ part thereof must constitute the height of crest while 1 part thereof should form the gap up to the extremity of hair from crest's base.

(pratimā – idol).

29. கேசாந்தத்தில் நின்றும் நேத்ராந்தம் விரல் இரண்டரை; புடாந்தத்தில் நின்றும் சிபுகாந்தம் விரல் மூன்றரை; கண்டம் விரல் நான்கு.

(கண்டம் - கழுத்து

சிபுகம் - முகவாய் கட்டை)

Two and a half fingers gap must be allotted between the lower extremity of hair and the eye-line and 3 ½ fingers, between the end of nose and the chin while 4 fingers for the full height of neck.

(kaṇṭam – neck

cibukam – chin).

30. ஸ்தனாந்தம் விரல் ஏழு; ஸ்தனாந்தத்தில் நின்றும் நாப்யந்தம் விரல் பதினொன்று.

(ஸ்தன + அந்தம் = ஸ்தனாந்தம்

ஸ்தனம் - மார்பு)

The in-between gap between the bottom of neck and the lower extremity of chest must be fingers 7 while 11 fingers will divide the lower extremity of chest and navel.

(stana + antam = stanāntam

stanā – chest).

31. யோனி மூலாந்தம் விரல் 11.

The secret part and the navel must fall apart leaving a space of 11 fingers.

32. ஊருத் தீர்க்கம் விரல் இருபது.

Twenty fingers constitute the length of thigh.

33. ஜானுமானம் விரல் இரண்டு; ஜங்கை விரல் இருபது.

The organ knee should attain a length of fingers 2 while the calf must receive a height of 20 fingers.

34. சரணோச்சம் விரல் இரண்டு; தலாயாமம் விரல் பதினான்கு.

(சரணம் - பாதம்)

The foot will have a height of fingers 2 when it has a length of fingers 14 .

(caraṇam – foot).

35. பாகுத் தீர்க்கம் விரல் இருபது, முன்கை நீளம் விரல் பதினைந்து.

Twenty fingers length be needed to frame the upper arm when 15 to forearm.

36. தலாயாமம் விரல் ஐந்து; தல விஸ்தாரம். விரல் நான்கு.

(தலம் - கைத்தலம்)

Five fingers length must be aimed at to construct the palm when 4 fingers to its breadth.

(talam – palm)

37. மத்தியாங்குலி விரல் ஐந்து.

Five fingers length must be kept up to hew the exquisite middle finger.

38. சேஷித்துள்ள அங்கங்களுடைய வியாசங்கள் முன் சொன்னாற் போலச் செய்வான்.

(சேஷித்துள்ள - எஞ்சியுள்ள;

வியாசங்கள் - அளவுகள்)

For the remaining organs to be hewn, he would maintain the measured advocated while on.

(cēshittulla – remaining;

viyācankal – measures)

39. தசத்தாலந் தொடங்கிச் சப்தத்தால மளவாகச் சொல்லப்பட்டது.

Starting from tacattālā, all have been viewed up to sapatattālā.

6. சுகாசன விதி

40. அனந்தபுரம் சுகாசன விதியானது சொல்லப்படா நின்றது.

Thereafter, sukācana injunctions have been expounded.

41. செவ்வையாக இருக்கிறது; இராஜசமாக யிருக்கும்; பத்ரப் பீடத்தின் மேலே இருப்புமா யிருக்கும்.

(இராஜசமாக - கம்பீரமாக)

The pose will be an exquisite and grandeur one . He (Siva) will be sitting on the patrapītā.

(irācajamāha – grandeur)

42. இடக்கால் பீடத்தின் மேல் மடித்து வைத்ததாகவும், வலக்கால் பீடத்தின் கீழே நீட்டினதாகவும் செய்வான்.

The left shank, folded, must rest on the seat while the right, be hanging down.

43. யோன்யந்தத்திற்குக் கீழப் பீடமளவாக விரல் நாலரை, ஸ்பிக் பிண்டத்தின் மானமாக அறிவான். இது அரைக்குக் கீழ் மேலளவிலே கூட்டிக் காணுமிடத்து நூற்றிருபத்தெட்டரை விரல் காணுமென் றறிவான்.

(யோன்யந்தம் - குறி முடிவு;

ஸ்பிக் பிண்டம் - பிருட்டப் பகுதி)

Above the seat, the butt will find a height of fingers 4 ½ inclusive of which the total height of the pose must be of 128 ½ fingers.

(yōnyantam – end of penis;

Spic pindam –buttocks)

44. ஆசனத்திலே நின்றும் பூர்வக கேசாந்தமான சூத்திரத்தை, ஜானுக்களினுடைய பாகியத்திலே வைத்தாலும் ஒக்கவும், ஜானுவின் மேலே நின்றும் பூர்வக் கேசாந்தமாக வைத்தாலும் ஒக்கவும், முழந்தாளிலே நின்றும் தோள் முதுகிலே வைத்தாலும் ஒக்கவும், பாகியத்தில் மணி பந்தத்தில் நடுவே வைத்தாலும் ஒத்து இருப்பது; இது பஞ்ச சூத்திரமாம்.

(பாகியத்தில் - வெளிப்பக்கத்தில்)

The two points, seat and the top of hair, must measure a distance in between which should be equal to that between outer extremities of knees; that between knee and the top of hair; that between knee and shoulder and that between the centers of two wrists. This is pañcasūtrā.

(bāhiyattil – at extremity)

45. இந்த விக்கிரகத்திலே ஒன்பது சூத்திரமுண்டு. அதில் இப்பொழுது பூர்வச் சூத்திரம் சொல்லப்படா நின்றது.

Nine sūtrās (thread) are meant for this idol; one among which is rendered now under the name pūrvaccūtrā.

46. மௌலி மத்தியத்தில் நின்றும், நாசாக்கிரத்தில் ஸ்பரிசிக்கவும், ஸ்தனமத்திய மார்புக்கு இதிலே ஸ்பரிசிக்கவும், நாபி மத்தியத்திலே ஸ்பரிசிக்கவும், இடக்காலிற்கு நடுவே ஸ்பரிசிக்கவும் பூர்வச் சூத்திரத்தைப் பிரலம்பிப்பான்.

(பிரலம்பிப்பான் - தொங்க விடுவான்;

மௌலி - தலை)

He would allow the cord to fall down from the centre of head touching the organs - the tip of nose, centre of chest, centre of navel and the centre spot of left foot.

(pralambippān – he would allow to tall the thread;

mouli – head)

47. பூர்வச் சூத்திரத்திலே நின்றும் வல முழக்கால் நீக்கம் விரல் முப்பத்தொன்று ஆதல், முப்பது ஆதல், இருபத் தொன்பது ஆதலாம்.

(நீக்கம் - இடைவெளி;

முழக்கால் - முழங்கால்)

Thirty one, 30 or 29 fingers must be assigned as the gap between the pūrvacūtrā (central line) and the right knee.

(nīkkam – gap;

muḻakkāl – knee)

48. அந்தச் சூத்திரத்தில் நின்றும் நளிகைக்கும் நடுநீக்கம் விரல் பன்னிரண்டு; அன்றியே, பதிமூன்று ஆகிலுமாம்.

(நளிகை - நளகை - நுனி)

From that string, the extremity of right leg will find a place leaving fingers 12; does not matter if it be 13.

(nalikai - Nalakai - tip)

49. பீடத்திற்கு [இடக்காலில்] பார்ஷ்ணிக்கு நடு நீக்கம் விரல் மூன்று ஆவது.

(பார்ஷ்ணி - குதிங்கால்)

The midpoint of heel of left leg must take a spot exactly 3 fingers apart from the central thread aforesaid.

(pārshṇi – heel)

50. அந்தச் சூத்திரத்தில் நின்றும் அபய ஹஸ்தத்தில் மத்தியரேகை யளவாக நீக்கம் விரல் பதினான்கு.

(ஹஸ்தம் - கை)

The central line on palm termed as refuge - giving one, should take a spot 14 fingers apart from the central thread noted whileom.

(hastā – hand).

51. அபய ஹஸ்தத்தின் மத்தியாங்குலியின் அக்கிரம், முலைக்கண்ணுக் கொத்த உயரமாக இருப்பது.

(மத்தியாங்குலி - கையின் நடு விரல்)

The mid finger of the refuge – giving chin should have a breadth on its tip equal to that of the orifice of teat.

(matyāṅguli – middle finger)

52. அந்தச் சூத்திரத்தில் நின்றும், கடக ஹஸ்தத்தில் மத்தியம் மணிபந்தம் நடுவாக நீக்கம் விரல் பதினைந்து.

(மணிபந்தம் - மணிக்கட்டு)

The centre of wrist of the chiro, celebrated as boon – giving, must seek a place exactly 15 fingers away from the central thread spoken of.

(maṇibandam – wrist)

53. ஊருவிற்கும் மணிபந்தத்திற்கும் நடு, நீக்கம் விரல் மூன்று.

The gap between the centre of wrist of left hand and the thigh must be of fingers 3.

54. கடக ஹஸ்தமும், சிம்ம ஹஸ்தமும் சொல்லப்பட்டா நின்றது.

The left chiro marked whileom will be of the forms – kataka hasta or simha hasta.

55. தர்ஜனி முதலாகக் கனிட்டிகை அந்தமாக உள்ள விரல்களெல்லாம் அடியிலே நின்றும் தலையளவாக வளைந்து இருப்பது; அங்குஷ்டம் மேல் வளைந்திருப்பது; இது கடகாகிருதி யென்று பெயராம்.

All the digits, from index one to little, will bend forward, regularly from bottom to tip, while the thumb, backward. This is nothing but kaṭakākiruti.

56. மத்தியாங்குலி அக்கிரம் உள்ளங்கை நடுவளவு கை வளைந்திருப்பது; இப்படி இருப்பது சிம்மக்கர்ணம் என்று பெயராம்.

That position of digits is termed as simhakkarṇā wherein, only the central, while the others are in normal stage, digit should bend forward to touch the palm.

57. ஹிக்காச் சூத்திரமாக இருப்பது, கர்த்தரீ [முத்ரா உச்சியானது]; தர்ஜனி, மத்தியமைகள் மடங்காததாய், உள்ளங்கை நடுவே அளவாக வளையப்பட்டது. அனாமி காங்குஷ்டங்களும், சற்று வளையப்பட்ட கனிஷ்டிகைகளை உடைத்தாய், முற்பட்ச் சொன்ன கர்த்தரிகை விரல் இரண்டு செவ்வையுமாய், அதிசௌந்தரமாக இருக்கிற பஹஸ்தங்களென்று பெயராம்.

(தர்ஜனி - ஆள்காட்டிவிரல்

கனிஷ்டிகை - சுண்டு விரல்

ஹிக்காச் சூத்தரமாக - கழுத்து மட்டம் வரையில்)

Karttarī hand, raised up to the level of neck, having bent the thumb and the ring finger towards palm, keeping the index finger and the mid finger straight, having the little finger slightly bent forward, should render winsome pose.

(tarjani – index finger

kanistikai – little finger

hikkācūtrā – neck – line)

58. முழங்கைக்கும் சுரோணிப் பார்சுவத்திற்கும் நடு நீக்கம் விரல் ஐந்து, ஆறு, ஏழு ஆகிலுமாம்.

(சுரோணி - அடி வயிறு)

Five, 6 or 7 fingers gap must be kept up between the belly and the elbow.

(srōṇi – belly).

59. குட்சி மத்தியத்திலும், நாசாக்கிரத்திலும் பூர்வச் சூத்திரம் ஸ்பரிசித்து இருப்பது.

(குட்சி - அடி வயிறு)

The central thread designed whileom should touch the tip of nose and the centre of belly.

(kukshi – belly).

60. மேட்டிர மூலத்தில் நின்றும், இடங்காலில் குதிக்கும் நடு நீக்கம் விரல் ஆறு.

(மேட்டிர மூலம் - ஆண் குறியின் அடி)

Six fingers distance should be there between the left ankle and the base of penis.

(mētra mūlā – base of penis)

61. அன்றிக்கே, ஏழு, ஐந்து விரலாகிலுமாம்.

Or, 7 or 5 fingers may also be the gap.

62. மத்தியச் சூத்திரத்தில் நின்றும் மௌல்யக்ர மளவாக நடு நீக்கம் விரல் பதினான்கு.

(மௌலி + அக்ரம் = மௌல்யக்ரம்)

நாபி மத்தியத்திற்கும், இடக்கால் நளிகைக்கும் நடு நீக்கம் விரல் பதினான்கு.

Betwixt the extremity of left shank and the centre of navel, the gap must be of fingers 14.

63. அன்றியே, பதிமூன்றரை, பதிமூன்று ஆகிலுமாம்.

Or, 13 ½ or 13 fingers may also be maintained.

64. சுகாசனமானது, செவ்வையா யிருப்பதும், பவள நிறமுமாய், மூன்று கண்ணும், பிரசன்ன வதனமும் இராஜச குணத்தோடுங் கூடிப், புலித்தோலுடை, வெண்பட்டுடை இவற்றையு முடைத்தாயிருப்பது.

Peart, of coral hue, 3 eyed, of grandeur mien, dad in tiger – skin and white silk – is the picture of the pose known as sukācanā.

65. கர்த்தரிகைக விரண்டும் புறம்பே முகமாதல், உள்ளே முகமாதலா யிருப்பது.

The two outer hands can face either inside or outside.

66. வலது புறத்துப் பரஹஸ்தத்துக் கையில் மழுவும், இடதுபுறப் பரஹஸ்தத்துக் கையில் மான்கன்றுமாக இருப்பது. மற்ற பூர்வஹஸ்த இரண்டு கையும் வலக்கை அபயமும், இடக்கை கடகமாதல் சிம்மக் கர்ணமாதல் செய்வான்.

(பூர்வ ஹஸ்தம் - உட்புறக்கை)

Wielding war – axe and deer, respectively, in the right and left outer hands, siva will hold, refuge giving and kaṭaka or simha mudrā, respectively, in the right and left inner hands.

(pūrva hastā – inner hand).

67. இடக்காது, சங்குத் தோடு முடைத்தாய் இருப்பது.

Stud made of conch, must adore the left ear.

68. தோட்டின் அகலம் மூன்று, நான்கு, ஐந்து விரல் ஆகவும், அன்றிக்கே தண்டுக்கொத்த அகலமாகிலுமாம். தோடு வெளி மிகவும் மெல்லிதாக இருப்பது.

Three, 4 or 5 fingers must be breadth of the stud; or, proportionate to the length of stem. The petals of stud will be chiseled thin.

69. வலக்காது, மகர குண்டலமாதல், சிம்ம குண்டலமாதல் செய்வான்.

He would hew fish – shaped or lion – shaped earring for the right ear.

70. குண்டலத்தின் வியாசமும் உயரமும் விரல் மூன்று, நான்கு, ஐந்து ஆகிலுமாம்.

Both the breadth and the height of this earring must be of the measure fingers 3, 4 or 5.

71. யுக்தியினாலே குண்டலத்தைச் செய்து, காதிலே, தோளின் மேலே வைப்பான்.

He would hew the earring quite brilliantly and make it adore the ear above the shoulder.

72. அன்றிக்கே, விருத்தமான குண்டலத்தை இரண்டு கர்ணத்திற்கும் செய்வான். விருத்தக் குண்டலத்தின் விஸ்தாரம் யவை பதினெட்டு.

(விருத்தமான - வட்டமான)

Or, he would carve out two round earrings for two ears keeping the width of the ring as yavās 18.

(viruttamāṉa – round).

73. அதனுடைய துங்கம் விரல் நான்கு; இது கும்பாப்ஜ முகுளம் போல இருப்பது.

(கும்ப + அப்ஜம் = குப்ஜாப்ஜம்)

Looking like either kumba or lotus bud, it will have a height of fingers 4.

74. அன்றிக்கே மற்றும் விருத்தகுண்டலத்தைச் செய்வான்.

Or, he would hew the round earring in some other pattern.

75. ஜடா மகுடமுமாய், அந்த ஜடாமகுடம் இரட்டைச் சடையோடு கூடியிருப்பது.

He will wield hair – crown, jaṭamakut, possessing of two plaits.

76. மகுடோதயம் இருபத்து நான்கு விரல்; பதினெட்டு, இருபத்தொன்று விரல் ஆகிலுமாம். மகுடோச்சம் கேசாந்தத்திலே நின்றும் கொள்ளுவான். அந்த மகுடம் லலாடந்தோடுங் கூடி, மேலின் பரப்பு அந்த விசாலத்தை ஏழு, எட்டு, ஒன்பது செய்து, இதில் ஒரு கூறு குறைந்த அக்கிர விசாலத்தை யுடைத்தாயிருப்பது.

(லலாடம் - நெற்றி)

The hair – crown, jaṭamakut, considered whileom should have a length of 18, 21 or 24 fingers inclusive of the band on forehead. As regards the breadth at crest, it must have 1 part less than the width at bottom when the parts obtained by dividing the breadth of bottom into 7, 8 or 9 divisions.

(lalāṭam – forehead).

77. நான்கு பூரிமத்தோடுங் கூடியிருப்பது; பூரிமோதயம் விரல் பன்னிரண்டு.

(பூரிம + உதயம் = பூரிமோதயம்

பூரிமம் - இலை வடிவில் உள்ள அலங்காரம்)

The crown will be embellished with four leaves – like attachments.

(pūrima + utayam = pūrimotayam

pūrimam – ornament in the shape of leaf).

78. வலது புறத்திலே பாம்பும் எருக்கம் பூவாகிலுமாம், இடது புறத்திலே பாதிப் பிறையுமாகச் செய்வான்.

He would hew at the right of crown, snake and the flower Erukka (calotropis gigantea) while on the left, crescent.

79. அன்றியே, வலது புறத்திலே பிறையும், இடது புறத்திலே பாம்பும் எருக்கம் பூவும் ஆகிலுமாகச் செய்வான்.

Or, he would chisel them vice versa, in regard to sides.

80. கிக்கிரிமானத்தோடுங் கூடின கடிச் சூத்திரத்தை உடைத்தாக இருப்பது. கடிச் சூத்திரத்தில் சங்கியாபி சூத்திரம் பிரதிக்கனம் யவம்!; கடிச் சூத்திரம் மூன்றாய் ஒவ்வொரு யவை கனமுமாய் இருப்பது.

The three – fold waist – thread should have a girth of 1 yavā each.

81. கடிச்சந்தியின் மேல், கடிச் சூத்திரத்தைப் பந்திப்பான்.

The waist – thread should find a place on the waist.

82. கீர்த்திமானனம் விரல் ஐந்து, ஆறு, ஏழு ஆவது.

(கீர்த்திமானனம் - சிங்க முகப்பு)

The lion – head of the waist – thread should have a width of 5, 6 or 7 fingers.

(kīrttimānanam – lion – faced ornament).

83. அது வித்தாரத்தோடொத்த துங்கத்தை உடைத்தாயிருப்பது. இது மேட்ர மூலத்திற்கு மேலே கற்பிக்கப்படும். கடிச் சூத்திரத்திலே நின்றும் ஊருத்தாமம் தொடையில் மூன்றிலொன்று நீளமாயிருப்பது.

The width and height of the lion – head celebrated whileom must be equal. The position of this right above the base of the penis. And the strings full of ornaments from waist should fall on the thigh covering its one third distances from top.

84. இரத்தினங்களோடு கூடியிருக்கிற முத்துமாலைகளை நடுவே உடைத்தாயிருப்பது.

The full determined whileom will be interspersed with pearls and gems connected by strings.

85. கடிச்சூத்திரம் சொல்லிக் கடக வலயம் சொல்லப்படா நின்றது.

Having delineated waist – thread, now kaṭaka valayam, bracelet has been taken up for elucidation.

86. முன்கை, கடகவலயத்தோடு கூடியிருப்பது.

The forehand will wear this bracelet.

87. கனிஷ்டிகையோ டொத்த பரிணாஹத்தை உடைத்தாயிருப்பது.

(பரிணாகம் - கனம்)

This bracelet's thickness is similar to that of little finger.

(pariṇāham – thickness).

88. அன்றியே, வலயத்தினுடைய கனம் யவை மூன்று, இரண்டு ஆகிலுமாம்.

Or, the bracelet's thickness may be of yavās 2 or 3.

89. ஒற்றித்த வலயத்தை முன்கையிலே கற்பிப்பான்.

The bracelet will be, on the forehand, somewhat thick one.

(orritta – gripped).

90. அன்றியே, மிருதுவாக இரத்தின பந்தங்களுமாகச் செய்கிற வலயங்களுமாம்.

Or, this armlet may be made as a nice one embellished with gems.

91. வலயத்தோடொத்த கனத்தை உடைத்தாய்க் கேயூரத்தை முழங்கையிலே செய்வான்.

(கேயூரம் - மேற்கையில் அணியும் வளை)

He would make on the upper arm a ring popularly known as kēyūra whose girth resembles that of bracelet described ante.

(kēyūram – ring on upper arm).

92. கேயூரம் ஏழிதழான பத்மத்தோடே கூடியிருப்பது.

The kēyūrā, ring on upper arm often shines with 7 petals.

93. பாகு மத்தியத்திலே பத்திரப் பூரிமத்தைச் செய்வான்.

He would make the kēyūrā talked about whileom embellished with leaf – looking ornamental addition.

94. பத்திரப் பூரிமத்தில் நாளம் கேயூரசத்ருசத்தோ டொத்து இருப்பது.

(நாளம் - தண்டு)

The stalk of the pattirap pūrimā, leaf – like addition must receive a girth similar to that of the kēyūrā ring.

(nāḷam – stalk).

95. அந்தப் பூரிமத்தின் நாள வியாசம் பாகுமமாவது.

(வியாசம் - அகலம்; நாளத்தின் நீளம்)

Equal to the breadth of the upper arm will be the total length of the stalk of kēyūrā.

(viyācā – breadth; length of stalk).

96. அன்றியே, பத்திரப் பூரிம விஸ்தாரம் விரல் மூன்று, நான்கு, ஐந்து ஆகிலுமாம்.

Or, the width of the pattirap pūrimā, leaf – resembling attachment should be of 3, 4 or 5 fingers.

97. அதனுடைய துங்கமானம் அகலத்தில் ஒன்றரை, ஒன்றேமுக்கால், இரண்டு ஆதல் உயரங் கொள்வான். இது பாகு வலய மென்று பெயராம்.

One and a half or 1 ¾ or 2 times the breadth of kēyūrā will be the height of this self – same ornament which attains the nomenclature, Bāhuvalayā.

98. மத்தியமை விரல் ஒழிய நின்ற விரல்களெல்லாம் மோதிரங்களோடே கூடியிருப்பது.

The fingers all, barring the mid one, will be bejeweled with peart rings.

99. ஆயத விருத்தங்களுமாய்க் கனங்களோடும் கூடியிருக்கிற மோதிரங்களோடு, அடியில் பர்வங்களிலே இடப்பட்டிருப்பது.

These rings, worn between the first two joints from nadir, in fingers, must having conspicuous breadth and weight.

100. உதரப்பந்த விசாலம் விரல் ஒன்று, இரண்டு, மூன்று அகலமாவது. இதன் கனம் யவை ஒன்று, இரண்டு, மூன்று; நானா இரத்தினங்களாலும் நானா அலங்காரங்களாலும் செய்யப்பட்டது. உதரப் பந்தத்தை உதரத்திற்கு மேலே மூன்று அங்குலம் விட்டு, உதரப் பந்தத்தை பந்திப்பான்.

(நானா - பலவித; உதரம் - வயிறு)

The band around stomach, to be fixed 3 angulās above the this organ, an ornamented one with gems, should have a width of 1, 2 or 3 fingers.

(nānā – various; utarā – stomach).

101. காலின் நடுவிரல் ஒழிய, மற்ற விரல்கள் மோதிரத்தோடுங் கூடியிருப்பது.

All toes, save middle one, will be beseemed with rings.

102. மோதிரங்கள் யவை ஒன்றரை, இரண்டு; மோதிரங்கள், விரல்களில், நடுவிலே இடப்பட்டது.

The rings, adorning the mid portion of toes, must have a diameter of 1 ½ or 2 yavās.

103. கால்கள், குல்பத்திற்குக் கீழே இடப்பட்ட சதங்கைகளை உடைத்தாயிருப்பது.

(குல்பம் - பரடு)

A string of tiny bells will adore the feet below the ankle.

(kulpam – ankle).

104. சதங்கைகளைக் கட்டுகிற சூத்திரத்திற்குக் கனம் யவை இரண்டு.

(சூத்திரம் - கயிறு)

The thickness of the pendent bearing the bells, must be of yavās 2.

(sūtrā – string)

105. அந்தச் சூத்திரத்தில் நின்றும் சதங்கைத் தொங்கல் யவை [மூன்று அல்லது ஐந்து].

(வடமொழி மூலத்தில் "திரிபஞ்ச" என்பதற்குச் சுவடியில் 3 x 5 = 15 என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது; "3 அல்லது 5" என்று பொருள் கொள்ளுவதே பொருத்தமாகும்)

The bell cluster, hanging from the cord must possess a height of 3 or 5 yavās.

(For the Sanskrit text "tripañca", it has been interpreted in Tamil exposition as 3 x 5 = 15; but "3 or 5" may be the correct sense).

106. சதங்கை நாளம் யவை மூன்று; நின்றது, சதங்கையின் உயரமாவது.

The stem of the bell alone must constitute a height of yavās 3 while the rest of bell, 2 yavās.

107. அதனுடைய உயரத்திற் கொத்த பரப்பாவது.

The bell will have height and width in an equal measure.

108. விருத்தமாய், உள்ளே கல்லோடுங் கூடியிருப்பது.

The bell, in round shape, will have stone inside.

109. மழுவின் தீர்க்ககமும், மான் கன்றின் தீர்க்கமும் விரல் பன்னிரண்டு.

The war – axe and the deer should have a height of fingers 12.

110. மானும் மழுவும் யுக்தியினாலே நன்றாகச் செய்வான்.

He would hew the deer and war – axe with utmost care and intelligence according to his ratiocination.

111. எட்டு யவை கனத்தோடு கூடியிருக்கிற யக்ஞோபவீதமாக இருப்பது.

The sacred thread yagnopavītā will have diameter of yavās 8.

112. உபவீதமும், மூன்று சூத்திரத்தோடு கூடியிருப்பது; இது உரச் சூத்திரத்தோடுங் கூடியிருப்பது.

(உரகம் - வயிறு)

The sacred thread, seen whileom, must be of a three – core cord touching the band running around stomach.

(urakam – stomach).

113. ஊருச் சூத்திர மொன்றுமாம்; உபவீதக் கனத்தோ டொத்து மிருப்பது.

The two cords, namely ūru sūtrā and upavītā, resemble each other in girth.

114. யக்ஞச் சூத்திரத்தை இடத்தோளிலே இட்டு, நாபிக்குக் கீழே மூன்று அங்குலம் தாழ நீளதாய் நிரவி, முன் வலப்புறத்திலேயுமாய் அபரப்பார்சுவத்தை வியாபித்து இருப்பது. யக்ஞோபவீதம் இப்படிச் சொல்லிச் சன்னவீரஞ் சொல்லப்படா நின்றது.

(பார்சுவம் - பக்கம்)

Another cord called yagñnasūtrā should adorn on left shoulder which will run below the right side of navel to a distance of 3 angulās . Having sketched the yagñōpavīta thus, now cannavīrā is taken up.

(pārcuvam – side).

115. யக்ஞோபவீதம் போல இரண்டு ஸ்கந்தத்தோடு, சுரோணிக்கு மேல் இரண்டு பார்சுவத்தோடு ஸ்தனாந்தரத்திலே ஒன்றாக லம்பிப்பான்.

(லம்பிப்பான் - தொங்க விடுவான்)

Just like yagñōpavīta, he would dangle the cannavīrā, two in number, from both the shoulders which will touch the sides of breasts, and remain above the belly.

(lambippān – he would make it to dangle).

116. ஹிக்காச் சூத்திரத்திற்குக் கீழே ஆறு அங்குலமாக விடப்பட்டு இருப்பதாய், நான்கு விரல் [அகலமுமாய்], மூன்று யவை கனத்தையுடைத்தாய், நானாவிதமான இரத்தினங்களினாலும் பொன்னாலும் செய்யப்பட்டுச் சுந்தரமாயிருக்கிற ஆரம் கழுத்திலே இருப்பது.

(ஆரம் - மாலை)

A garland of gold, necklace, beseemed with gems, will adorn his neck, hanging six aṇgulās below chest, having 4 fingers wide and 3 yavās thick.

(āram – garland)

117. ஹிக்காச் சூத்திரத்திற்கு மேலாக [உபக்கிரீவத்தைப்] பூட்டுவான்.

The upagrīvā should bedeck on the collar – bone.

118. உருத்திராட்ச மாதல், பொன்மணி யாதல், இரத்தின மாதல் இவற்றாலே சமைக்கப்பட்டிருக்கிற உபக்கிரீவ மென்று பெயராம். பின்பு, இருதயமாலை சொல்லப்படா நின்றது.

That gold garland is called upagrīvā which is prepared bedecked with gems, gold beads and rudrākshā. Thereupon, Hrdaya garland has been illuminated.

119. [கழுத்திலே] நின்றும் உதரப் பந்தமாக நாண விடுகிற உருத்திராட்ச மாலையே இருதயமாலை யென்று பெயராம். இனி, ஸ்கந்தமாலை சொல்லப்படா நின்றது.

(நாண - தொங்க)

That Akshamālā which is allowed to dongle on the neck up to the stomach is termed as Hydaya garland. Thereupon, skanta garland has been profiled.

(nāṇa – to dangle).

120. நானாவிதமான புஷ்பங்களினாலே அலங்கரித்து, ஸ்கந்தத்திலே நின்றும் நாண விடுகிறது ஸ்கந்தமாலை யென்று பெயராம்.

Skantamālā is nothing but the garland bedecked with variegated fragrant flowers allowed to adorn from the shoulder.

121. சுகாசனமான தேவனை [இப்படிச் செய்து] நின்றது, யுக்தியினாலே செய்வான்.

Hewing thus the Sukācana murthy, he would execute the rest using his stratagem.

122. இப்படிச் சுகாசனம் சொல்லிச் சோமாஸ்கந்தர் சொல்லப்படா நின்றது.

Sukācanā thus propounded somāskandā has been now taken up for exegesis.

7. சோமஸ்கந்த விதானம்

123. சுகாசனத் தேவனைப் போலச் சோமாஸ்கந்தரையும் செய்வான்.

As in the case of Sukācana dēvā, the sanctuary would hew the idol, Somāskantā.

124. தேவனுக்கு இடப்புறத்திலே, ஓராசனத்திலே, பார்வதியைச் செய்வான்.

The statue Pārvati will find a place left to Dēvā, on a seat.

125. வலக்காலை மடித்து, இடக்காலை நாணவிட்டு, ஆசனத்திற்கு மேல், மேட்டிரத்திற்குக் கீழ், நான்கு அங்குலமாவது உடம்போடு கூடியிருப்பது.

She will keep her right shank folded on the seat while allowing the left to dangle down. Her female organ must measure a height of 4 angulās above seat.

126. தேவனை ஆச்ரயிக்கப்பட்ட முகமும் பங்கத்தோடுங் கூடியிருப்பது.

(பங்கத்தோடு - சாய்வோடு)

Her countenance will be slightly skewed towards that of Sivā.

(bangattōṯu – slanting)

127. இடக்கை வரதமும், வலக்கை உத்பலம் பிடித்ததாகவும் செய்வான்.

(உத்பலம் - குவளைப்பூ)

The statuary would hew her in such a fashion that her right hand will wield a dark lily and left one, boon – giving.

(utpalam – dark lily)

128. எல்லா விரல்களும் சிறிது வளைந்து, இடது கைத்தலத்து மேல் வளைந்து வரதமென்று சொல்லப்படுவது; வலக்கை, பூ பிடித்ததாகவும் சிம்மக் கர்ணமாகவும் செய்வான்.

All her fingers in the boon – rendering hand should bend forward while her right, holding the dark lily, display the mudrā simhakkarṇā.

129. பயிர் நுனிபோலே இருக்கிற நிறத்தை யுடைத்தாயச், சர்வாபரண பூஷிதையு முடைத்தாயிருப்பது.

Having a complexion having a propinquity with that of the tip of corn, she will receive all sorts of ornaments on her person.

130. சிவந்த புடவையும், சன்னவீரத்தோடுங் கூடியிருப்பது.

The aforesaid idol will shine with red silk saree and cannavīrā.

131. மேலும் ஒரு பிரகாரத்தினாலே தேவியினுடைய பங்கம் சொல்லப்படா நின்றது.

As a quid pro quo, another mode her also been declaimed to chisel the idol of Devi.

132. இடத்துடைக்குப் புறமே, இடது கைத்தலத்தை வைப்பான்.

The statuary would keep her left hand adjacent to her left thigh outwardly on the seat.

133. முன்போல, வலக்கை உத்பலத்தோடு கூடியிருப்பது.

As seen whileom, the right hand will be wielding a black lily.

134. பீடத்திலே நின்றும் வலது ஜானுவை விட சற்றே உயர்ந்திருக்கச் செய்வான்.

Her right hand should stick out above her right knee.

135. பீடத்திற்கும் முழங்காலிற்கும் நீக்கம் விரல் மூன்று, நான்கு, ஐந்து ஆகிலுமாம்.

The bee – line betwixt Deva and the knee of Devi must be of with 3, 4 or 5 fingers.

136. அன்றியே, ஆறு ஏழு நீக்கமாகிலுமாம்.

Or, 6 or 7 fingers are acceptable.

137. இப்படி இரண்டு விதமாகத் தேவியினுடைய பங்கம் சொல்லப்பட்டது.

In this manner, Devi's posture has been declaimed in two types.

138. ஸ்த்ரீமானம் சொன்னாற்போல, தேவிமானத்தைச் செய்வான்.

For measures, the statuary would follow those advocated for lady – idols formerly.

139. நின்ற தேவனுக்கு, நின்ற நாச்சியாராகச் செய்வான்.

In regard to the standing Deva, the statuary would construct the Devi also as standing.

140. இருந்த தேவருக்கு, இருந்த தேவியாகச் செய்வான் மாறிச் செய்தால் விபத்துண்டாம்.

When dealing with the sitting Deva, the hewer would hew the Devi also in sitting pose; contradiction of these norms will fetch accident.

141. இப்படித், தேவிலட்சணஞ் சொல்லி, ஸ்கந்தலட்சணம் சொல்லப்படா நின்றது.

Devi's characteristics as regards her idol thus recounted, thereafter the technicalities to chisel Skantā has been announced.

142. தேவிக்கும், தேவனுக்கும் நடுவே ஸ்கந்தனை ஸ்தாபிப்பான்.

Skanta will be established in between Dēvā and Dēvi.

143. தேவியினுடைய ஹிக்காவசானம் ஸ்கந்தர் உயரம் உத்தமம்; ஸ்தனாந்தமானது ஸ்கந்தபிரமாணம் ஹீனப்பிரமாணமாம். இவை யிரண்டிற்கும் நடுவே எட்டுச் செய்ய, ஒன்பது பேதமாம். இது உத்தமாதித் திரயங்களாக ஒன்பது பேதமாம்.

(உத்தமாதித்திரயம் - உத்தமம், மத்தியம், கடைநிலை)

Tiptop variety of skantā icon will be received if His height is kept up to the neck level of Dēvi; if his height is only up to her breast, then his variety will be one of lower tippe. Having divided the intermediate measure into 8 parts, one will get 9 varieties of icons of skantā, when he is hewn with a measure adding 1 part thereof in his height every time. Among these 9, the first three kinds are of the first water; the next three, second quality and the last three, last quality.

(uttamātittirayam – first, second and third varieties).

144. ஜாத்யம்சம் கூட்டிக் கொள்ளலுமாம்; அது கூட்டாமல் கொள்ளலுமாம்.

In all the measured seen whileom, jātyamsā can be added; no harm, if not added.

145. அந்த உத்தமாதியான ஒன்பது பிரமாணத்திலே, யாது ஒன்று கொள்ளப்பட்ட உயரத்தை அறுபத்தி நான்கு செய்து, இதிலே ஒரு கூறுக்கு விரலென்று பெயராம்; இதில் எட்டில் ஒன்றுக்கு யவை யென்று பெயராம்.

(பிரமாணம் - அளவு)

Having divided the height, any one among the 9 noted whileom, of skantā into 64 parts, 1 part thereof is assigned the name 'finger'; 1/8 of this finger is termed as 1 'yavā'.

(pramāṇam – measure).

146. சிரோமானம் விரல் ஒன்று; கேசாந்தம் விரல் ஒன்று.

His crest should measure out to be finger one 3 while the hair up to the extremity from zenith aforesaid should have a length of finger 1.

147. நேத்திரச் சூத்திராந்தம் விரல் இரண்டு; புடாந்தம் விரல் இரண்டு.

The bee – line betwixt the extremity of hair and the eye – line must be fingers 2 when the gap betwixt the eye-line and the nose – tip should measure out to be finger 2.

148. [ஹனுச்] சீமாந்தம் விரல் மூன்று; கிரீவோச்சம் விரல் மூன்று.

(கிரீவ + உச்சம் = கிரீவோச்சம்;

கிரீவம் - கழுத்து)

From the last mentioned point, the chin will find a location after fingers 3 and from there, the neck, fingers 3.

(grīva + uccam = grīvoccam

grīvam-neck.

149. ஹிக்கையில் நின்றும், ஸ்தனாந்தம் விரல் ஒன்று.

Betwixt the base of neck and the lower extremity of breast, the distance must be finger 1 .

150. ஸ்தனாந்தத்திலே நின்றும், நாபி யளவாக விரல் எட்டு.

(நாபி - தொப்புள்)

The bee – line betwixt the lower extremity of breast, aforesaid, and the navel, must be of fingers 8.

(nābi – navel).

151. நாபியிலே நின்றும், மேட்டிர மூலாந்தமளவாக விரல் ஏழு.

Betwixt the pecker's base and the navel, we must keep a distance of fingers 7.

152. ஊருத் தீர்க்கம் விரல் பன்னிரண்டு; ஜானுத் தீர்க்கம் விரல் இரண்டு.

The full length of the thigh should constitute fingers 12 while that of knee, fingers 2.

153. ஜங்காத் தீர்க்கம் விரல் பன்னிரண்டு; தலோச்சம் விரல் இரண்டு.

(தல + உச்சம் = தலோச்சம்; தலம் - பாதம்)

The total height of the calf should be of fingers 12 while that of foot, fingers 2.

(tala + uccam = talōccam; talam – foot).

154. தலாயாமம் விரல் பத்து; பாகுத் தீர்க்கம் விரல் பதினான்கு.

(தல + யாமம் = தலயாமம்; யாமம் - நீளம்)

The foots length must be of fingers 10 when the upper arm's one, 14.

(tala + yāmam = talāyāmam; yāmam – length).

155. முன்னங்கை நீளம் விரல் பத்து; கரதலம் விரல் நான்கு.

Ten fingers length is necessary to hew the forehand while 4 fingers to palm.

156. மைய விரல் நான்கு; அனாமிகை நீளம் விரல் மூன்றரை.

The mid finger and the ring finger should keep length, in order, 4 and 3 ½ fingers.

157. தர்ஜனித் தீர்க்கம் விரல் மூன்றரை; கனிஷ்டிகாத் தீர்க்கம் விரல் மூன்று.

Three and a half fingers constitute the length of index – finger, while 3 fingers, the little one.

158. அங்குஷ்டா யாமம் விரல் மூன்று; தல விஸ்தாரம் விரல் நான்கு.

(தலம் - உள்ளங்கை)

Three fingers length will make the contour of thumb while, 4 will, the breadth of palm.

(talam – palm)

159. மணி பந்தம், விரல் மூன்று; முழங்கை விரல் நான்கு.

The breadth of wrist and that elbow need respectively, to form, fingers 3 and 4.

160. பாகு மூலம் விரல் ஐந்து.

At the upper end of upper arm, the breadth must be of fingers 5.

161 முக வியாசம் விரல் எட்டரை; கண்ட விஸ்தாரம் விரல் ஏழு.

(கண்டம் - கழுத்து)

Both the countenance and the neck must have a breadth of, respectively, fingers 8 ½ and 7.

(kanṭam – neck).

162. கட்சாந்தரம் விரல் பதிமூன்று; ஹிருதய விஸ்தாரம் விரல் பன்னிரண்டு; மத்திய விஸ்தாரம் விரல் பதினொன்று.

Betwixt the two butt – ends, up to the arm pits, of chest, the distance must be fingers 13; the total length of chest alone should be fingers 12 while its centre breadth, 11 fingers.

163. சுரோணி விஸ்தாரம் விரல் பன்னிரண்டு; கடிஸ்தான விஸ்தாரம் விரல் பதிமூன்று.

(கடி - இடுப்பு)

The belly must have a width of fingers 12 while the hip, 13.

(kaṭi – hip).

164. ஊருமூலம் விரல் எட்டு.

At the top of thigh, the breadth must be of fingers 8.

165. ஜானு விஸ்தாரம் விரல் ஆறு; கணுக்காலடிப்பரப்பு விரல் நான்கு.

(கணுக்கால் - கண்டைக்கால்)

Six fingers width is required to set the breadth of knee while 4, to that of calf.

(kanukkāl – calf).

166. கணுக்கால் முடிவு விஸ்தாரம் விரல் மூன்று; தல விஸ்தாரம் விரல் ஆறு.

(தலம் - உள்ளங்கால்)

The calf at its bottom must have a width of fingers 3, while the sole should receive a length equal to fingers 6.

(talam – sole)

167. பார்ஷ்ணி வியாசம் விரல் நான்கு; நின்றது, யுக்தியினாலே கற்பிப்பான்.

(பார்ஷ்ணி - குதிங்கால்)

The heel will have a width of fingers 4; and the rest, he would hew utilising his stratagem.

(pārshṇi – heel).

168. கேசாந்தத்திலே நின்றும் நாசிகங் கூடத்தோடே கூடியிருப்பது.

The bee – line crown on his head will be with a nāsikā, a protruding member.

169. இரண்டு கையும் பூப்பிடித்ததாதல் அன்றியே இடக்கை வரதமாதல் செய்வான்.

Skantā's hands twin should wield flowers or His left hand should wield a boon – giving gesture.

170. இடக்கை அன்றியே, கடகமாதல், சிம்மகர்ணமாதல் செய்வான்.

Or, the statuary would sculpt His left hand rendering either kaṭakā or simhakarṇā mudrā.

171. வலக்கை பூப்பிடித்தும், இடக்கை விளாம்பழமாதல், மாம்பழமாதலாம்.

Or, His right hand wielding a flower while left are holding either wood – apple or mango.

172. மோதிரம், உபக்கிரீவ முதலான எல்லா ஆபரணங்களோடுங் கூடியிருப்பது.

(உபக்கிரீவம் - மார்பு மட்டத்திற்கு மேலே தொங்கும் மாலை)

He will dazzle with all sorts of jewels inclusive of ring and garland above the chest level.

(upakrīvā - garland above the chest level)

173. கடிச்சூத்திரந் தரித்து, நக்கினமாய்ச் சன்னவீரத்தோடுங் கூடியிருப்பது.

(நக்கினம் - அம்மணம்)

Somaskantā will show his posture donning no attire and bejeweled with cannavīrā, two cross – garlands.

(nakkinam - without attire)

174. இருந்ததாதல், நின்றதாதல், நிருத்தமாதல் செய்வான்.

(நிருத்தம் - நடனம்)

Skantā may render his posture as either sitting, standing or dancing.

(nrttam – dance).

175. இருந்ததாகில், இரு கால்களையும் விஷ்டரத்தின் மேலே கிடத்துவான்.

(விஷ்டரம் - ஆசனம்)

If the posture is sitting one, the artificer would make the legs twin to rest on the seat.

(vishtram – seat)

176. நின்றதாகில், இரண்டு உள்ளடியும் சமமாக நின்றதாகக் கற்பிப்பான்.

(உள்ளடி - உள்ளங்கால்)

If he is standing, His soles twin should rest on firmly without skewing.

(ullaṭi – sole).

177. குஞ்சிதமான கால்களாகில், முழந்தாளிற்கு நடு நீவ்ரம் யுக்தியினாலே செய்வான்.

(குஞ்சிதம் - வளைவு)

If the legs were to skew, the limner would maintain the gap betwixt the knees twin using his artifice.

(kunjitam - skew)

178. இரண்டு காலும் குஞ்சிதமாய், சிறிது நடந்ததாகச் செய்வான்.

The legs twin should be skewing in such a way as if he started walking.

179. ஆடினதாகில், வலக்காலை நின்றதாகவும், சிறிது வளைந்ததாகவும் செய்வான்.

If he were to dance, His right leg should render a slightly skewed pose.

180. மற்றைய கால், ஏழு, ஆறு, ஐந்து விரலளவும் பீடத்திலே நின்று எடுத்ததாகச் செய்வான்.

He should lift the next leg, above seat, up to a height equal to 7, 6 or 5 fingers.

181. வரதமான கை பழங்களைப் பிடிக்கக் கொள்ளலுமாம்; இடக்கை, பழமன்றியே இருக்கில் நீட்டினதாகச் செய்கிலுமாம்

Somaskantā's boon – giving hand may, also, hold fruits, while his left one can remain without fruit stretched straight.

182. லம்பச் சூத்திரம் நிருத்த மூர்த்தி போலச் செய்வான்.

(நிருத்த மூர்த்தி - நடராசன்)

As regards the lambasūtrā, the central thread, the limner would design it as in the case of Nrttamūrthy, Natarājā.

(Nrttamūrthy – Natarājā).

183. சோமாஸ்ந்தர் இப்படிச் சொல்லிச், சந்திரசேகரன் சொல்லப்படா நின்றது.

Somaskantā thus descanted, chandrasēkarā has been now taken up for dilation.

8. சந்திரசேகர மூர்த்தி

184. அனந்தரம் சந்திரசேகரம் சொல்லப்படா நின்றது.

Thereupon, Chandrasēkarā has been expounded.

185. கௌரி [ரகிதம்] கேவலம், சகஜம் நாச்சியார் கூட.

(கேவலம் - தனியாக இருப்பது; ரகிதம் - இல்லாமல் சகஜம் - சேர்ந்திருப்பது)

When he be alone, he will attain the nomenclature, kēvala while with Devi, the name, Kauri sahitā.

(kēvalam – alone rahitam – without cakajam – along with).

186. தேவரும் தேவியும் ஒவ்வொரு கையினால் கட்டினது ஆலிங்கமென்று பெயராம்.

(ஆலிங்கம் - தழுவுதல்)

When the Dēvā and Dēvi remain contiguously embracing each other with one hand of each.

(āliṅgā – embrace)

187. இப்படி, மூன்று விதம் அறிவான்!

The limner would take note of, thus, 3 varieties.

188. கேவலம் சம பாதஸ்தானமாவது; கௌரிசகிதமானதும் அப்படிக் கற்பிப்பான். ஆலிங்கத்தைச் சமபங்கமாதல் அதிபங்கமாதல் செய்வான்.

(வடமொழி மூலத்தில், "கௌரிசகிதமானது ஸ்தானகம்" என்றே உள்ளது; மேலே தரப்பட்டுள்ள சுவடித் தமிழுரை திருத்தத்திற்கு உரியது)

The 'alone' posture consisting of standing with firm and straight feet while 'along with Devi' should follow suit. In the embracing situation, they should either stand straight or slightly skewed.

(In the Sanskrit text, in leaf, for 'along with Devi' only sitting pose has been advocated. Hence the above manuscript Tamil version needs little correction).

189. கேவலம் முக்தியைக் கொடுக்கும்; சகஜம் புக்திமுக்தியைக் கொடுக்கும்; ஆலிங்கம் சர்வ காமத்தையும் கொடுக்கும்.

(காமம் - விருப்பம்)

The solitary lord will furnish salvation while along with consort, refuge. The embracing lord will make all wishes consummated.

190. அவை மூன்றிலும் முற்பாடு சமபாதமாக நின்றது சொல்லப்படா நின்றது.

In these three, firstly, standing erect posture was articulated.

191. எல்லாப் பிம்போதயம் முன்னே சொல்லப்பட்டது.

(பிம்ப + உதயம் = பிம்போதயம்)

All the needed measurements in regard to the idol were exegetically mentioned whileom.

(bimba + utayam = bimbōtayam)

192. லம்பமானமும் உபமானமும் இப்பொழுது சொல்லப்படா நின்றது.

Thereafter, the thread measurements and related measures are being put forth.

193. பிரலம்பப் பலகை நீளம் விரல் நாற்பத்தியொன்றரை; தாரம் விரல் பதினெட்டு; கனம் விரல் ஒன்றரை ஆதலாம்.

(தாரம் - அகலம்)

The supporting plank, 'pralamba palakai' must have a length of fingers one and a half and forty while breadth 18 and thickness 1 1/2.

(tāram – breadth)

194. பிரதிமோட்சத்தின் மேலே இருபத்தியேழு விரல் அதிகமாகிக், கால் நான்கு கூடின பலகையை நிலமொத்த விட்டத்திலே வைப்பான்.

The limner would construct the pralamba plank such that its length be 27 fingers in excess than that of the contour of the idol, and it should stand on four legs over an even ground.

195. பிரலம்பப் பலகையின் மேல், சீமாச் சூத்திரத்தை நிச்சயித்து, முன்னும் பின்னும் பார்சுவத்திலும் மானசூத்திரத்தைச் செய்வான்.

The stone – cutter would make 5 threads – one is sīmaccūtrā, another is māna sūtrā; the former from the plank above and the latter on four sides to dangle.

196. அந்த அந்த இலக்குகளிலே துளையைக் கற்பித்துச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The statuary would arrange the pendents by making holes at the suitable spots.

197. அந்தச் சூத்திரத்திற்கு அனுசாரியாயப் பிம்பங்களைச் செய்வான்.

The mason would consummate the contours following these pendents.

198. முன்னும் பின்னும் பார்சுவத்திலுமாய், ஆயத்திலும் விட்டுச் சஞ்சரிக்கிற சூத்திரம் ஐந்தும் பிரம்மச்சூத்திரம் என்று பெயராம்.

The 5 pendents noted while on are nothing but the so called Brahmaccūtrā.

199. கட்சாந்தரத்திலும் முகாந்தத்திலும் இரண்டு சூத்திரத்தை விடுவான்.

The artificer would make two pendents to fall through the centre of arm pit and that of countenance.

200. இப்படி ஒன்பது சூத்திரத்தோடுங் கூடியிருக்கவேணும்; ஸ்தானகமாகிலும் ஆசனமாகிலும் பார்ப்பான்.

Likewise, 9 pendents are needed to make the contour, be it a standing or sitting posture.

201. மௌலி மத்தியத்திற்கும், லலாட மத்தியத்திற்கும், நாசாக்கிர மத்தியத்திற்கும், ஹன்வந்த மத்தியத்திற்கும், ஹிக்கா மத்தியத்திற்கும், மேட்டிர மத்தியத்திற்கும், ஊரு மத்தியத்திற்கும், பாதங்களுடைய மத்தியத்திற்கும், நடுவாகப் பூர்வச்சூத்திரத்தை லம்பிப்பான். அபரச் சூத்திரஞ் சொல்லப்பட்டா நின்றது.

(அபரம் - பின்பக்கம்)

The artisan would make the pendent to dangle through – the centre of head, the centre of forehead, the mid tip of nose, the middle of chin, the centre of the reproductive organ, the mid line between thighs and betwixt the feet, called Pūrvaccūtrā. Thereupon the pendent at the back is recounted.

(aparam –back side).

202. மகுடம், பிடரிக்குழி, கழுத்து, முதுகுத்தண்டு, ஸ்பிக் பிண்டம், ஊறு, ஜானு, பார்ஷ்ணி இவற்றிற்கு நடுவே அபரச்சூத்திரத்தை லம்பிப்பான்.

The limner would dangle the Aparaccūtrā behind the contour so that it should pass through – the centre of crown, the centre of nape, the mid line of spinal cord, betwixt the buttocks, between the 2 thighs, in between the 2 knees and heels.

203. கர்ணப் பால்யத்திலும், கிரீவா மத்தியத்திலும், பாகு மத்தியத்திலும், குல்ப மத்தியத்திலும், பார்சுவச் சூத்திரத்தை லம்பிப்பான்.

(பார்சுவம் - பக்கம்)

The artificer would pass the Pārawachūtrā through the rim of the ear, through the centre of the side – neck, through the middle of the upper arm and through the centre point on the root of ankle.

(pārsuvam – side)

204 தேக மத்தியத்திலும் லம்பிக்கிற சூத்திரத்தோடொக்க, பஞ்ச சூத்திரமென்று சொல்லப்பட்டா நின்றது.

(பஞ்சசூத்திரம் - முன்பக்கம், பின்பக்கம், வலது கைப்பக்கம், இடது கைப்பக்கம், உடம்பின் நடு வழியே செல்பவை)

These are celebrated as Pañcacūtrā which, all the five, pass through the centre of body.

(Pañcacūtrā – front side, rear side, right hand side, left hand side and the centre of body through which the 5 threads will pass)

205. முகப் பார்சுவங்களிலும், முலைக் கண்ணிலே ஸ்பரிசித்துக் காலிற்கு நடுச்சென்று, பிரதேசினிக்கு நடுவே விழுவது.

Threads will be passing over the two checks, two teats and centers of two feet.

206. துடை, முழங்கால் இவற்றினுடைய சீமாந்தத்திலும், பார்ஷ்ணிகளுடைய அந்தத்திலும், கட்ச மத்யத்திலும், கடிப் பார்சுவத்திலும், இவற்றிற்கு நடு, சூத்திரத்தை லம்பிப்பான்.

The stone – cutter would dangle thread which will pass through the centre of arm pit, centre of hip, centre of the side of thigh, and the outer edge of heel.

207. பூர்வச் சூத்திரத்தில் நின்றும் மௌலியக்ரம் விரல் ஆறு.

(அக்ரம் - நுனி)

Betwixt the Pūrvaccūtrā and the centre of the front side of crown be fingers 6.

(akram – end)

208. பூர்வச் சூத்திரத்திலே நின்றும் லலாடாந்தமாக விரல் இரண்டு.

The bee – line betwixt the centre of forehead and the Pūrvaccūtrā should be equal to fingers 2.

209. அபரச் சூத்திரத்தில் நின்றும் தலையின் பின்புறத்திற்கு நீக்கம் விரல் மூன்றேமுக்கால்.

The gap between the Aparaccūtrā and the back of head must be fingers 3 ¾.

210. பூர்வச் சூத்திரத்தில் நின்று ஹன்வந்தம் விரல் நீக்கம் இரண்டு, யவை ஒன்று.

Fingers 2 and yava 1 will separate the Pūrvaccūtrā and the chin.

211. அபரச் சூத்திரத்திற்கும் கிரகாடிக்கும் நடு நீக்கம் யவை குறைய விரல் இரண்டு.

Betwixt the nape and the thread dangling back side of body, the gap should be 1 7/8 fingers.

212. பூர்வச் சூத்திரத்தில் நின்று ஹிக்காந்தம் நீக்கம் விரல் ஆறு.

The bee – line between the Pūrvaccūtrā and the hikkā, base of the neck, must have a distance of fingers 6.

213. கருவிற்கும் [பரச்] சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் யவை பதினாறு.

(கரு - தோளும் கழுத்தும் இணையும் பொருத்து, பின்புறமாக)

In between the 'Kaku' and the Aparaccūtrā, the gap must be of yavās 16.

(kaku – the joining spot of neck and shoulder).

214. பூர்வச் சூத்திரத்தில் நின்றும் உரசிற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டு; பூர்வச் சூத்திரத்திற்கும் பாகுச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டு.

(உரசு - மார்பு)

The distance between the Pūrvaccūtrā and the chest should be fingers 2 that between the same and the Bāhuccūtrā must be of, again, fingers 2.

(uracu – chest).

215. பூர்வச் சூத்திரம், உதர மத்தியத்தை ஸ்பரிசித்து இருப்பது; அபரச் சூத்திரம் நடு முதுகை ஸ்பரிசித்து இருப்பது.

The Pūrvaccūtrā will be touching the centre of stomach while the Aparā one, the centre of back.

216. முதுகுத் தண்டுக் குழிக்கும் அபரச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் ஏழே முக்கால்.

The pit of back-bone will be designed at distance of fingers 7 3/4 from the Aparaccūtrā.

217. பூர்வச் சூத்திரத்திற்கும் நாபி மத்தியத்திற்கும் நடு, நீக்கம் விரல் ஒன்றரை.

The centre of navel should be chiseled at a distance of fingers 1 ½ from the thread known as Pūrvaccūtrā.

218. நாபிக்குத் தொழுத் தண்டுக்கும், அபரச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டரை.

The point right opposite to the navel, on the back, and the Aparaccūtrā should be separated by a gap of, exactly, fingers 2 ½.

219. பூர்வச் சூத்திரத்திற்கும், மேட்டிர மூலத்திற்கும் நடு, நீக்கம் விரல் மூன்று.

The base of the reproductive organ should fall after a gap of fingers 3 from the Pūrvaccūtrā.

220. அந்த நூலிற்கும் ஒத்த முதுகிற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டு.

(அந்த நூல் என்பது பிருட்ட சூத்திரத்தைக் குறிக்கும்)

Betwixt that thread and the point right opposite to the base of male organ, on the back, the gap must be of fingers 2.

('that thread' denotes the Brsta sūtrā)

221. ஊறு மத்தியத்திற்கும், ஜானு மத்தியத்திற்கும், ஜங்கா மத்தியத்திற்கும், நளிகா மத்தியத்திற்கும் நீக்கம் விரல் இரண்டு.

On the front side the Pūrvaccūtrā should stand apart from the line which connects all the centers between – thighs, knees, calves and heels.

222. பூர்வச் சூத்திரத்தை நியமித்துப், பூர்வச் சூத்திரத்திற்கும் நடு விப்படிக் கற்பிப்பான்.

The same, mentioned ante, holds good with Pūrvaccūtrā.

223 பூர்வச் சூத்திரத்திலே நின்றும் குறுக்கு, முன்புறத்திற்கு விதித்த இடம்தோறும் பின்புறத்திற்கு அந்த அந்த இலக்கிலே குறுக்கு நூல் கற்பிப்பான்.

Cross threads should be tied up at spots, centre between thighs, centre between knees, centre betwixt calves and centre between heels, on the rear side of body, over the Pūrvaccūtrā.

224 ஊறு மத்தியத்தில் சூத்திரத்திற்கும் பூர்வச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டு.

The centre line coincides with the centre of thigh, should stand apart from Pūrvaccūtrā leaving fingers 2 in between.

225 துடை நடுப்புறத்திற்கும், அபரச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் மூன்றே முக்காலேயரைக்கால்.

Betwixt the centre of thigh and the Aparaccūtrā, the gap must be kept as fingers 37/8.

226 பூர்வச் சூத்திரத்திற்கும், ஜானு மத்தியத்திற்கும் நடு, நீக்கம் விரல் இரண்டு.

The centre of knee should fall apart fingers 2 from the Pūrvaccūtrā.

227 முழந்தாளில் பின்புறத்து நடுத்தாளுக்கும் அபரச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் நாலேமுக்கால்.

The Aparaccūtrā must take a position 4 ¾ fingers apart from the centre of the back of knee.

228 ஜங்கா மத்தியத்திற்கும், பூர்வச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் எட்டு.

The centre of calf will secure a place exactly 8 fingers after the Pūrvaccūtrā.

229 ஜங்கையின் பின்புறத்திற்கும் அபரச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் யவை இருபத்தியாறு.

Twenty six yavās gap must bifurcate the back of calf and the Aparaccūtrā.

230 பிராக் சூத்திரத்திலே நின்று நளிகா மத்தியம் நடு நீக்கம் விரல் எட்டரை.

(பிராக் சூத்திரம் - பூர்வச் சூத்திரம்)

The distance betwixt the Prāk sūtrā and the centre of Nalakā must be fingers 8 ½.

(Prāk sūtrā – Pūrvaccūtrā)

231 நளகா அபரப் பார்சுவத்திற்கும், அபரச்சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் நாலேமுக்கால்.

Betwixt the Nalakā Apara side and the Aparaccūtrā, the in between space should be of fingers 4 ¾.

232 பூர்வச் சூத்திரத்திற்கும் அங்குஷ்டாக்கிரங்களுக்கும் நடு, விரல் இரண்டரை.

(அங்குஷ்ட + அக்கிரம் = அங்குஷ்டாக்கிரம்)

The tips of great toes should stand at a distance of fingers 2 ½ from the Pūrvaccūtrā.

(angushṭa + akkiram = angushṭākkirā)

233 அந்த நூலிலே நின்றும் பார்ஷ்ணியந்தமாக நீக்கம் விரல் பதினாலரை.

(பார்ஷ்ணி – குதிங்கால்)

The same thread should be set up leaving a gap from heel, fingers 14 ½.

(Pārshṇi – heel).

234 பூர்வச் சூத்திரத்திற்கும், காயமத்தியத்தில் சூத்திரத்திற்கும், நடு நீக்கம் விரல் ஒன்பதரை.

The Pūrvaccūtrā will be located exactly 9 ½ fingers after the Kāyamatyaccūtrā.

235 காயமத்தியச் சூத்திரத்திற்கும் சிரப்பிருஷ்டப் பாகத்திற்கும் நடு, நீக்கம் விரல் நாலரை.

(பிருஷ்டப் பாகம் - உடலின் பின்பகுதி)

The back of head should find a place leaving 4 ½ fingers gap from the Kāyamatyaccūtrā.

236 காயச் சூத்திரத்திற்கும் ககுவிற்கும் நடு நீக்கம் விரல் ஐந்தரை.

On the back of body, the kaku's place must be 5 ½ fingers far away from the Kāyamatyaccūtrā.

237 மார்புச் சமானம் முதுகுப்புற விரல் ஆறரை.

From the same thread, the spot right opposite to the centre of chest, on the back, should situate leaving a distance, 6 ½ fingers.

238 உதர மத்தியத்தில் முதுகுப்புற விரல் நாலரை.

Leaving 4 ½ fingers distance, from the above noted thread, the part right opposite to the centre of stomach should be carved out.

239 நாபிப் பிரதேசத்தில் முதுகுப்புறம் விரல் ஐந்தரை.

In regard to the same thread, the back opposite to navel on the rear side of body, will find a place leaving a gap of fingers 5 ½.

240 கடியினுடைய நீக்கம் விரல் ஆறரை; ஸ்பிக்கினுடைய அக்கிர நீக்கம் விரல் எட்டரை.

The hip must be chiseled at a distance of fingers 6 ½ and the organ butts' end, 8 ½ from the last mentioned string.

241 துடை பின்புறத்து நடு விரல் நான்கு; முழந்தாளில் பின்புறத்து விரல் நாலரை.

The distance between the above spoken cord and the centre of thigh, on the back, must be of fingers 4. In the same manner, the back of knee should have, 4 ½ fingers.

242. ஜங்கா மத்தியத்தில் பின்புறம் விரல் மூன்று; நளகா மத்தியத்தில் பின்புறம் விரல் இரண்டு.

Far from the thread, marked whileom, with 3 fingers and 2 fingers distances the organs, centre of calf and the centre of ankle, both on the back, should be situated, respectively.

243 பார்சுவச் சூத்திரங்களை, மத்தியமாய் இருக்கிற சூத்திரத்திற்குச் சம சூத்திரங்களாக அறிவான்.

The two side threads must keep equal distance from the centre string.

244 பார்சுவச் சூத்திரத்திலே நின்றும் பாகுபரியந்தம் நீக்கம் விரல் [நான்கு].

Betwixt the upper arm and the pendent celebrated as Pārswaccūtrā, side cord, the distance should be of fingers 4.

245 அந்தச் சூத்திரத்தில் நின்றும் அபர பாகுபரியந்தம் நீக்கம் விரல் எட்டு.

(அபரம் - பின்பக்கம்)

From the same thread – line, the back of upper arm must situate leaving a gap of fingers 8.

(aparām – back side).

246 பூர்வ ஹஸ்தத் துவயங்களுக்கும், அபரஹஸ்தத் துவயங்களுக்கும் நடு, ஒன்றுக்கொன்று பற்றியிருப்பது.

(துவயம் - இரண்டு
பூர்வ ஹஸ்தம் - முன்கை
அபர ஹஸ்தம் - பின்கை)

The twin front hands and the same number back hands should, up to the elbow, where with each other.

(dvayam – two
Pūrva hasta – front hand
apara hasta – back hand)

247 அந்தக் கரங்களின் புறம்பே வரிந்த வரிக்கு விரல் நான்கு.

The twin hands should have a breadth of 4 fingers.

248 பர ஹஸ்தத்தில் கர்த்தரியான விரல் அக்கிரம் ஹிக்காச்சூத்திரமாக இருப்பது.

The back hand wielding the Karttari symbol should be raised to the level of shoulder. That is, the finger of the mudra karttari should keep this level.

249 அபய ஹஸ்தத்தில் மத்தியாங்குலியின் அக்கிரம் ஸ்தனச்சூத்திரமாக யிருப்பது.

The mid finger of the refuge – issuing hand must be in line with the level of chest.

250 வலக்கை அபயமும், இடக்கை வரதமுமாயிருப்பது.

The right hand should wield a refuge – giving symbol while the left, boon – rendering.

251 பூர்வச் சூத்திரத்திற்கும் அபய ஹஸ்தத்தின் மத்தியத்திற்கும் நடு, நீக்கம் விரல் பதினைந்து.

The Pūrvaccūtrā must find a place exactly after fingers 15 from the middle of the refuge – rendering mudra.

252 இடக்கை வரதமாயிருக்கிறது; தலாக்கிரம் கீழே பார்த்து இருப்பது.

The left hand will wield the mudrā known as boon – issuing and its tip should point downwards.

253 கைத்தலத்தினடித்தலம் [கடி] ஸ்பரிசித்திருப்பது; அதன் [நுனி] மேட்டிரமளவாக இருப்பது.

The bottom of hand should be in the level of hip while its tip, that of reproductive organ.

254 நடுவிரல் நுனி தொடங்கித் துடை நீக்கம் விரல் நான்கு.

As regards the same hand, betwixt the mid finger and the thigh, the bee – line must be of fingers 4.

255 வரத ஹஸ்தம் ஊர்த்துவ முகமாகில், அந்த வரத ஹஸ்தத்தில் புறங்கை, நாபிச் சமமாக எடுக்கப்பட்டு இருப்பது.

(ஊர்த்துவம் - மேனோக்குதல்)

If the boon – giving should remain upward, than the back of the upper half of the palm should be carved keeping its level with that of navel.

(ūrttuvā – upward)

256 வரத ஹஸ்தத் தலமத்தியத்தில் நின்று பூர்வச் சூத்திரம் நடு நீக்கம் விரல் பதினாறு.

(தலம் - உள்ளங்கை)

Betwixt the centre of palm of the boon – giving hand and the Pūrvaccūtrā, the gap must be of fingers 16.

(talam – palm)

257 கர்த்தரி ஹஸ்தத்தில் மணிபந்தத்திற்கும் பாகுபாஹ்யத்திற்கும் நடு நீக்கம் விரல் பன்னிரண்டு ஆகிலுமாம்.

(நீக்கம் - இடைவெளி

பாஹ்யம் - வெளிப்பக்கம்)

In the case of Karttari hand, the gap between the wrist and the outer of upper arm must be fingers 12.

(nīkkam – gap

bāhyam – outer side)

258 முழங்கைக்கும் பூர்வச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் பதினேழு.

The elbow must fall at leaving a distance of 17 fingers from the Pūrvaccūtrā.

259 அன்றியே பதினெட்டு, பத்தொன்பது ஆகிலுமாம்.

Or, it may be 18 or 19.

260 ஊரு மூலங்களுடைய முடிவு விரல் ஒன்று.

Betwixt the bases of 2 thighs, the gap will be of finger 1.

261 ஊருவினுடைய மத்தியாந்தரம் யவை இருபது.

The centre of thigh should be specified at a spot which must be 20 fingers aloof from the Matyac cūtrā, central thread.

262 ஜான்வந்தரம் விரல் நான்கு; ஜங்காந்தரம் விரல் ஐந்து.

The same thread must keep a measure of fingers as gap away from the centre of knee and 5 fingers from that of calf.

263. நளிகாந்தம் விரல் ஆறு; குல்பாந்தரம் விரல் ஐந்து.

The ditto thread should maintain distance, 6 fingers and 5 fingers, respectively, from organs, ankle and root of ankle.

264 பார்ஷ்ணியந்தரம் விரல் நான்கு; பாதத் தலாந்தரம் விரல் ஆறு.

(அந்தரம் - நடுப்பகுதி)

The centre of heel must be aloof from the self same pendent with a gap of fingers 4.

265 பாதாங்குஷ்ட த்வயாந்தரங்களுடைய நடு வெளி விரல் எட்டு.

Exactly fingers 8 should divide the two centers of the great toes of feet.

266 ஆர்ஜவமானது ராஜச பாவமாகக் கற்பிப்பான்.

This posture should dazzle with all majesty holding the head straight.

267 கர்த்தரியான [பர] ஹஸ்தங்களிலே வலக்கையிலே மழுவாவது; மானை இடக்கையிலே தரிப்பான். அந்த இரண்டு ஹஸ்தங்களையும் பஹிர்முகமாகச் செய்வான்.

(பஹிர்முகமாக – வெளிப்பக்கமாக)

The back right hand will wield war – axe while the back left ditto must wield deer. The limner would chisel these two hands facing outside.

(bahirmuka – outside)

268 மானின் முகம் புறம்பேயாதல், உள்ளேயாதல் செய்வான்.

(புறம்பே – வெளிப்பக்கம்)

The countenance of deer may face either inwardly or outwardly.

(Purambē - Outside)

269 ஜடா மகுடமுமாய், வலப்புறத்திலேயாதல் இடப்புறத்திலேயாதல் பிறையைத் தரிப்பான்.

This suave idol should be bedecked with jaṭāmakut, hair – crown and crescent at left or right on head.

270 பவளநிறம் போலேயிருப்பது; மூன்று கண்ணுமாய்க் குளிர்ந்த முகமுமாய் எல்லா ஆபரணங்களோடே கூடியிருப்பது.

This murty will shine with the hue, coral, bejeweled with all ornaments on person possessing 3 eyes.

271 பீதாம்பரமாதல், வஸ்திரமாதல், நளகாக்ரங்களாகச் செய்வான். இரண்டு பார்சுவங்களிலும் பீதாம்பரத் தொங்கல் நளகாக்கிரமாகச் செய்வான். பரிவட்டந் தொங்கல் ஊரு மத்தியகதமாவது; முன் தொங்கலும் பார்சுவத் தொங்கலும் நளகாக்கிரங்களைக் காத்து இருப்பது.

(நளகாக்கிரம் - கணுக்கால் வரை)

The lower garment should touch the ankle while the upper one, the centre of thigh.

(nalākkiram – up to ankle)

272 கேவலமான சந்திரசேகரமான மூர்த்தி இப்படிச் சொல்லப்பட்டது. கௌரீ சகிதமானது இடப்புறத்திலே நாச்சியாரோடே கூடியிருப்பது; ஒரு பீடத்திலேயாதல் வேறொரு பீடத்திலேயாதல் செய்வான்.

(கேவலமான – தனியாக இருக்கும்)

Thus depicted the picture of the idol, Cantirasēkarā in the aloof posture. When he is conjoined with kauri, she will find a place left to him. She may present herself on one and the same seat or separate.

(Kēvalamāṉa- alone)

273 தேவரும் தேவியும் ஒன்றுக்கொன்று பங்கத்தோடே கூடியிருப்பது.

Both the Dēvā and the Dēvi should be embracing each other.

274 தேவன் வரத ஹஸ்தத்தினாலே தேவியை பின்பே கட்டியிருப்பது.

Dēvā will be clasping her with his boon – giving hand putting it over her back side.

275 ஸ்தனத்திற்கும் நாபிக்கும் நடுவே ஆலிங்கனத்தைச் செய்வான்.

(ஆலிங்கனம் - தழுவுதல்)

His hugging hand will be touching her between bosom and navel

(alinganam - hugging)

276 பார்சுவத்திற்குப் பின்பே இடக்கையினால் ஆலிங்கனமாம்.

(பார்சுவம் - பார்சுவச் சூத்திரம்)

Devi should sit after the thread marked as Pārcuvaccūtrā.

(pārcuvam – Pārcuvaccūtrā)

277 தேவியானவள் தட்சிண ஹஸ்தத்தினாலே சம்புவினுடைய தட்சிணப் பார்சுவத்தைக் கடிச் சூத்திரத்திற்கு மேலாக ஸ்பரிசிப்பது; இடக்கையிலே புஷ்பம் பிடித்திருப்பது ஆகச் செய்வான்.

(தட்சிண ஹஸ்தம் - வலக்கை)

Dēvi will be touching the hip of Dēvā with her right hand while holding a flower in her left ditto.

(taṭciṇa hastā – right hand)

278 அன்றியே, முன்போலத் தேவனும், தேவி வலக்கையிலே செங்கழுநீர்ப் பூவும் பிடித்து, வாமஹஸ்தம் லம்பிதமாகச் செய்வான்.

(வாமஹஸ்தம் - இடக்கை

லம்பிதம் - தொங்கவிடுதல்)

Or, the limner would carve the Dēvā as before while making Dēvi as wielding water lily in right hand when her left hand hanging down.

(vāmahastā – left hand;

lambitā – hanging down)

279 இப்படி ஆலிங்க மூர்த்தியை மூன்று விதமாகச் செய்வான்.

Thus, the artificer would create the embracing murty in three kinds.

280 எல்லா ஆபரணத்தோடுங் கூடிப் பிரபா மண்டலத்தோடுங் கூடியிருப்பது.

This image will receive aura behind the head while the entire body is bejewelled with ornaments variegated.

281 சந்திரசேகரஞ் சொல்லி, விருஷாருடம் சொல்லப்பட நின்றது.

Having descanted the murthy Candrasēkarā, now Vrsārūtā is pronounced.

9. விருசப வாகன மூர்த்தி

282. விருஷபவாகன மூர்த்தி சொல்லப்படா நின்றது.

(விருஷபம் - காளை)

Now, the murthy, called Vrshaba vāha̲nā, bull – rider, has been taken up for elucidation in regard to its making.

(Vrshabā – bull)

283. பங்கங்களைச் சமபங்கங்களாகச் செய்து, வலக்கால் நின்றது, இடக்கால் குஞ்சிதமாவது.

(பங்கம் - வளைவு)

The bends must be only slight; his right shank should stand cocked while left ditto bent.

(bhangam – bend)

284. உஷ்ணீச மத்தியத்திற்கு வாமத்திலும், லலாட மத்தியத்திற்கு வாமத்திலும், வாமநேத்திராவசானத்திலும், வாம நாசாபுடத்திலும், அந்தப் பீடத்திற்கு வலத்திலும் நாபி நடுவிற்கு நடுவாகவும், இடைத்துடை நடுவாகவும் மத்தியச் சூத்திரத்தை லம்பிப்பான்.

(வாமத்தில் - இடப்பக்கத்தில்;

நாசாபுடம் - மூக்குத் துளை

அவசானம் - கோடிப்பகுதி)

The limner would make the Matyaccūtrā to dangle through – the left of the centre of the crown of head and the left of the centre of the forehead; the end of the left eye and the left tip of nose; the left of that seat, the left of the centre of navel and the left of side of the centre of the left thigh.

(Vāmattil – at the left

Nācāpuṭam – nostril

avacā̲nam – end portion)

285. இது சமபங்கமென்று பெயராம். இது நதமானம் விரல் நான்கு.

(நதமானம் - உறுப்பு வளைவால் ஏற்படும் அளவுக் குறைவு)

This is celebrated as Samabhaṅgā, medium – bend. The measure diminishing due to this, will be fingers 4.

(natamā̲nam-Measure decline due to shrink)

286. முகசூத்திரம் முன்போலே யாவது, வல முலையிலும் அப்படியே செய்வது; நாபிக்கு இடபுறத்தில் மூன்று விரலும், இடத்துடையில் நடுவிலும், நின்ற காலில் குல்பத்தில் நடுவிலும் மத்தியச்சூத்திரம் லம்பிப்பான். இது அதிபங்கமென்று சொல்லப்பட்டது; இதற்கு நதமானம் விரல் ஐந்து.

The Mukaccūtrā should dangle as explained whileon; so is the case with the right breast. The centre sūtrā will be passing through the spots of organs – 3 fingers left of the navel, centre of the left thigh and the middle of the root of ankle of the leg stepping on ground. This is acclaimed as <u>Atibhaṅgā</u>; the diminishing measure, due to this shrink, will be fingers 5.

287. இட முழங்கையை விருஷபத்தினுடைய முகத்திலே வைத்திருப்பது. ஹிக்காச் சூத்திரத்திற்குக் கீழே இட முழங்கையில் லம்பனம் பதினாறு பதினெட்டு ஆதலாவது.

This bull – rider's left elbow should be resting on the head of the bull. In this posture, the elbow will constitute a length of 16 or 18 fingers.

288. காலிலே நின்றும் தலையளவாக உயரஞ் சொல்லப்பட்டது; விருஷப லட்சணம் சொன்னாற் போலச் செய்வான்.

In this way the measures top to bottom have been delineated and the hewer would sculpt the icon of bull with all grandeur.

289. விருஷபத்தின் தலையிலே வைத்த கையில் நடுவிரல் அக்கிரச் சீமையானது நாபிச்சூத்திரச் சமமாவது; அந்த விரல்களந்தமாயும் உன்னதமாயும் இருப்பது.

The tip of the mid finger of hand that is resting on the head of bull must coincide with Nābiccūtrā.

290. அந்தக் கைத்தலத்தில் நடுவிலே நின்றும், பூர்வச் சூத்திரத்திற்கு நடு யவை இரண்டு.

Betwixt the Pūrvaccūtrā and the centre of the palm the self – same hand the gap must be yavās 2.

291. அந்தக் கை, கீழ்நோக்கின பிரசாரித்ததாகச் செய்வான்.

The sculptor would carve that left hand facing downwards.

292. வலக்கையில் விளிம்பு நாபியளவாகக் கீழ் நோக்கின முகமாயும், பதினைந்து பதினாறு விரல் நதமாய் சிம்மகர்ணமாயிருப்பது.

(வலக்கையின் விளிம்பு – முழங்கை;

நதமாய் - தொங்குப்படியாக)

The right hand's elbow should be present just below the navel; or, this hand should sag with a height of 15 or 16 fingers in Simhakarṇā posture.

(Valakkaiyin vilimbu – elbow

natamāi – sagging)

293. நின்ற காலிற்கு மேல் ஹிக்காச் சூத்திரமளவாக, நீளமாய்ச், சிறுவிரலளவு பருமையாய், நுனியிலே மூன்று வளைவையு முடைத்தாய் இருக்கிற வக்கிரதண்டத்தைச், செம்பாலேயாதல் மரத்தாலேயாதல் சமைத்து, அந்தக் கையிலே வைக்குதல் அன்றியே கூடச் செய்தலுமாம்.

Made of copper or wood, a bludgeon will be placed in that hand whose top is at the level of shoulder and whose girth is that of little finger.

294. அந்தக் கையில் மணிபந்தத்தில் நின்றும் ஊறு மூலத்திற்கும் நடுவிரல் ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது ஆவது.

(மணிபந்தம் - மணிக்கட்டு)

In the very same hand, the gap betwixt the wrist and the base of thigh must be of fingers 5, 6, 7, 8 or 9.

(Maṇibhandam – wrist)

295 ஹஸ்தம் இரண்டில், வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் இப்படிச் செய்வான்.

In the two hands, the sculptor would carve a war – axe and a hart, respectively in hands right and left.

296. பர ஹஸ்தத் துவயங்களுடைய அந்தம் ஹிக்காச் சூத்திரச் சமமாக இருப்பது.

The two back hands should have their upper ends in line with the hikkāccūtrā.

297. இடக்கை உயரம் விரல் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து உயர்ந்திருப்பது.

The left hand may be allowed to remain cocked fingers 2, 3, 4 or 5 above the hikkāccūtrā ie., over the level of the base of neck.

298. ஜடாமகுடமாதல், பின்பே சடை தொங்கலாதல், சடைக் கட்டாதல் செய்வான்.

The statuary would hew the hair -- crown, jaṭāmakut, or the hair – spread at the back, or the elevated chignon at the crux, jaṭaikkaṭṭu.

299. எல்லா ஆபரணத்தோடுங் கூடிச், சிவந்த நிறமும் சிவந்த புடவையுமாய் இடப்புறத்திலேயாதல் வலப்புறத்திலேயாதல் உமையைக் கற்பிப்பான்.

The hewer would came the icon of Uma in such a fashion as adorned with all kinds of ornaments, red saree and shining with red hue; she will find a place right or left to siva.

300. வலக்கால் நின்றதாகவும், இடக்கால் குஞ்சிதமாகவும், வலக்கையிலே நெய்தலும் இடக்கையை நீட்டினதாகவும் ஸ்திரீமானத்திலே சொன்ன பிரமாணத்தாலே உமாதேவியைச் செய்வான்.

The limner would hew the statue of Uma as having a cocked right leg, slightly bent left leg, a lily in the right hand and stretched left ditto. The mason would preserve measurements those advocated for lady – icons.

301. விருஷப வாகனம் சொல்லப்பட்டது. இனி நிருத்த மூர்த்தி சொல்லப்பட நின்றது.

Thus recounted Vrshaba vāhanā and thereupon Nrtta murthy has been thrown light upon.

10. நிருத்த மூர்த்தி

302. அநந்தரம் நிருத்த மூர்த்தி இலட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, the technical mances for sculpting the Nrtta murthy have been dilated.

303. ருருடன் என்கிற அசுரனைக் கொல்லுகையின் பொருட்டு, சர்மமுண்டினீ என்பாளொருத்தி பிறக்கப்பட்டாள். அவள் ருருடனைக் கொன்று, அவன் இரத்தத்தைப் பானம் பண்ணுகையினாலே கோபித்துக் கொண்டு, தேவர்களை இம்சிக்க விசாரித்தார்கள். அந்த இருவருடைய நினைவைக் குலைக்கும் பொருட்டு, எல்லா லோகங்களுக்கும் ஹிதார்த்தத்தின் பொருட்டுத், தேவர்களுடைய கிலேச நாசத்தின் பொருட்டும், ராஜராஷ்டிர விவர்த்தனத்தின் பொருட்டும், நிருத்தமூர்த்தி சொல்லப்படா நின்றது.

(கிலேசம் - துன்பம்;

விவர்த்தனம் - வளர்ச்சி)

Carmamuntinee was created to extirpate the asurā, Rurūṭā. Succeeded in her mission, she began to sip the blood of the asurā she killed. Enraged other asuras, commissioned the job of torturing all the devās. At that juncture, for the security of the devas and the subjects in toto, Nrtta murthy started dancing.

(kilēcam – distress;

vivartta<u>n</u>am – upliftment)

304. நிருத்தம் நூற்றியெட்டுப் பேதமுண்டு. அதில் இப்பொழுது ஒன்பது பேதம் சொல்லப்படா நின்றது.

Nrttam divides into 108 categories among which 9 have been now portrayed.

305. பிம்பமானம் முன் சொன்னபடியினாலே கிரகித்து, உத்தமத் தசத்தாலத்தினாலே எல்லா அங்கங்களையுங் கற்பிப்பான்.

The statuary would carve the various organs adhering to the measure celebrated as Uttamattacattālā when adopting other measures as will be proclaimed following this.

306. உஷ்ணீச மத்தியத்தில் நின்றும் வலத்திலே ஒரு விரலாகவும், பின்பு நேத்திராந்தத்திலும், புடாந்தத்திலும், ஹனுவினுடைய வலத்திலும், ஹிக்கையில் மத்தியத்திலும், இடத்துடையில் நடுவில் உள்ளும், நின்றகாலில் குல்ப மத்தியி லுமாகப் பிரபா மண்டலத்திலே நின்றும் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

(ஹனு – நாடி)

The mason would dangle the Pūrvaccūtrā which should pass through the points – one finger right to the centre of crest, end of eye, side of nostril, right side of chin, centre of hikkā, mid of left thigh and the centre of the root of ankle. This pendent sūtra, should start from the aura.

(ha<u>n</u>u – chin)

307. நெற்றிற்கும் புருவச் சூத்திரத்திற்கும் நீக்கம் விரல் நான்கு; மூன்றரை ஆதலுமாம்.

Betwixt the forehead and the Pūrvaccūtrā, the intermediate space must be of fingers 4; 3 ½ may also be admitted.

308. குல்பத்தினின்றும் சூத்திராந்தம் நீக்கம் விரல் இரண்டு.

The bee – line betwixt the self – same cord and the root of ankle must be of fingers 2.

309. ஹிக்காச் சூத்திரத்தில் நின்றும் பூர்வச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் ஏழரை, எட்டு ஆவது.

The Hikkāccūtrā should find a spot such that it will remain exactly fingers 7 ½ or 8 aloof from the Pūrvaccūtrā.

310. மகுடத்திலே கொக்கு இறகும் பூர்வச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் அப்படிக் கொள்ளுவான்.

The very same measure must be kept between the Pūrvaccūtrā and the feather of crane inserted on the diadem.

311. மேல் வயிற்றைப் பூர்வச் சூத்திரம் ஸ்பரிசித்து இருப்பது.

The Pūrvaccūtrā must be touching the upper portion of stomach.

312. அந்தப் பூர்வச் சூத்திரத்திலே நின்றும் தூக்கினது டோல பாஹுவக்ரம் விரல் பதினாறரை.

(டோல – தொங்குவது)

Sixteen and a half fingers divide the Pūrvaccūtrā and the loose right hand tip.

(ṭōla – dangling)

313. அந்தச் சூத்திரத்தில் நின்றும் மற்ற பாஹுவக்ரம் விரல் நான்கு.

From the string under discussion the next hand's end should take a position leaving 4 fingers in between.

314. அதிலே நின்றும் அக்கினிக்கராக்கிராந்தமாக விரல் முப்பத்தியெட்டு, நாற்பது, அன்றியே துவிகுணமா மென்றது.

(கர + அக்கிராந்தம் = கராக்கிராந்தம்)

The end of hand wielding fire should keep aloof fingers 38 or 40 or 3 in addition to these, away from the cord under talking.

(kara + akrāntam = karākrāntam)

315. அக்கினி ஹஸ்தத்தில் உயர்த்தி, அந்த மத்தியமாங்குலியில் அக்கிரமாதல், அந்தக் கையில் தல மத்தியமாதல், மத்தியாங்குலியில் அக்கிரப்பர்வமாதல், அன்றிக்கே மத்யமாங்குல மத்யப்பர்வமாதல், ஹிக்காச் சூத்திரச் சமமாயிருப்பது; அந்தக் கையில் அக்கினிப் பாத்திரத்தோடே கூடியிருக்கிலுமாம்.

(பர்வம் - கணு)

The elevated left hand should wield the fire pot, which must rest on the tip of the mid finger or on the centre spot of palm or on the middle joint, or on the top joint. The pot's level should be on par with that of hikkācсūtrā.

(parvā – joint)

316. அந்த அக்கினியைப் பாத்திரமன்றிக்கே செய்கிலுமாம்; அந்த அக்கினிக்கு விஸ்தாரம் விரல் ஐந்து; உயரம் விரல் ஏழு, எட்டு, ஒன்பது ஆகிலுமாம். அக்கினி நாக்கு மூன்று, ஐந்து, ஏழு ஆகக் கற்பிப்பான். நடுவு கொழுந்திற்கு; நின்றது, தாழ்ந்து இருப்பது.

The fire, aforesaid, can remain without utensil. The fire's width must be of fingers 5, while its height, fingers 7, 8 or 9. The mason would carve out tongues to the fire, 3 or 5 among which the central one cocked while the rest bent.

317. வலக்கையில், பாஹுவக்கிரம் பூர்வச் சூத்திரத்திற்கு நின்ற விரல் இருபது.

(பாஹு வக்கிரம் - கையின் நுனி)

The end of right hand must keep aloof a distance of fingers 20 from the Pūrvaccūtrā.

(bāhvakra - tip of hand)

318. அதில் நின்றும் தமரகம் பிடிக்கச் செய்யில் மணிக்கட்டு விளிம்பு அளவாக விரல் இருபத்தியெட்டு; முப்பத்திரண்டு ஆகிலுமாம். இடக்கை கிரமம் போல விரல் நாற்பது கொள்ளுவான்.

(தமரகம் - உடுக்கு)

From the self – same Pūrvaccūtrā, the right wrist, while the right hand is wielding a small drum, should keep a distance of fingers 28, 30 or 40.

(tamarakam – little drum)

319. அந்த ஹஸ்தத்தில் மணிபந்தத்தின் மேற்பகுதி ஹிக்காச் சூத்திரமாக இருப்பது.

The level of wrist of that hand must be on par with that of the base of neck.

320. டமருகத்தை நடு விரலாலே பிடித்து இருப்பது; சூசியின் பெருவிரல், உயரத்தில் கர்ணாந்த மளவாக இருப்பது.

(சூசி – வலக்கை)

The small drum must be held by the centre digit and the thumb level of the hand should be on par with that of the ear.

(cūci – right hand)

321. தர்ஜனியினுடைய அக்ரத்திற்குச் சூசியென்று பெயராம்; அக்கினியே தர்ஜனியானது [என்று] சொல்லியிருக்கிறார்கள்.

Cūci is nothing but the tip of the index finger. Fire had taken the contour of this digit, ancients had opined.

322. அன்றியே, தோற்கயிற்றை நடு விரலாலே பிடித்து, அனாமிகைக்கு மேலே டமருகம் இருந்ததாகச் செய்வான்.

Or, the leather strap may be caught hold of with the mid digit and the drum should find a place on the ring finger.

323. டமருகத்தின் தீர்க்கம் விரல் எட்டு; அகலம் விரல் ஐந்து; டமருகம் நடு வியாசம் விரல் [மூன்று] தலையும் பத்மாகாரமாக இருப்பது.

(பத்ம + ஆகாரம் = பத்மாகாரம்; ஆகாராம் - தோற்றம்)

The stumpy drum should have a length of fingers 8 and a width of fingers 5. The breadth of it must be of fingers 3. Centre to top, the shape must be resembling lotus.

(patma + ākāram = patmākāram; ākāram – shape)

324. இரண்டு வலயமுமாய்த் தோற் கயிற்றினாலே கட்டியிருப்பது.

Leather strap will be fastening the two rings in the drum.

325. யாதொரு திரவியத்தினாலே பிம்பம் செய்யப்பட்டதோ, அந்தத் திரவியத்தினாலே டமருகத்தைச் செய்வான்.

The limner would hew drum with material used to carve the whole idol.

326. சூசி அக்கிரத்தில் நின்று கர்ணாந்த மளவாக நீக்கம் விரல் நாற்பது நாற்பத்தைந்து, ஐம்பது ஆகிலுமாம்.

(கர்ண + அந்தம் = கர்ணாந்தம்;
கர்ணம் - காது)

The bee – line between the ear and the butt – end of the index finger should measure out to be fingers 40, 45 or 50.

(Karaṇa +antam = Karnāntam;

Karṇam – ear)

327. சூசியானது, பார்சுவச் சூத்திரத்திற்குச் செவ்வையானது.

The level of the end of the index finger must be on par with that of the Pārcuvaccūtrā.

328. வலத்திலே பூர்வஹஸ்தம் அபயமாவது.

The right front chiro will be wielding the gesture of refuge – rendering.

329. பூர்வச் சூத்திரத்திற்கும் அபயஹஸ்தத்தில் நடுவிற்கும் நீக்கம் விரல் இருபத்தினான்கு.

Between the centre of this refuge – giving hand and the Pūrvaccūtrā, the distance must be of fingers 24.

330. அந்த அபய ஹஸ்தத்தில் முழங்கைக்கும் பூர்வச் சூத்திரத்திற்கும் நடு, நீக்கம் விரல் [நாற்பது].

In the same hand, the intermediate distance between the elbow and the Pūrvaccūtrā, should be fingers 40.

331. அபய ஹஸ்தத்தில் முன்கை நடுவே புஜங்க வலயத்தைச் செய்வான்.

The sculptor would carve snake – like ring on the forehand of the self – same hand.

332. அந்த முன்னங்கைப் பருமையின் பாகத்தில் கால்வாசி அதிகம், பாம்பு நீளம் கொள்வான்.

The mason would mark 1 ¼ times of the girth of the centre of forehand as the length of the 'snake'.

333. அந்தப் புஜங்கத்திற்கு நீளம் சொன்னதற்கு மேல்பட நீளம் சொல்லுகிறபடி; படம் நீளம் விரல் பன்னிரண்டு; அகலம் விரல் ஏழு; கனம் விரல் ஒன்று; முன்னோக்கி ஈச்வரனைப் பார்த்து இருப்பது; இரண்டு நாக்கோடுங் கூடியிருப்பது. இப்படி புஜங்க வலய மென்கிற பாம்பிற்கு லட்சணம் சொல்லப்பட்டது.

In addition to the length of the snake, other measures have been enunciated. Hood length, fingers 12; breadth of hood, fingers 7; thickness of ditto, finger 1. The snake must look the countenance of Siva. Thus portrayed the nuances for carving out snake shaped ring, Bujaṅga valayam.

334. சூத்திரத்தில் நின்றும் வலப் பார்சுவத்தில் கட்சாந்தரம் விரல் நீக்கம் விரல் பன்னிரண்டு.

Twelve fingers has must be left from the centre thread, Matyac cūtrā to the last of chest up to the armpit.

335 .சூத்திரத்திற்கு [இடப் பக்கத்து] மத்தியோதரத்தின் நீக்கம் விரல் ஒன்பது.

The self – same centre cord should maintain a space of fingers 9 from the centre of the left wing of stomach.

336. சூத்திரத்திற்கு இடப்புறத்து ஸ்பிக் பிண்டத்தும் நடு நீக்கம் விரல் பதினெட்டு.

The centre of the left butt and the string under discussion must leave a space of fingers 18.

337. சூத்தரத்திற்கும் குஞ்சிதமான முழந்தாளிற்கும் நடு நீக்கம் விரல் பத்து.

The bent knee must find a spot after fingers 10 from the same cord.

338. அன்றியே, ஒன்பது, எட்டு விரலாகிலுமாம்.

Or, 8 and 9 fingers could also be admitted, in regard to gap.

339. நதமானம் விரல் பன்னிரண்டு, பதினொன்று, பத்து ஆகிலுமாம்.

The diminish in the length of the bent shank must be fingers 12; eleven and ten could also be permitted.

340. நின்ற காலில் முழங்காலுக்கும் இடக்காலில் முழங்காலிற்கும் விரல் பதினாறு.

Sixteen fingers space in between must be dividing the twin knees.

341. அன்றியே ஜானுக்களுடைய அந்தரம் விரல் பதினான்கு, பதினைந்து ஆக ஜானு நீக்கம் மூன்றுபடியாயிருக்கும்.

Or, the gap between the two knees could also be fingers 14 or 15 and in this fashion, the twin knees stand separated in three ways.

342. நின்ற காலில், நளகா மத்தியத்தில் நின்று இடக்காலில் குதியளவும் நடு நீக்கம் விரல் நாற்பத்து நான்கு.

(நளகா – கண்டைக்காலின் கீழ்ப்பகுதி)

The centre of the lowest narrow organ of the calf of the treading leg and the heel of the lifted leg should stand apart keeping on in between distances of fingers 40. (nalakā – lower end of the calf)

343. நதமானம் விரல் நாற்பத்தேழு, நாற்பத்தாறு நாற்பத்தைந்து ஆவது.

Subtracting the shrink in height, the aforesaid measure could be 47, 46 or 45 fingers also.

344. நின்ற காலில் முழங்காலிலே நின்றும், தூக்கின காலில் குதியளவாக நீக்கம் விரல் முப்பத்தினான்கு.

The knee of the stamping leg should maintain an aloof position from the heel of the raised leg leaving a space of fingers four and thirty.

345. தூக்கின காலின் முழங்கால், நாபிச் சூத்திரச் சமமாவது.

The knee of the elevated leg should be at the level of the line of navel.

346. தூக்கின முழங்கைக்கும், நாபிச் சூத்திரத்திற்கும் நீக்கம் விரல் பத்து.

Ten fingers measure should separate the lifted elbow and the line of navel, Nābiccūtrā.

347. அன்றியே பதினொன்று விரலாகிலுமாம்.

Or, 11 fingers gap may also be held.

348. அந்தக் கையில் மணிக்கட்டிற்கும் இட முழந்தாளிற்கும் நடு, நீக்கம் விரல் பத்து ஒன்பது ஆதல் செய்வது.

The wrist of the self – same hand should stand apart allotting a distance of fingers 9 or 10 in between, from the organ, knee of the left leg.

349. டோல ஹஸ்தத்தில் மத்தியாங்குல் அக்கிரத்திற்கும் வாமப் பாதத்தில் ஜங்கைக்குட நடு, நீக்கம் விரல் பத்து.

Ten fingers distance must be kept up between the tip of the mid digit of the hanging hand and the knee of the left leg.

350. அன்றியே, ஒன்பது, பதினொன்று ஆதல்.

Or, it could be 9 or 11.

351. டோல ஹஸ்தத்திற்கும், அபய ஹஸ்தத்தில் மத்தியத்திற்கும் நடு, நீக்கம் விரல் பத்து.

The hanging loose hand should find a spot exactly 10 fingers apart from the centre of the refuge – rendering palm.

352. ஒன்றுக்கொன்று சொல்லப்பட்ட நீக்கங்கள் சௌந்தரியத்திற்கு ஈடாகச் செய்வான்.

(சௌந்தரியம் - அழகு)

The limner would hold the distances among variegated organs to achieve the goal of charming.

(coundaryam – beauty)

353. கேசாந்தத்தில் நின்றும் பகபட்சத்தினுடைய உயரம் விரல் பதினெட்டு, பதினேழு, பதினாறு ஆதலாவது.

Fingers 18, 17 or 16 must separate the bakabakshā and the kāsāntā.

354. அதில் பாதியாதல் முக்காலாதல் விஸ்தாரங் கொள்ளுவான்.

Its width will be either half or ¾ of its height.

355. சடையினுடைய நீளம் விரல் முப்பத்திரண்டு தொடங்கி, அறுபத்தியொன்று விரலந்தமாக ஒவ்வொரு விரலேற்றி நீளம் கொள்வான்.

The tress of hair should possess a height beginning from the fingers 32 and reaching up to 61, increasing every time by one finger.

356. எல்லாச் சடைகளுக்கும் கீழ்ச்சடை நீண்டிருப்பது; அதன் மேற்சடை குறைந்து இருப்பது.

The lowest lock of hair must be the longest and somewhat diminished should be the one just above it.

357. சடையின் பருமன் சுண்டு விரலளவாக இருப்பது.

The girth of little digit must match that of the plait.

358. சடைகளினுடைய இடைவெளி புஷ்ப மாலைகளினாலே அலங்கரலரிக்கப்பட்டு இருப்பது.

The tresses should be decked with garlands of flowers.

359. பாம்பும், எருக்கம் பூவும், ஊமத்தம் பூவும், நானாவித இரத்தினத்தினாலே அலங்கரிக்கப்பட்ட உரஸ் அட்சமாலையினாலே நாணப்பட்டு இருப்பது.

(அட்சமாலை - மணிமாலை)

His tresses will be bedecked with snake, flower of calotropis gigantea, ditto of Xanthium Orientale and skulls adorned with beeds

(akshamālā – string of beads)

360. பஸ்மத்தினாலே அணியப்பட்ட திருமேனி சற்றே சிரித்த முகமும், யக்ஞோபவீதமும் உரஸ் சூத்திரத்தோடு கூடியிருப்பது.

(உரஸ் - மார்பு)

His frame, besmeared with ash, bearing a countenance so euphoric, donning a sacred thread, must be bejeweled with shining other necklaces.

(uras – chest)

361. உதரப் பந்தத்தின் நுனி [பிரபா] மண்டலத்திலே பற்றி இருப்பது

(உதரம் - வயிறு; பிரபா மண்டலம் - ஒளிவட்டம்)

The rope fastened on the stomach should be in contact with the crown of rays.

(utaram – stomach; prabha manṭalam – crown of rays)

362. தொடை முற்றும் புலித் தோலாலே மூடப் பட்டிருப்பது.

The thigh should be covered with tiger skin out and out.

363. தூக்கின தோளின் மேலே பந்திக்கப்பட்ட வியாக்கிர சர்மத்தையு முடைத்தாயிருப்பது.

(பந்திக்கப்பட்ட– கட்டப்பட்ட; வியாக்கிரம் - புலி; சர்மம் - தோல்)

On the shoulder of the loose hand should be fastened the skin of tiger.

(bantikkappaṭṭa – fastened; vyāgrā – tiger; carmam – skin)

364. பாதங்கள் நூபுரங்களோடு கூடியிருப்பது; எல்லா ஆபரணங்களோடுங் கூடப் பூஷிக்கப்பட்டிருப்பது.

Tinkling ankle – rings must adorn the feet which will be bejeweled with all ornaments.

365. கால் விரல்களும் கை விரல்களும், நடுவிரல் ஒழிய, இரத்தினத்தோடு கூடியிருப்பது.

Digits of leg and hand must be decked with gems, save mid ones.

366. வலக்கால் குஞ்சிக்கப்பட்டு, முயலகன் முதுகிலே மிதிக்கப்பட்டிருப்பது.

The right leg, sporting a slight bend, should strample on the back of Muyalakan̲, a demon.

367. முயலகன் முதுகுமேலே குறுக்காக மிதித்து, நிமித்தம் செய்யா நின்றாராம் மகேசுவரன்.

Mahēswarā, sages told, danced, trampling cross–wise on the back of Muyalakan̲.

368. இடக்கால் உயரக்க எடுக்கப்பட்டு, வல முழந்தாளை அனுசரித்து இருப்பது

The elevated left leg should stand closer to the knee of the right leg.

369. தூக்கின கையையும், தூக்கின காலையும் காட்டியிருப்பது. அனந்தரம் அபஸ்மாரம் சொல்லப்படா நின்றது.

This sculpture will be depicting the raised leg and lifted leg. Thereupon, Apasmāram has been show cased.

370. அபஸ்மார தீர்க்கம் - முகம் மூன்று, நான்கு, ஐந்து நீளமாவது.

(அபஸ்மாரன் - முயலகன்)

The countenance of Apasmārā, should be of fingers 3, 4 or 5.

(Apasmāran̲ – Muyalakā)

371. அபஸ்மார உயரத்தை நாற்பத்தியெட்டுச் செய்து, இதில் ஒரு கூறு அம்சத்திற்கு விரல் என்று பெயராம்.

The height total of Apasmāra should be bifurcated into 48 equal divisions and 1 part of these constitutes what is termed as 1 finger.

372. உஷ்ணீசம் விரல் ஒன்று; கேசாந்தம் விரல் ஒன்று.

The vertex must have a length of finger 1 and the gap up to the end of hair, 1.

373. முகாயாமம் விரல் எட்டு; கழுத்து விரல் இரண்டு.

(முக + ஆயாமம் = முகாயாமம்; ஆயாமம் = நீளம்)

The countenance must be 8 fingers long and the neck, fingers 2

(mukha + āyāmam = mukhāyāmam, āyāmam = length)

374.கண்டாயாமம் விரல் ஒன்றரை.

1 ½ fingers length should secure the height of throat.

375.ஹிக்கையில் நின்றும் இருதயாந்தமாக விரல் ஆறு.

Betwixt the base of the neck and the end of chest, the gap must be fingers 6.

376.இருதயத்தில் நின்றும் நாபிப்பர்யந்தம் விரல் ஆறு.

(பர்யந்தம் - அளவு)

The lower end of chest and the navel stand apart leaving a distance of fingers 6 in between.

(paryantam – limit)

377.நாபியிலிருந்து மேட்டிர மூலாந்தமாக விரல் ஆறு.

The base of the male organ should fall apart from the navel after a measure of fingers 6.

378.ஊருத் தீர்க்கம் விரல் ஏழு; ஜானுத் தீர்க்கம் விரல் இரண்டு.

Seven fingers constitutes the length of thigh – while 2 fingers, the knee.

379.ஜங்கை விரல் ஏழு; பாதம் விரல் இரண்டு.

The calf should spread to cover a length of fingers 7 when the foot, 2.

380.ஹிக்காச் சூத்திரத்தில் நின்று கை நீளம் நடு விரல் பரியந்தம், விரல் பதினான்கு; நின்ற அங்கங்களெல்லாம் யுக்தியினாலே செய்து, கீழ் முகம் விழித்துக் கிடத்துவது.

The length of chiro, covering the tip of mid finger and the base of neck must be finger 14. The craftsperson would carve out other organs of Apasmārā as per the beauty of the idol demands; He would make the Apasmāra's image face down.

381.சம்புவினுடைய வலத்திலே தலையை வைத்து, இடத்திலே கால்களை நீட்டினதாகச் செய்வான்.

(சம்பு — நடராசர்)

The statuary would fix the head of Apasmārā towards the right side of Naṭarājā and legs, on the left wing, stretching.

(cambu – Naṭarājā)

382.அபஸ்மாரத்தில் உதரோச்சம் விரல் பத்து; ஒன்பது, எட்டு ஆகிலுமாம்.

(உதர + உச்சம் = உதரோச்சம்; உதரம் - வயிறு)

In the figure of Apasmārā, the stomach will cover a length of 10 fingers; Nine or eight is also admissible.

(Utara + uccam = Utarōccam; utaram – stomach)

383.அபஸ்மாரத்தில், முகம் கிரமப்பட்டுப், பாம்போடு விளையாடப்பட்ட பிரியத்தோடே கூடியிருப்பது.

(கிரமப்பட்டு — தூக்கியபடி)

In the idol of Apasmārā, his visage should be in a position elevated; and he should be sporting with a snake.

(kramappaṭṭu – lifted)

384. பாம்பு, அபஸ்மாரத்தில் இடக்கையிலும், வலக்கை முத்ரியாயிருப்பது.

Apasmārā should hold a snake in left hand whilst his right hand sporting a sign.

385. அந்த அபஸ்மாரம் பச்சை நிறமாயிருக்கும்.

Green hue must be the complexion of Apasmārā.

386.பத்மப் பீடோச்சம் விரல் [பதினாறு] விஸ்தாரம், இதில் நான்கு மடங்காவது.

The seat lotus shaped should have a height of fingers 16, while its breadth, four times of height.

387.ஒன்றேகால், ஒன்றரை, ஒன்றே முக்கால் நீளமாவது.

Its length should be assigned as 1 ¼, 1 ½ or 1 ¾ fingers.

388.ஊர்த்துவப் பத்மமும் அதோ பத்மமுமாய்ப் பிண்டிகா லட்சணம், ஆவுடையார் லட்சணம் போலச் செய்வான்.

(ஊர்த்துவப் பத்மம் - மேற் பத்மம்; அதோ பத்மம் - கீழ்ப் பத்மம்;

பிண்டிகை — பீடம்)

The upper lotus, the lower ditto and the 'pīṭā' seat – all should be chiseled in a becoming style as in the case of Avadayār contour.

(ūrttuvap patmam – upper lotus; atō patmam – lower lotus;

pintikai – seat)

389.பிரபா மண்டலச் சம்யுக்தத்தோடே கூட இந்தச் சொல்லப்பட்ட விதியினாலே செய்யப்பட்டிருப்பது.

The contour of Naṭarājā should shine with the aura behind.

390.மூன்று விரல் தொடங்கி, நூறு விரலளவும், ஒவ்வொரு விரலேற்றப், பிரபா மண்டலம் உயரம் தொண்ணூற்றியெட்டுப் பேதமாம்.

The aura will have, in toto, 98 varieties in regard to its height, which can be achieved by increasing one finger every time, starting from fingers 3 and reaching 100.

391.ஒரு விரல் தொடங்கி, ஒவ்வொரு யவை விதித்து, அது பிரமாணம் போலத் தொண்ணூற்றியெட்டுப் பிரமாணமாம். இப்படிப் பிரபா மண்டலத்திற்குச் சொல்லப்பட்டது.

(விதித்து - கூட்டி)

The aura will have, altogether, 98 types in regard to its [height], which can be secured by adding 1 yavā every time, beginning from 1 finger.

(vitittu – increasing)

392.அந்த அந்த அங்கங்களில் நின்றும் மேல் எட்டிலொன்று குறைந்திருப்பது, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டுப் பேதமாம்.

By diminishing 1/8 part of the respective organs every time, a total of eight kinds can be achieved in regard to the size.

393.தண்ட சங்க்யை, கர்த்தாவினுடைய சிரத்தைக் கீடாக

(சங்க்யை – எண்ணிக்கை)

The shaft numbers will be decided by the statuary as per his ingenuity and leitmotif

(caṅkgai – number)

394.ஏழு, ஒன்பது, பதினொன்று, பதிமூன்று, பதினைந்து, பதினேழு, பத்தொன்பது, இருபத்தியொன்று இருபத்திமூன்று, இருபத்தைந்து, இருபத்தேழு, இருபத்தொன்பது, முப்பத்தியொன்று, முப்பத்தி மூன்று, முப்பத்தைந்து - இப்படி ஐம்பத்தொன்று சுடரளவும் தனக்கு வேண்டின சுடரைச் செய்யும் பொழுது அழகாகச் செய்வது.

The craftsperson would chisel the flames in the prabhamandalā any number among 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 29, 31, 33, 35 up to 51 a la mode running quite partly in accordance with his caliber and leitmotif.

395.முடிந்த சுடருக்குக் கீழ், மேனோக்கின மகரத்தை இரண்டு புறமும் செய்வான்.

(மகரம் - மீன்)

The limner would tool two sharks looking upwards at the ends of the two flames on either side of the Dancer.

(makarā – shark)

396.அந்தத் தண்டத்தின் மத்தியிலே, மகரச் சோபிதமாக இருக்கிற பூரிமத்தைச் செய்வது.

(தண்டம் - பிரபா மண்டலத்தில் வரும் தண்டு)

The centre of the shaft of the prabhamandalā will have an artistic work in the contour of a shark.

(tandam – shaft around the prabhamandalā)

397.அந்தத் தண்டில், ஏழு, ஐந்து அம்சாவசானங்களிலே மூன்று கூடின பத்ரங்களான கருக்குகளை அலங்கரிப்பான்.

(அவசானம் - முடிவு; பத்ரம் - இலை)

In the shaft, the connoisseur would carve out leaf – works at the ends of spots every seventh or fifth.

(avacānam – end, patrā – leaf)

398.ஆதித்திய மண்டலம் போலப் பிரபா மண்டலத்தின் சுடருக்கு இலைத் தொழில்களை யதேஷ்டமாக அலங்கரிப்பது.

The prabhāmandalā should emanate light just like sun and the flames of mandalā must be pinked with various leaf – works.

399.அதனுடைய பார்சுவத்தில், முன்னே சொன்ன பிரமாணத்தினாலே உமாதேவியைக் கற்பிப்பான்.

(பார்சுவம் - பக்கம்)

Keeping measures recounted before, the sculptor would tool the image of Umā dēvi to erect adjacent to Naṭarājā.

(pācuvam – side)

400.இது முந்தின நிருத்தம்; இக லோகத்திற்கு ஹிதத்தைச் செய்யும்.

(நிருத்தம் - நடனம்)

This is the first dance; this will solace in the present world

(niruttam – dance).

401.அந்த நிருத்தத்தில் வலப் பார்சுவத்தில், சடாக்கிரத்தில், கங்கையைக் கற்பிப்பான்.

The mason would tool the Gangā dēvi at the right, on the top of his tresses.

402.சம்புவினுடைய தேகாங்குலத்தினாலே பதினாறு விரல் ஏற்றியும் ஸ்திரீமானத்தினாலே செய்யப்பட்ட எல்லா அலங்காரங்களுக்கும் இருதயத்திலே வைக்கப்பட்ட அஞ்சலியுமான கையோடே கூடின நிருத்தம் இரண்டாவது நிருத்தமென்று பெயராம்.

(சம்பு – நடராசா)

That dance form of cambu in which the Gangā dēvi should hold her folded hands against her bosom having a height of fingers 16 calculated proportionate to his body and her frame chiseled following lady – measures, will attain the name, second dance.

(cambu – Naṭarājā)

403. அந்த நிருத்த விக்கிரகம், அபஸ்மாரத்தை இடக்காலாலே மிதித்து, வலக்கால் தூக்கப்பட்டபடி இருப்பது.

This statue of dance must trample on Apasmārā with left leg while the right ditto lifting up.

404. லலாட மத்தியத்திற்கும் இடப்பார்சுவத்தில், இடப்புறத்தில் நாசாப்புடாந்தத்தில் நின்ற காலில் குல்பத்திலும் பிரம்மச் சூத்திரத்தை லம்பிப்பான்; நின்றது, முன்போலச் செய்வான். இந்த நிருத்தம் மூன்று.

The stone – connoisseur would dangle the Bramhaccūtrā such that it must through – the left of the centre of forehead, the left end of the nostril and the centre of the root of ankle of the 'standing' leg. The rest, he would secure as before. This dance is the third.

405. விரிக்கப்பட்ட சடாபாரத்தையும் சடாமண்டலத்தையும் சடாமகுடம் எல்லாம் பிரதம நிருத்தம் போலச் செய்வான்.

All sorts of his tresses namely hair – spread, hair – heap and hair – crown should be in accordance with those meant for the first dance.

406. சதுர்த்த நிருத்த மிப்படியே சர்வ பிராணிகளுக்கும் ஹிதமென்று [ஆகும்].

(சதுர்த்த — நான்காவது)

This fourth dance will be beneficial to all souls

(caturtta – fourth)

407.உஷ்ணீசத்தில் மேல்வாயளவாக எடுத்து வலக்கால், குஞ்சிதமாய் முயலவனை மிதிக்கப்பட்ட இடக்காலும், எடுத்த தோள்களுமாயிருக்கும் [ஐந்தாம்] நிருத்தமென்று பெயராம்.

(உஷ்ணீசத்தில் - மேலே)

That posture of dance in which his right leg should be lifted to the level of upper lip of mouth and his left ditto should be trampling on Muyalakā will be celebrated as Fifth Dance.

(ushnīcattil – above)

408.அபயமும், சூலமும், பாசமும், அக்கினிப் பாத்திரமும், மணியும், யானையின் கை போல இருப்பதுமாய் வலக்கை நீட்டப்பட்ட கையுமாய், இது பிரதம நிருத்தம் போலப் பூர்வச் சூத்திரம் விழப்பட்டு இருக்கிறதுமாகச் செய்வான். இது ஐந்தாம் நிருத்தமென்று பெயராம்.

(பாசம் - பாசக் கயிறு)

Wielding refuge – rendering posture, trident, noose, fire pot and bead hands while protruding right bend like an elephant's trunk is the appearance of the Fifth Dance for which the Pūrva cord should be similar to that of the First Dance.

(pācam – noose)

409.பதினாறு கைகளுமாம்; கௌரியை இடப்புறத்திலும் ஸ்கந்தங்கரமாக இளமுலையை இரண்டு கையாலும் பிடித்ததாய் இருக்கிற கௌரி ஈச்வரரைப் பார்த்ததாகவும், ஆச்சரியத்தோடு கூடினதாகவும் கற்பித்து, அபயமும், டமருகமும், வச்சிரமும், சூலமும், டங்கமும், தண்டமும், மிருகமும் இவை வலப்புறத்தில் கைகளிலும்; மற்றொருவிதம் வலப்புறத்திற்கு அபயமும், சூலம், பாசம், கட்கம், டமருகம், துவஜம், வேதாளம், சூசிஹஸ்தம் இவை வலப்புறத்திலே; இடக் கையில் துதிக்கை, தூக்கப்பட்ட அக்கினியும், மிதுனமும், வலயமும், கொடியும், மணியும், பரசுவும், கபாலமும், இடப்புறத்திலே இவை எட்டும் ஒரு விதம், இடப்புறத்திற்கு அக்கினியும், துதிக்கை, பொற்கலயமும், கட்கமும், விஸ்மயமும், மணியும், கபாலமும், ஷூரிகையும் - எட்டும் இவற்றிலுமாய் நின்றது; ஐந்தாவது நிருத்தம் போலக் கால்களும்; ஆறாவது நிருத்தம் சொல்லப்பட்டது. ஏழாம் நிருத்தம் சொல்லப்படா நின்றது.

Sixteen hands are also admissible. Gouri will find a place left to Naṭarājā; Naṭarājā will be holding the tender breast of Gauri who should be looking him wonder – struck. In right hands, he must wield in right hands refuge – rendering posture, little – drum, thunderbolt, trident, chisel, staff and deer. In another variety, he should wield, in right hands, refuge – giving sign, trident, noose, dirk, little –drum, flag jinnee and pointing finger and in left hands, trunk – like gajastāpā, lifted fire, mithuna, valayā, flag, bead, war – axe and skull. In an another style, in the left hands he should wield fire, ' trunk', gold pot, dagger, ' wonder' , bead, skull and bayonet. Foot work must as advocated for the Fifth Dance. A la mode described above, the Sixth Dance was sketched.

Now, the Seventh Dance has been taken up for dilatation.

410.மூன்று கண்ணும் எட்டுக் கையும், விரித்த சடையும், முடக்கின காலும், இடக்கால் முயலகன் மேலும், எடுக்கப்பட்ட வலக்காலில் அங்குஷ்டாக்ர சீமையும், பூர்வச் சூத்திரத்தில் நின்று அந்த அங்குஷ்டத்திற்கும் நீவரம் விரல் பன்னிரண்டு. அபயமும் டமருகமும் பாசமும் தட்சிணக்கரத்திலும்; கபாலமும், அக்கினிப்பாத்திரமும் விஸ்மயா ஹஸ்தமும், துதிக்கை போல வலக்கை இடப்பார்சுவத்தில் நீட்டினதாய்; லலாட மத்தியத்தில் வாமத்திலும் ஸ்தன மத்தியத்திலும், இடக்காலில் நளகா மத்தியத்திலும், பிரம்மச் சூத்திரத்தை லம்பிக்கப்பட்டு, அந்தச் சூத்திரத்தில் நின்றும் வாம ஜானுநீக்கம் விரல் ஒன்பது, எட்டு; பந்தமான விரல் பத்து. வாமத்திலே கௌரியோடுங் கூடியிருக்கிறது ஏழாம் நிருத்தமென்று, இந்த நிருத்தம் ஜகத்து ஆர்த்தியைப் போக்குவிக்கும்.

(ஆர்த்தி - துக்கம்)

In the Seventh Dance, Naṭarājā must possess three eyes, 8 hands, spread – hair and bent leg. He will be trampling on muyalakā with left leg while his right one lifted so that the gap between the tip of the toe the leg and the pūrvā thread should measure out to be fingers 12. In his right hand he must hold refuge – furnishing sign, kettle – drum, noose while his left chiro wielding 'wonder' posture, skull and fire pot; His trunk – like right hand extending towards left side 3. Brahmaccūtrā should be suspended such that it must pass

through the left of the centre of forehead, centre of the breast and centre of the bottom of the calf of left leg. The bee – line between this thread and the right knee must be of fingers 8 or 9; measure due to diminution should be fingers 10. Gauri should accompany with him at left. The dance which will extirpate all ills of world is the Seventh Dance.

(ārtti – distress)

411.அந்த நிருத்தம்தான் ஆறு கையுமாய் அபயமும் டமருகமும் சூலமும் தட்சிணத்திலும் கபாலமும் விஸ்மயமும் கஜஹஸ்தோபமான கையும் இடத்திலே முன்போலச் சூத்திரம் விழுக்காடுமாயிருப்பது. இது எட்டாவது நிருத்தமாம்.

(தட்சிணம் - வலப்புறம்)

Having six hands, holding in right arms refuge – issuing posture, kettle – drum and trident and wielding in left hands skull, 'wonder' posture and trunk – like gajahastā is the typical picture of the Eight Dance. In this icon, the cord must be as earlier.

(tat?cin?am - right side)

412.ஐந்து நிருத்தத்திற்கும், [ஆறு] நிருத்தத்திற்கும் இரண்டு கண்ணாவது; நின்றவை எல்லாவற்றிற்கும் மூன்று கண்ணாவது.

In cases of Fifth Dance and Six Dance, he must have only 2 eyes while in all other dances, he will attain 3 eyes.

413.நான்கு கையும், மூன்று கண்ணும், ஜடா மகுடமும், அபயமும், டமருகமும் வலத்திலேயாவது; அக்கினியும் கஜஹஸ்தமும் இடத்திலும்; அபஸ்மாரத்தை ஒழியப் பீடத்தில், இடக்கால் குஞ்சித்து நின்றது. அதன், முன்னே பீடத்திலே வலக்கால் சிறுவிரல் வைக்கப்பட்டதாய்; அந்தக் கால் குஞ்சிதமாய்ச் சூத்திரமும் யுக்தியினாலே லம்பிக்கப்பட்டு இருப்பதான நிருத்தம் நவம நிருத்தமென்று பெயராம்.

(நவம் — ஒன்பதாவது)

In the <u>Ninth Dance,</u> he must have four hands, 3 eyes, a crown – hair, jaṭamakuṭā, and in right hands a refuge – rendering posture and a kettle – drum while in the left ones, fire and elephant – hand, gajahastā. He spurning Apasmārā, should tread his left leg slightly bent. His little toe must be on the seat, pītā at its front portion. The bent leg and the Brahmaccūtrā both must be cared out using the limner's stratagem.

(Navama – ninth)

11. கங்காதர இலட்சணம்

414.கங்காதர லட்சணஞ் சொல்லப்படா நின்றது.

The technicalities to contour an idol of Gangādharā lakshana have been deliberated.

415.இடக்கால் குஞ்சிதமுமாய், வலக்கால் நின்றதுமா யிருப்பது.

Gangadhara's left shank should be somewhat bending while his right one gaining a firm footing.

416.[நெற்றியில்] நின்றும் வலத்திலே ஒன்பது யவை நீக்கமாவது.

The central thread should dangle through the spot situated exactly 9 yavās from the centre of forehead.

417.வலக்கண்ணில் சீமாந்தமாகவும், வலநாசா புடாந்தமாகவும், ஹிக்கையின் மத்தியத்திற்கும், நாபி வலத்திரண்டு விரல் நீக்கமாவது

The same central thread must pass through the tip of the right eye, end of the right nostril, centre of throat and 2 finders away towards right from the navel.

418.மேட்ர மூலத்திற்கும் நடுவில் நின்றும் வலத்திலே நீக்கம் விரல் நான்கு.

The self – same central cord should peragrate through the point 4 fingers aloof from the base of the male organ.

419.இரண்டு குதிகளுக்கும் நடுவாகப் பிரம்மச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The statuary would allow the Brahmaccūtrā to dangle through the midpoint between the two heels.

420. நதமான விரல் நான்கு; பாதாங்குஷ்டத் துவயோரந்தரம் விரல் பதினெட்டு

(நதமானம் - வளைவதால் ஏற்படும் குறைவு;

பாதாங்குஷ்ட = பாத + அங்குஷ்ட;

துவயம் - இரண்டு)

The diminution in the measure of the icon will be given by fingers 4 and 18 fingers gap must keep aloof the two great toes.

(natamāṉam – decrease due to shrink;

patāńkushṭa = pāta + ańkushṭa;

dvayam – two)

421. அத்தை மூன்று செய்து குதிகள் நடுவாவது.

The gap seen whileom namely 18 fingers should be segregated into 3 equal parts and 1 part thereof must be the distance between the two heels.

422. வலத்திலே பூர்வ ஹஸ்தம் வரதமாயத் தேவியினுடைய முகத்தை ஆச்ரயித்து இருப்பது. இடப்புறத்திலே பூர்வ ஹஸ்தத்தினாலே தேவியை ஆலிங்கனம் பண்ணியிருப்பது.

Devi's visage will be gently touched with the front – hand of the right side while she must be embraced nicely with the front – hand of the left side of Siva.

423. தட்சிணத்தில், அஸ்தத்தினாலே ஜான்னவியோடுங் கூடியிருக்கிற சடையை உஷ்ணீஷாந்தமாக எடுக்கப்பட்டு இருப்பது; இடத்தில் பரஹஸ்தம் மான்கன்று தரித்திருப்பது.

(ஜான்னவி – கங்கை)

The right reverse side hand should caress the lock of hair along with GaṅGā when his reverse – hand of same side must wield deer.

(jannavi – GaṅGā)

424. தேவனுடைய [இடது] பார்சுவத்திலே தேவியானவள் இருப்பின் முகத்தை உடைத்தா யிருப்பது.

Devā must be looking at the countenance of Devi who will be at his left.

425. இடக்கால் நின்றதாகவும், வலக்கால் குஞ்சிதமாகவுஞ் செய்வான்.

Devi's left leg should gain straight footing while her right leg, gaining a wee bend.

426. சமபங்கத்திலே சூத்திரத்தைக் கற்பிப்பான்.

The mason would denote the thread in a 'slightly bend' pose.

427. வலக்கை நீட்டப்பட்டு, இடக்கை புஷ்பம் பிடித்ததாக இருப்பது.

Her right hand should be allowed to a hanging posture while her left one holding a flower.

428. அன்றியே, வலக்கை முன்கை குறுக்காக இருப்பது; சுரோணிக்குக் கீழ்த் தலத்திலே வஸ்திரத்தைப் பிடித்ததாக இருப்பது.

Or, her right front – hand must be touching the saree just below her belly.

429. எல்லா ஆபரணங்களோடுங் கூடி, எல்லா அலங்காரங்களோடுங் கூடின கௌரியைச் செய்வான்.

The Viswakarma craftsperson would make the icon of Gauri pinked with all varieties of ornaments, jewels and finery.

430. வலப்புறத்திலே கங்கையுமாய் ரிஷிகளாலே பிராபிக்கப்பட இருப்பது

Gaṅgādharā must wield Gaṅgā on his tress at right while the prodigies adoring him.

431. கங்காதரலட்சணம் இப்படிச் சொல்லித், திரிபுராந்தகலட்சணஞ் சொல்லப்படா நின்றது.

Gaṅgādharā's mances thus contemplated, now Tiripurāntakā has been taken up for sketch.

12. திரிபுராந்தக மூர்த்தி இலட்சணம்

432. மூன்று, நான்கு, ஐந்து விரலடவே நதமானமாவது.

Length decrease due to bending will be fingers 3, 4 or 5.

433. பாதாங்குஷ்ட தவயங்களுடைய நடு நீக்கம் விரல் பதினாறு.

The two great toes should fall apart leaving a gap of fingers 16.

434. அத்தை ஆபங்கமாக அறிவான்; சமபங்கம் விரல் பதினெட்டு; அதிபங்கம் விரல் இருபது.

The measure advocated whileom holds good for 'slight bend'. For 'medium bend', it must be fingers 18 and for 'great bend', 20.

435.மூன்றிலொன்று பார்ஷ்ணிகளின் நடு நீக்கமாவது

One third measure understood above should measure out to be the distance between the two heels.

436. உஷ்ணீசத்தில் வாமப் பார்சுவத்திலும் புடாந்தத்திலும், ஹனுவினுடைய வாமத்திலும் லம்பித்து, வலமுலை யிடப் பார்சுவத்திலும், நாபிக்கு வலப்பார்சுவத்திலும், இடது துடையில் வலப்புறத்திலும், வலக்காலில் பார்ஷ்ணியினுடைய வாமப்பார்சுவத்திலும், பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

(ஹனு – முகவாய்க்கட்டை)

The stone – cutter would allow the Pūrvaccūtrā to peragrate through the left of vertex, left end of eye, end of left nostril, left edge of chin, left extremity of right breast and left tip of the right heel.

(hanu – chin)

437. ஆபங்கம் முற்பாடு சொல்லிப், பின்பு சமபங்கஞ் சொல்லப்படா நின்றது.

Having thus portrayed what has been identified as Abaṅgā, now Samabhaṅgā has been dilated

438. லலாட மத்தியத்திலும், நாசாக்கிரத்திலும், பாதங்களுடைய பார்ஷ்ணி மத்தியத்திலும் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான். இரண்டினிலந்தரத்தைச் சொல்லப்படா நின்றது.

The statuary would make the string known as Pūrvaccūtrā to peragrate through the centre of forehead, tip of nose and the centre of heels. Thereafter, measures between this string and various organs have been taken up for definition.

439. அந்தச் சூத்திரத்தில் நின்றும் இடப் பார்ச்வத்திலே ஹிக்காமத்தியம் விரல் ஒன்று.

The central cord metyaccūtrā should stand finger 1 away from the centre of 'khandam'.

440. அந்தச் சூத்திரத்திலே நின்று ஹிருதயம் விரல் அரை.

Hrdayā must be located half a finger distance aloof from the self – same cord.

441. அந்தச் சூத்திரத்தில் நின்றும் வலது புறத்து நாபி மத்தியத்திற்கும் விரல் இரண்டு.

The same thread namely the central thread, should keep aloof from the right navel's centre leaving a gap of 2 fingers.

442. சமபங்கம் இப்படிச் சொல்லி, அதிபங்கம் சொல்லப்படா நின்றது.

Medium bend thus designed, great bend has been taken up for rumination.

443 .உஷ்ணீசத்திற்கும் வாமப் பார்சுவத்திற்கும், நேத்ராந்தத்திலும், வாமத்தில் புடாந்தத்திலும், வலமுலை நடுவிலும் அந்தச் சூத்திரத்திற்கு நடு நீவரம் விரல் மூன்று.

The central cord should peragrate through the point 3 fingers away from left of vertex, the left end of eye and the centre of the right breast.

444 .நாபி மத்தியத்திற்கும் நடு, நீக்கம் விரல் மூன்று.

The centre of navel must be located so that fingers 3 should separate this organ from the central string.

445. அந்தச் சூத்திரத்தில் நின்றும் இட முழந்தாள் நீக்கம் விரல் அரை.

From the very same string the left knee should be available after half a finger measure.

446. இடப் புறக்காலில், பார்ஷ்ணிக்கு இடப்புறத்திலும் அந்தச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The sculptor would dangle the cord viz the central cord through the left side of the left heel.

447. திரிபுராந்தக மூர்த்தியினுடைய அதிபங்கம், உத்தமம்; சமபங்கம், மத்யமாம்; ஆபங்கம், அதர்மம் என்று பெயராம்; இப்படிச் சொல்லப்பட்டது. இதில் ஒன்றுக்கொன்று கலந்து செய்தல் ஆகாது.

The pink icon of Tiripurāntaka murty's 'great bend' is of the first water; 'medium bend' is mediocre and the little bend is the last variety; thus defined; in this, overlapping is totally eschewed.

448. வலக்கால் நின்றதாகவும், இடக்கால் குஞ்சிதமாகவும் [இருக்கும்]

His right shank should gain a firm footing on ground while his left remain slightly skewed.

449. வலத்தில் பூரவஹஸ்தத்தின் மேல் வாய் நாபிச் சூத்திர மளவாகவும், அந்த நாக்கு சிம்மகர்ணமுமாய்ப், [பாண] நடுவைப் பிடித்ததுமாய் இருப்பது.

(பாணம் - அம்பு)

The front right chiro of him should coincide with the level of the navel and must gripe a Simhakarṉa hastā wielding an arrow.

(bānam – arrow)

450. அந்தப் பாணாயாமம் விரல் நாற்பத்திரண்டு.

(வடமொழி மூலத்தில் 'சப்ததசாங்குலம்' என்றே உளது; இதன்படி, 70 அங்குலம் என ஆகிறது; பாண நீளத்தை நோக்க 42, 70 இரண்டுமே தவறானதாகவே ஆகும்)

That arrow should have a length of fingers 42.

('Sapta tacāṅgulam' is the Sanskrit text which implies 70 fingers. But, both 42 and 70 seem to be a wrong measure when an arrow's length is taken into account)

451. அந்த அம்பு தேவேசனுடைய சிறுவிரல் பருமையாயிருப்பது.

That arrow must have a girth equal to that of Siva's little finger.

452. அம்புத் தானத்தினகலம் விரல் ஐந்து; உயரம் விரல் ஐந்து.

The pointed edge of the arrow should have a breadth of 5 fingers while its height, ditto.

453. புச்சம் உயரம் விரல் ஐந்து; மூன்றுவிரற்கடை [அகல] முடைத்தாயிருப்பது.

(புச்சம்-வால்)

The tail of the arrow will have a length of fingers 5 when its breadth, 3.

(puccam – tail)

454. இடக்கையிலே வில் பிடித்திருப்பது; அந்தக் கை கட்சாந்தமாக அதற்கு மேல் ஒன்று, இரண்டு, மூன்று விரல் அதிகங் கொள்வான்: அம்புக் கர்ணாந்தமாவது நூற்றிரண்டு விரல் நீளமாவது: இதற்கு மேல், மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது ஏற்றினால் இந்த விரல்கள் குறைந்தால் கொண்ட வில் நீளம் ஒன்பது விதமாம்.

He should gripe the bow in his left chiro up to the level 1, 2 or 3 fingers above the armpit. The bow's length must be of 102 fingers. By altering the height of bow by 3, 5, 7 or 9 fingers, increasing and decreasing every time, nine types of bow can be attained.

455. அந்த வில், பூர்ணமான முஷ்டிக்கு உள்ளடங்கின பருமையாய், நடுவிற்கு நுனிகள் அடைவேறினதாய், நுனி பாதிவிரல் பருமையாய் அம்பின் பருமையில் மூன்றிலொன்றாவது.

(பாதிவிரல் - நடுவிரல்)

The girth of bow should be confined to the inner hollow of the first while its twin ends go tapering from mid point. The tips of bow should have a girth equal to that of the middle finger which must tally the measure, namely 1/3 of the girth of arrow.

(pāti viral – mid finger)

456. வில்லின் நீளத்தை எட்டுச் செய்து, இதில் ஏழு கூறு கொண்ட நீளம், நாணின் நீளமாவது.

Having pared the total length of bow into 8 equal parts, with 7 parts thereof the length of bow – string should be secured.

457. அந்த நுனிக்கீடான வில் வளைவை யுடைத்தாயிருப்பது.

The bow must have a bend proportionate to and in accordance with its tip.

458. மூன்று வளைவோடே கூடித் துலக்க வில்போல வளைக்குதல், இளம்பிறை போல வளைக்குலா யிருப்பது.

The bow can have 3 bends or 1 bend; the latter will evince an elegant look of a crescent.

459. வில்லின் வடிவு இப்படி; வடிவு லோகத்தினாலேயாதல் மரத்தாலேயாதல் செய்வான்.

That was the contour of the bow; The aforesaid bow can be materialized by the skilled artisan either out of metal or of wood.

460. பர ஹஸ்தங்களிரண்டிலும் மழுவும் மானுமாவது.

The back side twin hands must gripe war – axe and hart.

461. வலக்கையிலே மழுவும், இடக்கையிலே மானுமாவது.

The right hand should gripe a battleaxe while the left, a hart.

462. சடாமகுடமுமாய்ச், சர்வாபரணப் பூஷிதமுமாய்ச், சிவந்த நிறமுமாய், இடப்புறத்திலே கௌரியுமா யிருப்பது திரிபுராந்தகப் பிரதம மூர்த்தி என்றறிவான்.

The statuary would know that the first Tiripurāntaka mūrty will shine with a hue of red, bedecked with all ornaments and finery wearing a heir – crown, jatāmakut in tandem with Gauri on left.

463. அந்த மூர்த்திதானே இடக்கால் முயலகனை மிதித்ததாய், நின்றதெல்லாம் முன்போலச் செய்யப்பட்டது.

(இது இரண்டாவது மூர்த்தி)

The self – same mūrty will be trampling with left shank on Muyalakā; The rest nuances as defined whileom.

(This is the second mūrty)

464. அந்த விக்கிரகம், இடக்கால் முயலகனைச் சிரசிலே மிதித்ததாகவும், நின்றவை முன்போலச் செய்கிறது நான்காம் பேதமென்றறிவான்.

(மூன்றாம் மூர்த்திக்கான தமிழ் உரை தெளிவாக இல்லை)

The lord trampling on Muyalka's head with left shank and rendering other gesticulations as whileon is termed as the fourth mūrty.

(The third one is not clear in Tamil commentary)

465. கடியிலிருக்கும் பாணம் பிடித்த கைக்கும், மத்திய ரேகைக்கும் விரல் பதினாறு, பதினைந்து, பதினான்கு, பதிமூன்று, பன்னிரண்டு, பதினொன்று ஆக ஆறுபடி சொல்லிற்று.

(கடி - இடுப்பு)

The hand on hip griping arrow must be separated from the central pendent maintaining a distance of fingers either 16, 15, 14, 13,12 or 11 in between.

(kaṭi – hip)

466. அந்த நீவ்ரம், கட்சத்தில் நின்றும் மணிபந்தத்திற்கு நீவ்ரமும்; அந்தக் கரத்திலே நின்றும் கோர்ப்பரோத் தாமத்தில் நின்றும் ஹிருதயாந்த மளவாகவும், நீக்கம் விரல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து நதமானமுமாவது; இது எல்லாவற்றிற்கும் சாமானியமாக அறிவான்.

(கோர்ப்பரம் - முழங்கை)

The aforesaid gaps are maintainable between the wrist and the arm – pit of the hand holding the bow. The elbow of left hand should be on par with the level of chest or lower than that by 1, 2, 3, 4 or 5 fingers. This technique holds good in common for all varieties of Tiripurāntakā icons.

(kōrpparam – elbow)

467. அந்தப் பூர்வ ஹஸ்தங்களிரண்டும் கடகா முகங்களுமாய், இருதய மளவாய் இருப்பது.

The obverse twin arms evincing crab – posture, should be kept in level with the chest.

468. இடமாகவும் வலமாகவுமிருக்கிற கையிரண்டும் அளவே மேனோக்கியும் கீழ்நோக்கியும் இருப்பது.

The left and right hands must remain facing upward and downward respectively.

469. வலக்கை அம்பினடியைப் பிடித்ததாகவும், இடக்கை அம்பின் நுனியைப் பிடித்ததாகவும் செய்வான்.

The hewer would carve out as the right arm griping the bottom of the arrow whilst the left its acme.

470. வலப்புறத்தில், பர ஹஸ்தத்தில் மழுவும், இடப்புறத்தில் பரஹஸ்தத்திலே வில்லுமாகச் செய்வான்.

In reverse side hands, the right one must wield a battleaxe when the left one, bow.

471. அந்தக் கை மிருகதரமாகிலுமாம்; இடப் பாரிசுவத்திலே கௌரி யோடுங் கூடியிருப்பது.

The right arm may also gripe a hart when Gauri is in tandem with him on left.

472. அபஸ்மாரமன்றியே இருப்பது; நதமானம் முன்போலவும் செய்வான்.

The hewer would sculpt him even without Apasmārā keeping the diminution as whileom.

473. இப்படி, நான்கு புஜத்தோடுங் கூடியிருக்கிறது ஐந்து பேதமாக இருக்குமென்றறிவான்.

In this fashion, the four – handed Tiripurāntakā will be in five patterns.

474. அதிபங்கமுமாய், எட்டுக் கையுமாய், அம்பும் மழுவும் வாளும் வச்சிரமும் வலப்புறத்திலேயாவது, வில்லும், [விஸ்மயமும்] கேடகமும், கடகமும் இடப்புறத்தில் [பூர்வ உறஸ்தத்திலே] நின்றும் கராந்தமாவது.

('பூர்வச் சூத்திரத்திலே நின்றும்' என வடமொழிச் சுலோகத்தில் உள்ளது திருத்தத்திற்கு உரியது)

Greatly skewed, with 8 arms, seizing arrow, war – axe, sword and thunderbolt at right wing, arresting bow, wonder – gesture, shield and crab – sign at left side counting from front – arm – is another design of this mūrty.

(The Sanskrit text, 'beginning from Pūrvaccūtrā' needs correction)

475. [ஆயுதங்களின்] துங்கமானம், அந்தம் கூடினதாகச் செய்வான்; இது ஆறாவது அவதாரம்.

The artificer would hew the weapons partly; this is the sixth structure.

476. சப்தமமானது பத்துக் கையோடு கூடியிருப்பது

The seventh contour should possess 10 arms.

477. அம்பும், சக்கரமும், சூலமும், [மழு, வஜ்ராயுதம்] இவைகளும் வலப்புறத்தில் கை ஐந்திலும் தரிக்கப்பட்டவை.

The five hands at right should carry the instruments of warfare arrow, wheel, trident, war-axe and thunderbolt.

478. வில்லும், சங்கும், சூசியும், [விஸ்மயமும்] கேடகமும் இடப்புறத்துக் கையில் தரித்து, அதிபங்கமுமாம்.

(சுவடித் தமிழ் உரையில் டமருகமும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது)

The left arms will be arresting bow, conch, needle - gesture, awe - gesticulation and shield; the icon whole must be, in this pattern, greatly skewed.

(in Tamil exposition, kettle – drum has also been listed among)

479. அந்த விக்கிரகம்தானே, வலமுழந்தாளில் மேலே இடக்காலை வைத்துத், தேரின் மேலே நின்றதாய்த், தேரின் முகுளம் கயிற்றாலே கட்டப்பட்டு, முகுளத்தில், உள்வாயிலே, பிரம்மா நான்கு முகத்தோடுங் கூடி நான்கு கைகளுமாய், வலக்கைகள் இரண்டும் தண்ட கமண்டலமும், இடக்கைக ளிரண்டும் குண்டிகையும் தாமரைப் பாசத்தையும் பிடித்ததாய், இந்த முகுளத்தின் கீழே வெண்மை நிறமான விருஷபமும் தேரின் மார்க்கத்திலே ஓடுகிறதாகவும் கற்பிக்கப்பட்டது ஏழாம் பேதமாம்; எட்டாம் பேதம் சொல்லப்படா நின்றது.

In this icon, He will be resting His right shank on left knee, residing on a car. In the bud – like organ of the car, Brahma should be carved out who will be arresting a water – pot and a bamboo bludgeon with right arm and with left one a nozzled pitcher and a lotus – noose. Below the bud – like portion of car must be available a bull in a running posture which should be towards the direction of the run of the car. This is the Seventh classification. Now Eighth kind will be illuminated.

480. பவளநிறம் போலே சாத்விக ராஜச மிச்ரமுமாய், எல்லா ஆபரணங்களோடும் கூடி, ஒரு முகமும் மூன்று கண்ணும், இடப்புறத்திலே உமாதேவியும், முன்சொன்ன விதிப்படியே செய்யப்பட்டதுமாய் இருக்கிறது எட்டாம் பேதமென்றும், இவையெல்லாம் திரிபுராந்தகமூர்த்திக்குச் சாமானிய லட்சணமென்றறிவான்.

(மிச்ரம் - கலவை)

In the Eighth model of icon, he must attain an effulgence of coral along with the qualities, goodness and passion mixed; He will be beseemed with ali ornaments and finery possessing 3 eyes and 1 countenance, in tandem with Uma devi on left. And there are all general characteristics for the image of Tiripurāntaka mūrty.

(Misram – mixed)

13. கல்யாண சுந்தர இலட்சணம்

481. அனந்தரம் கலியாண சுந்தர இலட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, Kalyāṇasundarā's contour has been illuminated.

482. லலாட மத்யத்தில் நின்று இடத்திலும், வாம நேத்திராவசானத்திலும், வாமநாசா புடாந்தத்திலும், ஹிக்கா மத்தியத்திலுமாகப் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

(லம்பிப்பான் - தொங்க விடுவான்)

The hewer would allow the Pūrva cord to peragrate through the latitudes namely the left of forehead, left end of the left eye, the left edge of the left nostril and the centre of neck.

(lambippāṉ – he would dangle)

483. இதனுடைய அங்கம், சமபங்கம் யாதொருபடி, அப்படியாவது

The hiatus between the Pūrvaccūtrā and the various organs of this icon should be assigned as executed for 'medium skewed'.

484. நின்றது வாமப்பாதமும், வலக்கால் குஞ்சிதமும் ஆவது

His firmly treading straight leg will be the left one while the right shank slightly skewed.

485. வலத்தில் பூர்வ ஹஸ்தம் கௌரியினுடைய [வலது] ஹஸ்தத்தைப் பிடித்ததாகவும், இடக்கை வரதமாகவும், பரஹஸ்தத்தில், வல ஹஸ்தத்தில் [மழுவும்] வாமஹஸ்தத்தில் மான் கன்றுமாவது

The obverse right arm should be seizing the right hand of Gauri and the same side left one must flaunt a gesture of boon – showering. And the back right hand will be bedecked with a war – axe when the same wing left arm arresting a hart.

486. சடாமகுடத்துடன் கூடிப், பவள நிறமுமாக இருப்பது

He will be wearing jaṭāmakut hair – crown, effulgent with the hue of coral.

487. சம்புவினுடைய [வலத்தில்] முன் சொன்ன மானத்தோடுங் கூடி இருப்பாளுமாய், உத்பலத்தை இடக்கையிலும், வலக்கையாலே [சம்புவைப்] பிடித்ததாய், லஜ்ஜையினாலே கவிழ்ந்த தலையோடு இருப்பாளுமாய்ப் பார்வத்யனுகதாச்ரிதனாய்ச் சர்வாபரணப் பூஷிதம்.

(லஜ்ஜை - நாணம்;

பார்வத்யனுகதாச்ரிதன் - உடனிருக்கும் பார்வதியைத் தொட்டபடி)

On the right side of Cambu (Siva) will be found a place by Pārvati who abashed with lily in left hand touching Siva with her right arm, must be beseemed with all types of ornaments and finery.

(lajjai – delicacy;

pārvatyan̲ukatācriyan̲- touching parvati who is adjacent to him)

488. சர்வாபரணப் பூஷிதங்களான இலட்சுமியும் பூமிதேவியும் தங்களுடைய கையினாலே, கௌரியினுடைய கடிப்பிரதேசத்தை ஸ்பரிசித்திருப்பது.

(வடமொழி மூலத்தில் இலட்சுமி, பூமிதேவியைச் சுட்டும் சொற்களே இல்லை; எனவே, சிவனின் கையே கௌரியின் இடுப்பைத் தொட்டது எனக் கோட வேண்டும்)

Lakshmi and Earth Goddess both graced with all jewells and finery, with their arms, touched Gauri at Her hip.

(In Sanskrit text there is no indication of Lakshmi and Earth Goddess; so only Siva is touching Gauri's hip, it should be interpreted)

489. பிரம்மாவானவன், சம்புவினுடைய முன்பே குண்டத்திலே ஓமத்தைச் செய்விக்கிறதாகச் செய்வான்.

The artificer would sculpt Brahma as performing a burnt sacrifice in front of Cambu (Siva).

490. சம்புவினுடைய ஸ்தனச் சீமாந்தம் பிரம்மாவிற் குயரமானது.

(சீம+ அந்தம் = சீமாந்தம்; எல்லை (முடிவு)

The height of Brahma should be on par with the level of the chest of Cambu.

(Cīma + antam = Cimāntam; end of territory)

491. நான்கு கையும், நான்கு முகமும் சர்வாபரணப் பூஷிதமா யிருப்பது

Brahma will be having 4 countenances and 4 arms bedecked with all finery.

492. இடப் புறத்திலும், பரஹஸ்தங்களிலே, குண்டிகையும், அட்சமாலை-யுமாவது.

The back side left hands must be beseemed with a nozzled pitcher and a rosary of the seeds of elaeocarpus.

493. பூர்வ ஹஸ்தங்க ளிரண்டிலும், கிரமத்திலே, ஸ்ருக் ஸ்ருவங்களுமாவது.

In the twin front hands, Brahma will be holding a 'sruk' and a 'sruvam' the former in the right and the latter in the left which are two different kinds of ladles made of wood.

494. பிரம்மாவானவன் பத்மப்பீடத்திலே வடக்கே நோக்கியிருப்பது.

Brahma must be sitting on a lotus – seat facing north.

495. தேவியும் தேவரும் கிழக்கே நோக்கியிருப்பது; தேவி, தேவனுடைய வலப்புறத்திலே இருப்பது.

Pārvati and Sivā both should face east; Devi, must be preset to the right of Sivā.

496. விஷ்ணுவானவர் ஹோமத்திற்கு வட பார்சுவத்திலே, தெற்கு நோக்கின முகமாய் இருப்பது.

Vishnu, facing south, must be available on the north of hōmā.

497. சம்புவினுடைய நாபிச் சீமாந்தம் உத்தமம்; ஸ்தனாந்தம் அதமம். அந்த இரண்டிற்கும் நடு எட்டுச் செய்து, ஒன்பது பிரமாணமாம் விஷ்ணுவினுடைய உயரம்.

If the height of Vishu equalises the height up to the level of the navel of Sivā, it is of first water; when it is up to the chest, it is of the last variety. The intermediate gap between these two distances should be segregated into 8 parts to get, in toto, 9 varieties of Vishnu's icon.

498. சியாம வர்ணமுமாய்ச், சங்கு சக்கரங்களைப் பர ஹஸ்தங்களிலே தரித்து இருப்பது.

Of black hue, Vishnu will be arresting conch and quoits with His rear side hands.

499. தண்ணீராலே நிறைக்கப்பட்ட பொற்கரகத்தைப், பூர்வ ஹஸ்தங் களிரண்டினாலும் பிடித்துப், பரமேச்வரருடைய [வரத] ஹஸ்தத்திலே உதகப்பூர்ணமாகக் கொடுக்கிறதாக இருப்பது.

(உதகம் - நீர்)

Water – filled gold pot should be held by Vishnu by front side hands, pouring water on the right hand of Paramēshwarā.

(utakam – water)

500. அநாதியா யிருக்கிற கோத்திரத்தை உடைய பரமேச்வரனுக்கு, ஆதிகோத்திரத்தில் ஜனித்து இருப்பாளான கௌரியாகிய உமையைத் [தருவார்] ஹரியென்றறிவான்.

The hewer would know that Hari will give Uma celebrated as Gauri, of āti gōtrā, in marriage, to Paramēswarā, of undefined gōtrā.

501. வித்யேச்வரர்கள், லோகபாலர், சித்தர், யட்சகணங்கள், ரிஷிகள், கந்தருவர்கள், சப்தமாதாக்கள் மற்றுள்ள தேவர்கள், அவர்கள் தந்தன் [மார்பில் கைகூப்பி] இருப்பது.

Vidyādaras, demigods, Regents of eight cardinal points, Prodigies, Servand – deities, Sages, Celestial choristers, Seven mothers etc gods will be, keeping folded chiros against chest, worshipping on the scene.

14. அர்த்தநாரீசுவர மூர்த்தி இலட்சணம்

502. அன்றியே, வலக்கால் குஞ்சித்து, இடக்கால் நின்றதாகிலுமாம்

(இந்த மூர்த்தியின் முன் விளக்கம் சுவடியில் இலது)

Or, this right shank can be in a bent state while his left trampling straight on floor.

(Previous illumination of this icon is not available in manuscripts)

503. வலக்கை சூலமும், இடக்கை புஷ்பமும், வலக்கை வரதமுமாய், [இடக்கை] விருஷபத்தின் தலையிலே வைக்கப்பட்டிருப்பது.

His right twin arms should be, each one, seizing a trident and wearing a gesture of boon – showering while His left two hands must be, one each, wielding a bloom and touching the head of bull.

504. வலக்கை கபாலத்தோடுங் கூடினதாய், இடக்கை நீட்டினதா யிருப்பது

In case of twin arms, the right one must support a skull while the left stretched.

505. வலக்கண் குரூரமாய், இடக்கண் குளிர்ந்ததாய் இருப்பது

The right will be exhibiting vehemence while the left, benevolence

506. வலத்தொடை நடுவாக இருப்பது, வெண்பட்டு; குல்ப மளவாக . நாலுப்பட்டிருப்பது.

(நாலு – தொங்கு)

His attire silk, pure white, should reach the centre of right thigh when at left it must touch the root of ankle of left shank.

(nālu – hand)

15. கஜசம்ஹார மூர்த்தி இலட்சணம்

507. அனந்தரம் கஜவதனமூர்த்தி இலட்சணம் சொல்லப்பட்டா நின்றது

Thereat, the contours for Gajavatana mūrty has been defined

508. லலாட மத்தியத்திலும், ஸ்தன மத்தியத்திற்கு இடப்புறத்திலும், ஸ்பிக்பிண்ட மத்தியத்திற்கும் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The statuary would permit the string designated as Pūrvaccūtrā to peragrate through the latitudes – the centre of forehead, the left to the centre of chest and the centre of buttocks.

509. அந்தச் சூத்திரத்தில் நின்றும் இடக்காலின் குதிகுண்டு நீக்கம் விரல் முப்பத்தியெட்டு; இருபத்தாறு ஆகிலுமாம்.

(குதிகுண்டு – குதிங்கால்; அரிய சொல்)

The heel must find a spot 38 fingers aloof from the aforesaid cord; Twenty six is also admissible.

510. அந்தச் சூத்திரத்தில் நின்றும், இடப்புறத்திலே வலக்காலிலே பெருவிரல் நீக்கம் விரல் இருபத்தொன்பது, பத்தொன்பது ஆதலாவது

To the left of the self – same string, the great – toe on the right shank must keep a distance fingers 21 or 19.

511. எல்லா ஆபரணங்களோடுங் கூடி நான்கு கைகளாதலாவது

Bedecked with all jewels and ornaments, He will stand majestically beseemed with 4 arms.

512. நான்கு கைகளாகில், வலத்திலே பாசமும் கஜசர்மமுமாவது

If He has 4 arms, noose and pachyderm's skin must be held in His right hands.

513. இடத்திலே யானைக் கோடாக நின்றதும் சர்மமாவது

In His left arms will be available tusk and pachyderm's hide.

514. சதுர்ப் புஜம் சொல்லி, அஷ்டப் புஜம் சொல்லப்பட்டா நின்றது.

Having defined the four – armed, now eight – handed has been contemplated.

515. சூலமும் டமருகமும் [பாசமும்] கஜ சர்மமும் வலத்திலே ஆவது

At right, must be bedecked with trident, kettle – drum, noose and pachyderm's hide.

516. யானைக் கொம்பும், கபாலமும், [யானைத் தோலும்], [விஸ்மயமும்] இடத்திலே என்றறிவான்.

In His left arms must be distributed a tusk, a skull, a pachyderm's hide and a gesticulation of 'wonder'

517. இப்படிப் பார்சுவத்து நான்கு கைகளாகக் கற்பிப்பான்.

In this pink pattern, the hewer would assign the left four hands.

518. சம்புவினுடைய இடக்காலின் கீழே யானைத் தலையாவது.

Below the left shank of Cambu (Sivā), the pachyderm's forehead must be distributed.

519. பார்சுவங்களிலே கால்களை யுக்தியினாலே செய்வான்.

At sides, the articificer would design the legs of pachyderm using his stratagem.

520. [தோலைப்] பிரபா மண்டலம் போலச் செய்வான்.

The remaining portion of the skin of pachyderm will be uitlised by mason to carve out an aura.

521. புலித்தோலோடு கூடியிருக்கிற வெண்பட்டுடை, எல்லா அலங்காரங்களோடுங் கூடிச் சிவந்த நிறமுமா யிருப்பது.

This murty must be effulgent a hue of red bedecked with tiger's hide and white silk garb apart from finery.

522. இப்படிச் சொல்லி, இரண்டாவது சொல்லப்படா நின்றது

Thus ruminated, the nuances for the Second type of icon of the same Lord have been exhausted.

523. சூலம், வாள், தோல், கொம்பு இவை வலத்திலேயாவது.

To His right arms will be allotted, a trident, sword, pachyderm's hide and a tusk.

524. கபாலம், கேடம், மணி சர்மம் இடத்திலே ஆவது

In His left hands must be submitted a skull, a shield, a bell and a pachyderm's hide.

525. லலாட மத்தியத்திலும், நாசாக்கிரத்திலும், வலமுலை நடுவு, வலத்தில் ஸ்பிக் பிண்டத்தின் நடுவே, பிரம்மச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The stone – cutter would allow the Brahmaccūtrā to peragrate through the centre of forehead, tip of nose, the middle of the right breast and the centre of the right butt.

526. யானைத் தலைமேல் இடக்கால் நின்றதாக இருப்பது.

His left shank will be strampling on the head of pachyderm.

527. வலக்கால், எடுக்கப்பட்டு இருப்பது.

His right chiro should be set in a lifted posture.

528. அந்தக் காலில் பார்ஷ்ணிக்கும் [ஸ்பிக் பிண்டத்திற்கும்] நடு, நீக்கம் விரல் நான்கு.

In the aforesaid shank, the heel must be located exactly after fingers 4 from the butt.

529. அந்த முழந்தாள், இடக் கட்சத்தின் சீமாச் சூத்திரமளவாக இருப்பது.

That knee's attitude must be on par with the armpit's central cord.

530. யானை உரித்த விக்கிரகம் இரண்டு விதமாகச் சொல்லப்பட்டது.

The idol celebrated for peeling off the rind of pachyderm was thus ruminated.

531. [தோள் மட்டத்தில்] தேவி ஈஸ்வரனுக்கு இடப்புறத்திலே அபயத்தோடே கூடினதாய் இருப்பது.

Dēvi will be in tandem with Iswarā, on His left, graced with a gesticulation of refuge – showering hand.

532. இப்படிக் கற்பிக்கப்பட்ட பிம்பம் இராசராஷ்டிரங்களுக்கும் விசயத்தைப் பண்ணும்.

Image tooled in this mode will mete out victory to king and his subjects.

16. பாசுபத மூர்த்தி இலட்சணம்

533. அனந்தரம் பாசுபத லட்சணஞ் சொல்லப்படா நின்றது.

Thereafter, characteristics of the idol of Pasupaty have been elaborated.

534. ஸ்தானகம் சமபாதமாய்ச், சந்திரசேகர இலட்சணம் போல இருப்பது.

As in the contour of Candrasēkharā, this idol also will be standing gaining firm and straight footing on ground without any showing in leg.

535. மூன்று கண்ணும், நான்கு தோளும், சௌம்ய மூர்த்தியுமாய் மேலே நோக்கின கேசமுமாய்ப் பெரிய விக்கிரகமா யிருப்பது.

Graced with a suave massive frame, this image will be beseemed with 3 eyes and 4 shoulders.

536. அபயமும் சூலமும் வலத்திலே ஆவது.

Pāsupata mūrty must arrest a refuge – rendering gesture and a trident in His right arms.

537. [வரதமும்], அட்சமாலையும் இடப்புறத்திலு மாவது.

In this left hands He will be holding a boon – issuing gesticulation and a garland made of the seeds of elaeocarpus.

538. பவளம் போலே நிறமும், குளிர்ந்த கண்ணும் எல்லாவாபரணமும் கூடிச், சற்றே சிரித்த முகமா யிருப்பது.

Shining with a complexion like coral, adorned with graceful eyes, this lord will be pinked with a smiling countenance.

539. நின்றதாகலும் இருந்ததாகிலும், இந்தப் பிம்பம் நித்தியோத்சவத்தின் பொருட்டாம்.

This pink idol, intended for quotidian worship, can be either in a status of sitting or standing.

540. அக்கினி போல நிறமும், சிவந்த கண்ணும், வளைந்த புருவமும், கூரிய எயிறும், வியாழ யக்ஞோபவீதமும், ஜ்வலிக்கிற அக்கினி போலச் சிகையும், சிவந்த புடவையும் சூலத்தைக் கீழ்நோக்கிப் பிடித்த இடக்கைக் கபாலமும்; அன்றியே, வரதமும் அபயமும் அன்றியே, வலக்கைகளில் சூலமும் சூலாக்கிரமும் குறுக்காகப் பிடிப்பது.

(அன்றியே – அல்லது; அன்றியே – அல்லாமல்)

This lord, of hue like fire, pink – eyed, with bow – like eyebrows and sharp teeth, donning gold sacred – thread and a red silk attire, wielding a glossy hair shining like fire, will arrest in his left arms a trident upside down and a skull. Or, fending boon – rendering and refuge – issuing gesticulations, he will seize, instead, in his right hands, a trident in a horizontal attitude.

(an̠riyē – or; an̠riyē – without)

541. அதுதானே வலப்புறத்திலே பரசுவும், இடப்புறத்திலே கட்கமும், மூன்று விதமாய்; இது பாசுபத ரௌத்திரமாம். இது பலிலிங்கத்திலே பூசிக்கப்படும்.

The self – same Lord may gripe in his reverse side hands, a battleaxe in the right and a dagger in the left making the His types three. This is acclaimed as Horrendous Pasupata Lord who is worshiped at Paliligā.

542. [தியான] பூஜா நிமித்தம் இந்த மூர்த்தி சொல்லப்பட்டது.

This has been recommended for the worship during mediation.

543. இந்த மூர்த்தியை ஒருக்கால் தியானிக்கிலும் எல்லாச் சத்ருக்களும் நாசமாம்.

All sorts of enemies and evils will be extirpated when this God is mediated even in single occasion.

544. இந்த மூர்த்தியை [மனதினாலே] பிம்பமாகச் செய்வான்.

The hewer would not tool this lord's image, but he would earmark this contour only to mediate on.

17. கங்காள மூர்த்தி இலட்சணம்

545. அனந்தரம் கங்காள மூர்த்தி இலட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, the norms of the contour of the Kaṅgāḷa mūrty has been proffered.

546. இரண்டு கால்களுக்கும் மரவடியோடே கூடியிருப்பது; இடக்கால் நின்றதாகவும், வலக்கால் பலத்தால் நடக்கைக்குச் சற்றே எடுத்ததாயிருப்பது.

His two shanks will be pinked with wooden slipper while his left one gaining firm footing on ground and the right just raised up preparatory to walk.

547. வெள்ளை நிறமும், எல்லா ஆபரணத்தோடே பூஷிதமும், சிவந்த கஞ்சுகமும், சடாமகுடமும், இடப்புறத்திலே ஊமத்தம்பூவும் பாம்பும், வலப்புறத்திலே பிறையும், சிரித்த வாயும், பாடப்பட்ட கணங்களினாலே சேவிக்கப்பட்டது; சற்றே காணப்பட்ட பல்லும், விளையாட்டினாலே பாடப்பட்ட சிருங்காரத்தோடே கூடின வாயும் இப்படிக் கற்பிப்பான்.

The artificer would construct this god as, pinked with all ornaments, of white hue, donning white attire, wielding hair – crown jatāmakut, graced with the flower Xanthium Orientale and cobra at left wing, a crescent at right side, sporting a gleeful countenance, adored by pantheon, with teeth blatantly thrown to view, and with mouth rendering saturnalia.

548. காதுகள் குண்டலங்களோடுங் கூடி, இடக்காது சங்கத்தோடுங் கூடியிருப்பது.

The left ear will be adorned with either ear –jewel called kudalās or stud made out of conch known as cankattōt?u.

549. பூர்வ ஹஸ்தத் துவயங்களில், இடத்திலே டமருகமும் வலத்திலே பிரஹாரமுமாய் இருப்பது.

(துவயம் - இரண்டு)

In the twin obverse arms, kettle –drum will be griped in left hand when a baton in right.

(dvayam – two)

550. மானின் முகத்திலே [புல்] வியாபிக்கப்பட்டு இருப்பது

From the mouth of hart should be protruding grass.

551. இடக்கை பிஞ்சமும் கங்காளஸ்தியும் தரித்திருப்பது

(பிஞ்சம் - மயில் தோகை;

கங்காளஸ்தி = கங்காள + அஸ்தி; கங்காளம் - பிணம்; அஸ்தி – எலும்பு)

Plumage of peacock will be in His left arm in which must be also present skeleton of a corpse

(piñcam – plumage of peacock;

kaṅkālasti = kaṅkāḷa + asti; kaṅkāḷam – corpse; asti – bone)

552. அந்தக் கங்காளம் தோளிலே போட்டதாகச் செய்வான்.

The mason would cast about to set the corpse on the shoulder of the God.

553. இது கங்காளமென்று இடக்கை, இடத்தோளிலே வைக்கப்பட்டு இருப்பது.

The corpse designated as kaṅkāḷam will be laid over the left shoulder and the left arm.

554. ஆகாரத்தோடு கூடியிருக்கிற அநேகப் பூஷணங்களினாலும், அநேக ஸ்திரீகளினாலும் சேவிக்கப்பட்டு இருப்பது.

(ஆகாரம் - உருவம்)

This contour of Lord, graced with shapely jewels, will be venerated by women

(ākāram –shape)

555. பலிப் பாத்திரத்தைச் சுமந்த பூதம் இடப்புறத்திலே முன்னே போவது.

A goblin carrying a sacrificial vessel should walk, ahead in the left wing.

556. சட்டுவத்தாலே, அந்தப் பாத்திரத்திலே பிச்சை இடுக்கிற பெண்களாக இருப்பது.

A handful of ladies will be holding out arms into that pot.

557. சற்றே காணப்பட்ட யோனியாய், அத்தோடே கூடின புடவையுமாய் முகமுமுடைத்தாயிருப்பது.

The abashed women's saree will be slightly gliding out of their body sporting a view of their female organ out.

558. நெற்றி இடப்புறத்திலும், அந்த நேத்திராந்தத்திலும், அந்தப் புடாந்தத்திலும், அந்தச் சிபுகாந்தத்திலும், ஹிக்கா மத்தியத்திலும் நாபிக்கு வலத்திலே நான்கு விரலும், இடக்காலில் குதி நடுவும் பிரம்மச் சூத்திரத்திற்கு ஏற்றம் குறைச்சல் வராமல் லம்பிப்பான்.

The statuary would allow the Brahmaccūtrā to peragrate through the left of forehead, tip of the left eye, end of the left nostril, edge of the left chin centre of the hiccā, four fingers away from the right side of the navel and the middle of the left heel.

559. ஆபங்கத்திற்குச் சொன்னாற் போல நதமானத்தைக் கற்பிப்பான்.

The diminution demanding is as advocated for the 'little bent' image.

560. புலித்தோலாடையுடனே வெண்பட்டையும் தரித்து, வலத் துடையிலே க்ஷுரிகாஸ்திரமும் கட்டப்பட்டிருப்பது.

(க்ஷுரிகா - சுத்தி)

The habit the Lord should don must be the hide of tiger and white silk. He will be graced with a dagger touching his right thigh.

(ksurikā – a dagger)

561. க்ஷுரிகையானது பொற்பிறையாயிருப்பது; உபபந்தத்தோடுங் கூடியிருப்பது.

(உபபந்தம் - கைப்பிடி)

The dagger must be of a crescent shape with a hue of gold possessing a hilt.

(Upabandam – hilt)

562. இரண்டு பார்சுவத்திலும் கைகள் நானாவிதமான பாம்புகளினாலே அணியப்பட்டிருப்பது.

His arms, at side's twin, will be bedecked with various species of serpents.

563. இருதயங்களிலே பண்ணப்பட்ட அஞ்சலிகளை யுடைத்தாய், ஆனந்தங்களை யுடையராய ரிஷிகள், தேவர்கள், கந்தருவர்கள், சித்தர்களால் சேவிக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டு இருப்பது.

The lord should be venerated by sages, prodigies, gods, Gandharvās and Siddhās, in an ecstatic mood, with folded hands against their chest.

564. தெருக்களைக் காராக்கிரனானது பெருக்கா நிற்கும்; மேகங்கள் தண்ணீரைப் படர விடுகின்றன; தேவர்கள் பூமழை பொழிய நிற்கிறார்கள்; ரிஷிகள் தோத்திரத்தைச் சொல்லுகிறார்கள். நரர்கள் நாலு வேதமும் அடிதோறும் ஸ்துதியைச் செய்யா நிற்கிறார்கள்.

God Vāyu must sweep the streets; the clouds, shower water; Devās, flour the flowers; Sages, eulogies Him and hoi polioi by repeating the hyms of four Vedās, worship.

565. தோல் கருவி இவை முதலான ஐந்தும் தியானியாகச் சொல்லப்பட்டது; தும்புரு, நாரதர் முதலானவர்கள் அந்தப் பஞ்சமகா சப்தங்களினாலே பாடா நின்றார்கள்.

The poetry of worship will be scripted in music by dint of those 5 kinds of musical instruments viz., that made of leather, of bronze, of string, of reed and of conch.

566. சந்திராதித்தியன் குடையாகப் பிடிக்கவும், தேவஸ்திரீகள் சாமரம் வீசினார்கள்.

The moon and the sun will be seizing drolly while deva – world maidens ministering to by fanning chowries.

567. எல்லா லேகத்தின் உபகாரம், கங்காளத்தின் மோட்சத்தின் பொருட்டு, பிச்சை புகா நின்றதாகச் சிவன் அருள் செய்தார்கள்.

"For the welfare of the whole world and for the liberation of the soul of this corpse, I pitched in to obtain alms" – thus graced Siva.

568. [கஷ்யபர்] "உம்மாலே தரிக்கப்பட்ட கங்காளத்தின் உற்பத்தி எங்கென்று சொன்னார்.

"What is the story of the corpse you haid set on your shoulder?" – Kasypā interpellated.

569. ஈச்வரனால் சொல்லப்பட்டது இப்பொழுது சாகப்பட்டவனான சனார்த்தனனானவன், அவருடைய தேகமானது புவனம் முதலாயுள்ளவற்றைத் தன்னுடைய சக்தியினாலே பஹியா நின்றது; எல்லா அண்டங்களும் அலைக்கப்பட்ட அப்பொழுது, அந்த அண்டங்களிலே இருக்கிறவர்கள் பயப்பட்டு எந்தனைப் பிரார்த்தித்தார்கள். அவர்கள் விமோசனத்தின் பொருட்டு நாம் தரித்தோம். நம் …….. இவற்றை விடுவோம்; ஆகையாலே கங்காளம் மாதவராலே உண்டாக்கப்பட்டது என்று பரமேச்வரர் அருளிச் செய்தார்கள்.

"Now had breathed last Janardhanā, was torturing the whole world and his wife; when all the commoners invoked me to rescue them, I pitched in this killing and assumed this design. I —— leave this; so this corpse is none other than Mādhavā" – Thus spake Paramēswarā.

570. இப்படிக் கங்காளம் சொல்லி, ஹரிஹரார்த்தம் சொல்லப்படா நின்றது.

Thus Kaṅkāḷam trotted, Hariharārttam has been recounted

(அடுத்த ஹரிஹரார்த்த இலட்சணம் தமிழ் உரையிலாது, வடமொழியில் மட்டுமே உள்ளதால், இங்கு பதிப்பிக்கப்படவில்லை)

18. பிட்சாடண மகேஸ்வர மூர்த்தி இலட்சணம்

571. அனந்தரம் பிட்சாடனஞ் சொல்லப்படா நின்றது.

Thereafter, lord Bhikshāṭana's frame has been taken up for trotting.

572. இரண்டு கால்களும் மரவடியோடே கூடியிருப்பது; இடக்கால் நின்றதும், வலக்கால் சற்றே கிளப்பப்பட்டு நடக்கிறதிலே ஒருப்பட்டு இருப்பது.

Two shanks will be pinked with clog; between the two, the left shank should be footing cocked when the right ditto just lifted up preparatory to stroll.

573. லலாட மத்தியத்திற்கு வலப்புறத்திலே நீக்கம் யவை ஒன்பது, எட்டு ஆதலாவது, நாசிகாக்கிரத்திலும், அதரத்தின் இடப்புறத்திலும்,ஹிக்கா மத்தியத்திலும், இருதய மத்தியத்திலும், நாபி மத்தியத்திற்கு வலப்புறத்திலே நீக்கம் யவை பதினாறு. நின்ற காலில் [குல்ப] நடுவிலும் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The artificer would allow the pendent to peragrate through the dot 9 or 8 yavās right to the centre of the forehead; The self – same cord known as Pūrvaccūtrā should also be in line with the tip of nose, the left side of lip, the centers of 'hikka' as well as 'hrdayā', 16 yavās aloof from the right of the middle of navel and the mid dot on the root of ankle.

574. ஆபங்கத்திற்குப் போல் நதமானத்தைச் செய்வான்; அன்றியே சமபங்கமும் நதமானமுமாம்.

The diminution the statuary would maintain must be corresponding to that for 'little bend' statue or for 'medium bend' icon.

575. கால்கள் மரவடியோடே கூடியிருக்கிலுமாம்;. அன்றியே இல்லாமலுமாம்

The lord's shanks may or may not be pinked with clog.

576. விரித்த சடையாதல், மண்டலமான சடையாதல், வட்டப்பட்ட சடையாதல் நிர்வாணமுமாய், வணங்கின முகமுமாயிருப்பது.

This lord applauded as Bhiksheṭanā must be pinked with either a 'matted hair spread', 'matted hair ahead over pate', 'tresses ahead in a round shape over pate' while his visage viewing below.

577. நெற்றிப் பட்டத்தோடுங் கூடித், தலையோடுங் கூடிப் பிறையுந் தரித்திருப்பது.

The lord will be pinked with a gold plate on forehead in addition to skull and crescent.

578. எல்லா ஆபரணத்தோடுங் கூடி, அரைஞாணோடும் கூடியிருப்பது.

Bedecked with all sorts of ornaments and finery along with cord made of gold around the loins.

579.வெள்ளை நிறமும் நானாவிதமான பாம்பு மணியப்பட்டு இருப்பது

He, of white hue, will be graced with variegated serpents.

580. இடத்தில் வரதமுமாய்க் கபாலத்தைத் தரித்து இருப்பது.

Adorned with skull wielding a boon – showering gesticulation in chiro left.

581. வலத்தில் [பர] ஹஸ்தம், டமருகம் பிடித்திருப்பது.

He will be seizing a kettle – drum in his reverse right chiro.

582. இடத்தில், [பர] ஹஸ்தத்தில், மிகவும் குளிர்ந்திருக்கிற மயிலிறகாவது.

The plumage of peacock will be griped by the chiro left at the rear side.

583. வெண் புடவையாலே உத்தரீயமும், இடையிலே சுற்றின பாம்புமாவது.

A serpent will be coiling around his waist and his shoulder should be graced with a mantle of white hue.

584. வெள்ளைப் பூணூலும், கழுத்திலே கறுப்பும், திரிபுண்டரமுமாக இருப்பது.

This God must be pinked with a sacred thread of white hue, a blackish color on throat and a three – fold streak of ashes on forehead.

585. பத்மப் பீடத்திலே நின்றதாகவும், நின்ற ரூபமெல்லாம் கங்காளம் போலவும் செய்வான்.

The lord will be standing on a lotus and the rest of the features as harangued for Kańkāla mūrty.

586. காசியபர் கேட்கிறார்: "தேவரீர் இப்படிச் செய்ததற்குக் காரணம் ஏதென்று சொல்லவேணும்!".

"My Lord! what is the exigency for having done so?" – Kashyapā interrogated.

587. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தமுண்டான அளவிலும், பிரும்மாவானவன், தன்னுடைய முகத்திலும், அசுரர்களுக்குப் பட்சவாதியாய், அந்த அசுரர்களுக்கு ஹிதமே சொல்லத் தொடங்கினார்; அந்த ஆச்சரிதத்தில் அசுரர்கள் வென்றார்கள்; தேவர்கள் தோற்றார்கள் தேவர்கள் எல்லோரும் நம்மை யாசித்தார்கள்; அப்பொழுது, தேவர்களுடைய ஐயத்தின் பொருட்டும், எல்லா லோகத்தின் பொருட்டும், அசுரருடைய நாசத்தின் பொருட்டுப் பிரம்மாவினுடைய தலையை அறுத்தோம்! அந்தத் தலையை நான் வகித்து இருக்கையால், அண்டவாசிகள் அத்தைக் கண்டு, பெரும் பயத்தோடு கூடிக் கொண்டு அவர்கள் நம்மை அடைந்தார்கள். அவர்களை இந்த அண்டம் அழைக்குதென்று சொன்னதற்குப் பிரதிஷ்டார்த்தமாகவும், தேவர்கள் அபயார்த்தமாகவும், சர்வலோகோபகாரார்த்த மாகவும், சர்வ பிராணி ஹிதார்த்தமாகவும், மண்டையோடு கொடுக்கக் காரணமாகவும், பிட்சைக்குப் புறப்பட்டோம்! இந்தப் பிட்சை முடிந்த அளவிலேயே தலையோட்டைப் போடுவோமெ"ன்று பரமேச்வரன் அருளிச் செய்தார்.

"In the tussle between Devās and Asurās, Brahma took sides with Aasurās. With that prop and boost the Asurās flew their flags high. All the Devās invoked me to save their skin. At that point of time, for the ease of the Devas, for the solace of the souls of riff – raff We quillotined Brahma's pate! with tepidity the Devās accosted and bemoaned at me. Then for the victory of the Devās, for the smooth sailing of the whole world and to get rid of the skull we pitted in to accept alms! As soon as the job of receiving the alms is consummated we will spurn this skull!" Thus spake Paramēshwarā.

19. சண்டேசானுக்கிரக மூர்த்தி இலட்சணம்

588. சண்டேசானுக்கிரகம், தட்சிணாமூர்த்தி இரண்டும் சொல்லப்படா நின்றது

The twin swish idols namely Canṭēsānukraha mūrty and Dhakshinā mūrty have been taken up for an excursus.

589. இந்த இரண்டிலும் சண்டேசானுக்கிரகம் சொல்லப்படா நின்றது.

Betwixt the twin images, presently, Canṭēsānukroham has been showcased.

590. உமை சகிதை போல எல்லாம் சொல்லப்பட்டது; இடது புறத்திலே சிறிது நதமான முகத்தை உடைத்ததாக இருப்பது.

As recounted for the one in tandem with Umā, this has also been pictured. His visage will be careened slightly towards left causing a diminution in height.

591. வலக்கை அபயமன்றிக்கே, வரதமாயிருப்பது.

His right metacarpus should be graced with a gesticulation of boon – showering and not refuge – rendering.

592. இடக்கை கடகத்தை வரச்சித்துச், சண்டேசுவரன் மூர்த்தாவிலே வைக்கப்பட்டிருப்பது.

(மூர்த்தா - கீழே)

Wielding a gesture symbolizing a craft in his left chiro, he must have canṭēswarā beneath him.

(mūrttā – below)

593. சண்டேசுவரன் பக்தியோடே கூடி, ஹிருதயத்திலே வைக்கப்பட்ட அஞ்சலியும், பொன்னிறமுமாய்ப், பத்மப் பீடத்திலே தேவிதேவர்க்கு நடுவே ஸ்கந்தமூர்த்தியை ஒழிய, இராநிற்பாராய் நன்றாயிருப்பது.

Canṭēswarā, of golden hue, with folded chiros against chest, will be standing below the Lord along with whom must also be present Dēvi both on lotus – seats, deprived of Skantā betwixt.

594. சண்டேசானுக்கிரகம் சொல்லித், தட்சிணாமூர்த்தி சொல்லப்படா நின்றது.

The idol Canṭesānukraham thus delineated, now Dhakhsn̲ā mūrty has been exegetically pronounced.

20. தட்சினா மூர்த்தி இலட்சணம்

595. வலக்கால் நீட்டி, இடக்காலின் நளகாக்கிரகத்தை வலத் தொடையின் நுனியிலே வைத்து, இடக்காலைக் கிடத்துவது.

(நளகாக்கிரம் - கண்டைக்காலின் அடிப்பகுதியாகிய சிறுத்த பகுதியை)

His sitting posture must be that his right shank should be hanging down while the slender part of the calf of left shank will be resting on the right shank.

(naḷakākkiram – lower part of calf)

596. லலாடத்தின் வலத்திலும், நேத்திராந்தத்தின் வலப்புறத்திலும், ஹிக்காமத்தியத்தின் வலத்திலும், ஹிருதய மத்தியத்திற்கு வாமத்திலும் மூன்றரை யவை நீக்கமாகவும், நாபி மத்தியத்திலும், (மேட்ர மத்தியிலும்) (பூர்வச் சூத்திரத்தை) லம்பிப்பான்.

The hewer would allow to peragrate the hank pūrvaccūtrā through, the left of forehead, the inner edge of right eye, the right end of right nostril, the right of the midst of 'hikka', 3 yavās aloof from the middle of the breast towards left, the mid speck of navel and the centre of the plinth of male organ.

597. நதம் விரல் அரை; நான்கு தோளோடே கூடியிருப்பது.

The diminution should measure out to be of finger ½; The Lord will be garnished with 4 hands.

598. வலத்திலே, பூர்வஹஸ்தம் ஞானமுத்திரையாகச் செய்வான்.

At right, the metacarpus of the obverse hand will be wielding a gesticulation of wisdom – sign.

599. வலத்திலே, பரஹஸ்தம் அட்சமாலையாவது

The reverse hand of the right wing will be seizing a akshamālā.

600. இடத்திலே, பூர்வஹஸ்தம் வரதஹஸ்தமாதல் தண்டஹஸ்தமாவது.

Either boon – giving or baton – holding will be the status of the obverse hand at the left.

601. இடத்தில், பூர்வஹஸ்தம் வரதமாகில், கரதலப் பிருஷ்டம், இடமுழந்தாளிலே மேலே வைப்பது.

(பிருஷ்டம் - பின் பக்கம்)

If the left obverse chiro is of boon – showering one, then the back of the metacarpus will be resting over the knee of the left shank.

(brsṭam – back side)

602. இடத்தில், பூர்வஹஸ்தம் தண்டஹஸ்தமாகில், இடமுழந்தாளிலே இடமுழங்கையை வைக்கப்பட்டிருப்பது.

If the aforesaid chiro is one of a baton – holding, then the left elbow must find a place on the knee of the left shank.

603. இடத்தில், பரஹஸ்தத்தில் வன்னியாதல் பாம்பாதல் தரிக்கப்பட்டிருப்பது.

Bedecked will be the reverse arm, at left, with either fire or serpent.

604. சரீரம் ஸ்படிகம் போலப் பிரகாசமாயிருப்பது.

Effulgent, like a speckles crystal, frame will be His.

605. தலைமயிர் சிதறினதாதல், சடாமண்டலமாதல் ஆவது.

His hair fashion should be either a spread out lock or a heaped tress of hair over pate.

606. சடையினாலே கட்டப்பட்ட தலையாதல் சடாமகுடமாதலாவது.

Or His tresses may be either a hair – crown jaṭāmakutā or a built up matted lock jaṭābhandā.

607. இடப்புறத்திலே ஊமத்தம் பூவும், நாகமும்; வலப்புறத்தில் பிறையுமாவது.

On pate, he will be bedecked with a flower called ūmattam in Tamil (Xanthium orientale) at left portion along with a cobra while at right a crescent.

608. சிரித்த முகமும், எல்லாப் பூஷணங்களாலும் பூஷிக்கப்பட்ட, வெள்ளை உத்தரீயமும், வெள்ளை யக்ஞோபவீதமும் மூன்று கண்ணும், இடக்காது சங்குத்தோடும், வலக்காது மகரக் குண்டலமும் ஆவது.

Wearing a mirthful visage, bejeweled with ornaments of all kinds, donning white habiliment, adorned with a sacred cord of white hue, possessing 3 eyes, pinked with a stud of made out of conch in left ear, and worn an ear – jewel in the shape of fish in right ear – is the contour of his person.

609. இரண்டு காதும் சங்குத்தோடாதல் மகரக் குண்டலமாதல் ஆவது.

Or, His two ears can either totally be pinked with studs of conch or fish – shaped ear – jewels.

610. உருத்திராட்சத்தினாலே குண்டலமும் தாவடமும் போட்டுப் புலித்தோலுடையும் ஒரு கிலேசமன்றியே இருக்கிறதாய் இருப்பது.

Rosaries made of rudrākshā, one close to the neck and another dangling up to the chest, should pink Him. The God, donning the habit of the hide of tiger, should be perk – visaged.

611. நாரதரும், ஜமதக்கினியும், வசிஷ்டரும், பிருகுவும், தட்சிணத்திலும்; பாரத்துவாசன், சுனகன், அகத்தியன் இவர்க ளிடப்புறத்திலுமாவது. இப்படி இவர்கள் இருந்ததாக இருப்பது.

To the right of lord must be adoring Nāradhā, Jamadhakni, Vashiṣṭā, and Brgu while on the left Bharatwājā, Cuṉakā and Agastyā.

612. [ஆல] மரத்தின் கீழேயிருந்த தட்சிணாமூர்த்தியின் நீட்டின வலக்கால், முயலகனின் முதுகிலே வைத்து இருப்பது.

The right shank beetled, Dhakshināmūrty, abiding at the bottom of banian tree, should trample upon the back of Muyalakā with his ditto shank.

613. [சூத்திரத்திற்கும், குதிக்கும்] நடு நீக்கம் விரல் [நான்கு].

The plumbline pūrvacūtrā will have 4 fingers gap aloof from the organ heel of shank dangling.

614. அந்தச் சூத்திரத்திற்கும் ஜானுவிற்கும் நடு நீக்கம் விரல் பன்னிரண்டு.

Twelve fingers measure should segregate that slack from the knee of the self – same shank.

615. அபஸ்மாரம் பச்சை நிறமுமாய்ப் பாம்போடு விளையாடுவது.

Apasmārā of green hue, will be sporting with a serpent.

616. அந்த விக்கிரகந்தானே இடக்கால் முடக்கினதாய்ப், பூர்ஹஸ்தங்கள் இரண்டினாலும் வீணை பிடித்ததாய்; நின்றவை முன்போலச் செய்வது வீணாதர மூர்த்தியாம்.

When the statue, with fold left shank, gripes with obverse twin hands a vīnā, will be acclaimed as Vīnādhara mūrthy; other organs pattern, as whileom

617. அந்த மூர்த்தி வீணையன்றியே இருப்பது; ஞானமுத்திரை, அபயமாய், இடக்கை நீட்டினதுமாய் அந்தக் கையின் முழங்கை முழங்காலிலே வைக்கப்பட்டு இருப்பதாய்;

வலத்தில், பரஹஸ்தத்திலே, அட்சமாலையும் அன்றியே தாமரைப்பூவாதல் உத்பலமாதல் தரித்து இருப்பது; வெள்ளை நிறமுமாய், நின்றதெல்லாம் முன்போலச் செய்யப்பட்டிருக்கிறது ஞானமூர்த்தி என்று பெயராம். இவர் எல்லாக் காரணத்திற்குமாவார்.

This mūrty, forswearing vinā, wielding jñāṉā and refuge giving gesticulations in right obverse hand, resting the elbow of the left obverse chiro on the knee of the left shank, arresting akshamālā in the reverse right wing chiro and seizing lotus or black lily in the left metacarpus of the reverse side, of white hue, having other characters as whileom, will be landed as Gñāṉamūrty; He will stand supreme for all sorts of rituals.

618. அங்க்ரிதலத்தை ஒன்றுக்கொன்று மாறி, ஜகனத்திற்குக் கீழாக வைத்ததாய், ஹிருதயஸ்தானத்திலே உள்ளே முகமான கரத்தினாலே ஞான முத்திரையும் உடைத்தாய், இடக்கை வரதமுமாய், அது மேட்ர மூலத்திற்கு மேலாகக் கற்பிக்கப்பட்டதாய், மற்ற வலக்கை அட்சமாலையுமாய், இடக்கை தாமரைப் பூவும், நாசி நுனியைப் பார்த்த கண்ணும், தேகமும் செவ்விதாய்ப் பின்பே விழுந்த சடை நான்றியும், ரிஷிகளாலே சேவிக்கப்பட்டு இருப்பதாயிருக்கிற இந்த மூர்த்தி யோக மூர்த்தி என்று பெயராம். [இவர் துக்க நிவிருத்திக்கு ஏற்றவர்] (அங்க்ரிதலம் - பாதத்தலம்)

That mūrty, keeping the left foot beneath the right butt and vice versa, wielding a gesture of jñāṉā in right obverse chiro against chest pointing towards chest, showing a gesticulation of boon – issuing in left metacarpus on the base of male organ, holding a rosary akshamālā in reverse right chiro, arresting a lotus in reverse left hand, viewing the tip of nose, with dangling tresses on the back, invoked by sages, will be worshipped by the title Yōgamūrty. He will stave off all worriments. (ankritalam – foot)

619. வலக்கால் நீட்டி, இடக்கால் முடக்கி வைத்து, இந்த முடக்கின காலையும் தேகத்தையும் [யோகப்பட்டத்தாலே] கட்டிக்கும்; நின்றவையெல்லாம் முன்போலச் செய்யப்பட்டது; அதுவும் யோக மூர்த்தியாம்.

(யோகப்பட்டம் - யோக நிலையில் காலை உடலோடு கட்டும் பட்டை)

The right shank should dangle down while the left ditto lying horizontally on the right; the body and the folded shank should be tied with a band. All the rest, as calculated whileom. This too is called Yōgamūrty.

(yōgappaṭṭam – band used to keep the leg in position with body)

620. தொடை மேலே மாறி வைக்கப்பட்ட கால்களை உடைத்தாய், யோகப்பட்டத்தோடுங் கூடி முக மத்தியத்தை யுடைத்தாய்ப், பூர்வ ஹஸ்தங்களிரண்டும் நீட்டி நிறுத்தின இரண்டு முழங்கால்களை மேலே வைக்கப்பட்டிருப்பதாய், வலத்திலே பரஹஸ்தத்திலே அட்சமாலையும், இடக்கை கமண்டலமும், பிறையுமணிந்து, கழுத்திலே கறுப்பும், வெள்ளை நிறமும், பின்பே தட்சிணப் பார்சுவத்தில் விருட்சமும், நானாவிதமான சர்வாபரணமும் உருத்திராட்சத்தால் படமும் கண்டமாலையும் தரித்து, ஆலடியிலே ரிஷிகளாலே சேவிக்கப்பட்டு இருக்கி தயாய மூர்த்தி சர்வ பாபஹரமாயிருப்பது என்றறிவான்.

The icon quid pro quo, laying the right heel on the left thigh and vice versa, fastening the calf with a band running around waist, resting the twin obverse arms on the twin knees, seizing an aksha mālā in the rear side right metacarpus, arresting a kamandalā with the backside left chiro, adorned with a crescent, bedecked with black hue on the throat, of white hue, pinked with a tree at the back on the right wing, bespangled with variegated ornaments, wearing rosaries close to neck as well as dangling against chest, dwelling beneath a banian tree, prayed by prodigies and saints, will be eulogized as Dayāyā mūrty; He will forswear all sins.

621. இப்படி, அனேகப் பேதமாகத் தட்சிணா மூர்த்தி சொல்லப்பட்டா நின்றது.

So forth, Dhakshinā mūrty lord has been snatched at length in numberless ways.

21. காலக மூர்த்தி இலட்சணம்

622. அனந்தரம் காலஹமூர்த்தி லட்சணம் சொல்லப்பட்டா நின்றது.

Thereafter, kernels to tool Kālahamūrty have been made known.

623. நதமானம் விரல் எட்டு, ஒன்பது, பத்து; அன்றியே, பதினொன்று, பன்னிரண்டு ஆகிலுமாம்; சூத்திரம் சொல்லப்பட்டா நின்றது.

The diminution in height must be, for this icon, fingers 8, 9 or 10; or, 11 or 12 is also admissible so spake the rule.

624. மேட்ர மூலத்திற்கு இடத்திலே நீக்கம் விரல் ஆறு; நின்ற காலில் குல்பத்திற்கு மத்தியத்திலும் பூர்வச் சூத்திரத்தை லம்பிப்பான்.

The artificer would allow the Pūrvaccūtrā to cruise through the dot six fingers left of the seat of male organ. The same plumb – rule must also peragrate via the centre of the root of ankle of the treading shank.

625. தேவனுடைய வலக்கால் [பத்மப் பீடத்திலே] நிற்பது.

The Dēva's right shank should rest on the seat of lotus.

626. இடக்கா லெடுத்துக், குஞ்சிக்கப்பட்டு, உள்ளடி எடுக்கப்பட்டிருப்பது

(குஞ்சிக்கப்பட்டு – மடிக்கப்பட்டு)

The left shank must be lifted up and folded whose sole should be raised aloft.

(kuñjikkappaṭṭ – folded)

627. எயிரோடு கூடின வாயும், மூன்று கண்ணும், சடாமகுடமும், நான்கு தோளாதல் இருப்பது.

He will be portrayed with four shoulders, 3 eyes, a hair – crown jaṭāmakutā and a mouth with gum = noticeable.

628. வலத்தில், பூர்வஹஸ்தம் சூலம் கர்ணாந்தமாக எடுக்கப்பட்டு இருப்பது.

At right will be, in his obverse chiro, a trident lifted aloft up to the level of his ear.

629. வலத்தில், பரஹஸ்தத்தில், மழு [அல்லது வரதமாகவும்] இடத்தில் பூர்வக்கரம், நாபிச் சீமாந்த மளவும் சூசிகை அதோமுகமாக இருப்பது.

(அதோமுகம் - கீழ்நோக்கி)

He will gripe, in his rear side right chiro, a battleaxe or a look – giving gesticulation, and in his front side left metacarpus, he must be wielding a gesture of needle pointing downward direction.

(atōmukham – looking down)

630. சூச்யக்கரத்தில் நின்று, பூர்வச் சூத்திராந்தமாக நீக்கம் விரல் பதினாறு, பதினான்கு ஆவது.

A measure of 16 or 14 fingers gap must segregate the cord Pūrvaccūtrā from the aforesaid needle – shape sporting chiro.

631. கர்ணத்தில் நின்றும் சூலத்தரமான கையில் மணிபந்தமாக நீக்கம் விரல் பதினாறு; பதினான்கு ஆகிலுமாம்.

The wrist of the chiro arresting the trident remaining on par with the level of ear, should be aloof 16 fingers from the plumb line Pūrvaccūtrā; Fourteen fingers is also admitted.

632. இடத்தில், பரஹஸ்தம், ஹலவலமாயிருப்பது [?]

The rear side left chiro will be sporting a gesture of 'wonder'.

633. டங்கத்தைத் தரித்து, ஹிக்காச் சூத்திரச் சமமாக இருப்பது, அது உள்ளே முகமாயிருப்பது; ஹலஹலபல்லவமா[?] யிருப்பது; உஷ்ணீஷாந்தமாக எடுக்கப்பட்டிருப்பது. அந்தக் கரத்திலே அனாமிகாக்கிரம் கர்ணாந்தமாதல் மணிபந்தமாதல் சூல ஹஸ்தாந்தமாவது.

Griping a chisel, the self - same chiro's level must be on par with neck or the end of tresses. Its index – finger's height must be on par with either the wrist of the chiro holding trident, or the upper end of the chiro wielding trident, or the level of ear. This chiro should be pointed towards the inner side.

634. கலஹா மூர்த்தி லட்சணம் சொல்லி, கீழ் கிடக்கிற காலலட்சணம் சொல்லப்படா நின்றது.

Kalahā mūrty (Kālasamhāra mūrty) thus expounded, now, kālā, abiding beneath, has been declaimed.

635. இரண்டு கையும், எயிறும், பாசமும் பிடித்த கையும், கரண்ட மகுடமும், ரக்தத்தாரையாய் விடுகிற உடம்புமா யிருக்கிற காலம், நம்மைக் கண்டு மிகவும் பயப்பட்டுப் பாசத்தோடே கூடிய இருதயத்திலே அஞ்சலி செய்து, நீட்டின கால்களும் மேல் நோக்கின முகமுமாய்க் கிடப்பான்

(காலம் - காலன்)

With two hands, having visible gum, griping noose in hands, wearing a karantā crown, with a body full of dropping blood – is the picture of Kālam. Dithering, he will keep his visage upward beetling his shanks,with folded hands against his chest.

(kālam – kālan)

636. காலஹரமூர்த்தி சொல்லி லிங்கோத்பவம் சொல்லப்படா நின்றது.

Kālahamūrty, so forth, having showcased, now Lingōtpavā has been illuminated.

22. இலிங்கோத்பவ மூர்த்தி இலட்சணம்

637. அனந்தரம் லிங்கோத்பவம் சொல்லப்படா நின்றது.

And, Lingōtpavā has been deliberated.

638. இலிங்கத்தினுடைய ஆகாரத்திலே, சந்திரசேகர மூர்த்தியைப் போலச் செய்வான்.

(ஆகாரம் - உருவம்)

In the lingā, the limner would carve out this lord in the contour of Chandrasekharā.

(ākāram – shape)

639. நளிகையிலே நின்று, பாதத் தலமளவாக இலிங்கத்திலே மறைக்கப்பட்டு இருப்பது.

Beneath the end of calf up to the sole will be hidden inside the lingā.

640. [பிரமதேவரை] இடப்புறத்திலே அன்னமாகக் கற்பிப்பான்.

The statuary would tool Brahmā in the mould of a swan on the left wing.

641. விஷ்ணுவைப், பன்றி வடிவாய், வல பார்சுவத்திலே, கீழே பார்த்த முகமாகக் கற்பிக்கப்பட்டது.

To the left will be chiseled the lord Vishnu in the mould of a pig looking downwardly.

642. விஷ்ணு வலப்புறத்திலும், பிரம்மா இடப்புறத்திலும், இருதயத்திலே அஞ்சலி சம்யுக்தராய்க் கொண்டு சிவலிங்கத்தைப் பார்த்ததாகக் கற்பிப்பான்.

The mason will make the icon of Vishnu on the right and that of Brahmā on the left, both with folded hands against chest, and viewing the lingā.

643. ஈச்வரன், விஷ்ணு, பிரம்மா இவர்கள் வர்ணம் சிவத்தும், பசுத்தும், பொற்கன்றும், இந்த மூன்று நிறமும் முற்சொன்ன மூன்று விதத்திலேயும் கிரமத்திலே செய்வது.

The hue of the frames of Iswarā, Vishnu and Brahmā must be of red, green and golden respectively.

644. லிங்கோத்பவம் இப்படிச் சொல்லி, பின்பு விருட்ச சங்கிரகணம் சொல்லப்படா நின்றது.

Lingōtpava, so forth, ruminated, thereafter, the characteristics of trees have been narrated.

23. விருட்ச சங்கிரக இலட்சணம்

645. அனந்தரம் விருட்ச சங்கிரக லட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, kernels regarding trees have been delineated.

646. தேவர்களுக்கும் தேவிகளுக்கும் சூலார்த்தமாக விருட்சலட்சணம் சொல்லப்படா நின்றது.

With the motive of gearing images for gods and goddesses, the nature of trees has been contemplated.

647. புருடன் என்றும், ஸ்திரீயர் என்றும், நபும்சக மென்றும் விருட்சப் பேதம் மூன்று விதமாகச் சொல்லப்படும்.

Three kinds in trees have been identified viz., male tree, female tree and eunuch tree.

648. நெய்த்து இருக்குதல், நெய்த பூமியில் உண்டாகுதல், செவ்விதாய் உடைத்தாய், அல்பப் பர்ணங்களை யுடைத்தாய்க், காய் இலை இவையுடைத்தாயக், குளிர்ச்சியும் உஷ்ணமும் கலந்ததாய்க், குறைந்த தைலமும், குறைந்த சத்தை உடைத்தாயிருக்கிறது யாதொரு மரமுண்டோ அதைப் புமான் என்றறிவான்! அத்தைத் தேவர்களுக்குக் கொள்ளக்கடவன்.

That juicy tree, growing in a firm and juicy terrain, having small sized leaves, full of leaves and unripe fruits, having heat and cold moderately, possessing little oil, has been termed as male tree; The artificer would earmark it for gods.

649. நெய்த்து இருக்குதல், நெய்த்த பூமியிலே இருக்குதல், செவ்விதாகவும் மெத்தென்றும் அடியில் நின்றும் நுனியளவாக நோக்கியிருப்பதும், இலையும் பூவும் காயும் மிகவும் மெத்தென்று [இருந்தால], [ஸ்திரீ விருட்சம்] என்று பெயராம். இது தேவிகளுக்குச் சூல யோக்கியமென்று பெயராம்.

Unctuous forming in a fecund glebe, perfect and soft, tapering from bottom, full of nice unripe fruits, leaves and blossoms – such a rarity of tree has been earmarked as female tree. This is the correct tree for chiseling lady – images.

650. அடி [சிறுத்ததாய்] இலை குறைந்து மிகவும் துர்ப்பலமாயிருக்கிறது யாதொரு மரம், அத்தை ஷண்ட விருட்சமென்று அறிவான்.

The mason would grasp that the tree, having a rickety bottom with less leaves is only an eunuch variety.

651. சந்தனம், செண்பகம், செஞ்சந்தனம், மாமரம், கருங்காலி, புன்னை, நாகை, தும்பில், மருள், இருள் வீடு, பழமுன்னி, பாலை, இலுப்பை, பதும்யத்ரிளி ஏழிலைவம்பாலை, ஓழையுண்ணி இவைகள் சூல யோக்கியமாக அறிந்து, இவற்றை ஒன்றாவது அரிப்பான்.

The statuary would saw either one of – sandal, michelia, champaca, red sandal, mango, ebony (acacia sundra), Alexandrian laurel, nāham, tumbil, marul, irulvīṭu, pazhamunni, iron – wood, illoopy, patumyatrili, ēzhilai vambālai and ozhaiyunni for tooling wood – idol.

652. ஜீரணித்து இருக்கிற இலைகளை உடைத்ததும், மற்றொரு மரத்திலே முளைக்கப்பட்டதும், தலை மாறிய மரமும், மிகுந்த கண்களையும் உடைத்தானதும், தானே விழுந்த மரமும், தானே பட்டதும், வளைந்த கொம்புகளை உடைத்ததானதும், பொந்து மரமும், பாம்பு வாழ்ந்திருப்பதும், பறவைகள் சேருகிறதும், காற்றடிபட்டு முறிந்ததும், பல கொடி சுற்றினதும் [புதர்கள்], புற்று சுற்றினதும், தேவாலயங்களிலே நிற்கிற மரங்களும், வீதியிலே நிற்கிற மரமும், நாற்சந்தியிலே நிற்கிற மரமும், வீடுகளிலே நிற்கிற மரங்களும், சுடுகாட்டிலே நிற்கும் மரங்களும், கொள்ளக் கடவனல்ல. இவை சூலத்திற்குக் கொள்கில் கருத்தாவிற்கு நாசமுண்டாம். ஆகையாலே வருந்தியும் தவிரக்கடவன்.

The artificer would stare off, at all costs, the tree – with withered leaves, grown on another tree, having top cut off, possessing holes, fallen on ground on its own, withered on its own, with crooked branches, giving room for snakes, furnishing roosts for birds, cut off by air, with creepers on, surrounded by anthill and bushes, standing inside the premises of temple, growing at houses, standing at a place where four streets confluence and grown in the terrain of crematorium. If he chooses such a tree for tooling images, it will fetch calamities for lord; so, at any cost, he should stave off such trees.

653. நல்ல பட்சத்திலும், நல்ல நாளிலும், நன்றாகச் சொல்லப்பட்ட மரங்களைக் கிரகிப்பான்.

In an auspicious fortnight and on good days, he would bring only the trees in good repair.

654. ஆச்சார்யனும், சில்பாச்சார்யனும், கருத்தாவுமாகச் சென்று, பகு விருட்சங்களைப் பார்த்து, நன்றாகச் சொன்ன விருட்சங்களைப் பரீட்சிப்பான்.

(பகு - பல)

Many trees must be sassed by ācharyā, silpāchāryā and the lord and finally he would opt for the best.

(baku – many)

655. அந்த மரத்தடியிலே சென்று புற்களைப் போக்கி, அவற்றிலே மெழுகி, மந்திரத்தைச் சொல்லி, எட்டுத் திக்கிலும் பலியிடுவான்.

The sculptor would accost to the bottom of the choice tree and would purge the glebe of grass to plaster it. After muttering the mantrās, he would offer sacrifices at eight directions.

656. விருட்சத்தை [விட்டுத்] தேவர்கள், தானவர்கள், பிசாசுகள், நாகங்கள், கருடன்கள், கந்தருவர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள் இவர்கள் யாதொருவிடத்திலே போகும்படிக்கும், அந்த மந்திரத்தைச் சொல்லித் தயிரும் சோறும், நெய்யுஞ் சோறும், செஞ்சந்தனமும், கந்ததோயமும் ஆகக்கூட்டிப் பலி கொடுப்பான்.

(கந்ததோயம் - நறுமண நீர்)

The limner would utter mantrās invoking Devās, Tāṉavās, devils, snakes, kitas, Gandharvās, Siddhās and Vidyādarās, to repair to somewhere else. Then he would offer rice mixed with clarified butter, rice with curd, sandal and scented water to deities

(kanta tōyam – scented water)

657. அந்த விருட்சத்தினுடைய ஈசானத் திக்கிலே ஓமத்தைச் செய்வான்.

He would execute the Homā to the north east of that tree.

658. இருதய மந்திரத்தினாலே சமித்தையும், அகோர மந்திரத்தினாலே சருவும் இவற்றை ஒரொன்று நூற்றெட்டுப் பிரகாரம் ஓமஞ்செய்து, ஜயாதிரப்யாதானத்திலேயும் 'ராஷ்டிர விருத்தி'னாலேயும் ஓமஞ்செய்து, பின்பு அக்கினியை உத்வாசிப்பது; சிவாம்பஸ்ஸினாலே விருட்சத்தைப் இராட்சிப்பது; "சிவாத்மகமென்"கிறதினாலே ஜபித்து, விருட்சத்தைத் தொடுவான்.

சரு - சோறு;

ஜயாதி + அப்யாதானம் = ஜயாதிரப்யாதானம்

ஜயாதி, அப்யாதானம், ராஷ்ட்ரபிருத், சிவாத்மகம் - மந்திரங்கள்

உத்வாசனம் - அவித்தல்;

சிவாம்பஸ் - சாம்பல்.

Uttering the mantrā 'Hrdayā', 108 times, the mason would place the loppings into the fire and he would follow suit with the mantrā 'Agōrā' offering cooked rice. He would further mutter the mantrās 'Jayāti', 'Abyātāṉā', 'Rashtrabrtti', for the Homā. In the end he would put out the flame and take out the ash from the Homa to spinkle over the tree. Then only, he would touch, the tree, for log, pronouncing the mantrā 'Civātmakam'.

(Caru –cooked rice; Jayāti, Abyataṉā, Rāshtrabrt, Sivātmaka = all mantrās; utvācaṉam – put out; Civāmbas – ash)

659. மரத்தினுடைய கிழக்கு, முகமாகவும், மேற்கு, முதுகாகவும், தெற்கு வலக்காலாகவும். வடக்கு இடக்காலாகவும் இப்படி அறிந்து, பின்பு வெட்டத் தொடங்குவான்.

Grasping that the side towards east will a tree's countenance, the wing pointing the west will be its back, the portion in the direction of south, its right side and that towards north, its left side, to the statuary would set out to fell the tree.

660. அஸ்திர மந்திரத்தைச் சபித்து, விருட்சத்தினடியிலே மூன்று வெட்டு வெட்டினால் பால் பாய்தல், தண்ணீர் பாய்தல், நெய் பாய்தல் உத்தமம்;. அன்றியே, இரத்தம் பாய்தல் பொல்லாத தென்றறிவான். அப்படி இரத்தம் பாய்ந்தால் அத்திர மந்திரத்தினாலே சாந்தி ஓமத்தைச் செய்வான்.

The sculptor would chop the trunk thrice in which case if he receives, at the cut, a milky liquid, a watery liquid or an oily juice, then he would surmise that the tree is superb; It the sap is blood – red, it is to be execrated in which case he would do Sānti Homā, reciting Astira mantrā.

661.மரத்தினடியெல்லாம் ஸ்தபதியானவன் வெட்டகடவன். வெட்டின மரம் கிழக்கே யாதல், வடக்கேயாதல் விழுந்தால் சுபமாம்; மற்ற திசையில் வீழ்கில் நல்லதல்ல தென்றறிவான்.

Stapaty would fell the tree and if the tree falls in the eastern direction or northern, it is auspicious; if in some other sides, it is inauspicious.

662. பின்பு கொம்புகளையும் வெட்டிப் போட்டுப், பின்பு, செவ்வையாக அரிவது. பஞ்சகவியத்தினாலும் கந்தோதகத்தினாலும் அதை அபிஷேகம் பண்ணிச் சந்தனம் பூசிப், புஷ்பங்களினாலே அலங்கரித்து, ஒரு கோடிப் புடவையினாலே மூடித் தர்பையினாலே முறுக்கப்பட்ட [சிறிய கயிற்றினாலே] கட்டித், தேரிலேயாதல், சிவிகையிலேயாதல் ஏற்றிச் சுமந்து கொண்டு, மெல்ல மெல்லச் சென்று கர்ம மண்டபத்தைப் பிரவேசிப்பான்.

(கந்த + உதகம் = கந்தோதகம்)

The stapaty would lop off the branches of the tree; he would clean the log with cow's dung, urine, milk, curd and ghee and thereafter with scented water. He would besmear with sandal paste before floral decoration. He would, then, cover it with a new saree over which a thin cord made of grass would run over to fasten. Thereafter, the log would be lifted to the worship 'Karmamanṭapā' of stapaty by keeping it on a car or a palanquin, quite majestically.

(Kanta + utakam = kantōtakam)

663. கர்ம மண்டபத்தைப் பெருக்கி, மெழுகி மாப்பொடிகளாலே அலங்கரித்து, அதன் நடுவே பெரு மணலாலே சூலத்தின் நீளமும் அதின் பாதி அகலமும் நான்கு விரல் உயரத்திலும் ஸ்தண்டிலத்தைக் கற்பித்து, அதன் மேலே கிழக்கு நுனியாகக் கீழே முகமாகவும் கிடத்தி, ஈரம் சுவறுமளவும் ஒரு மாதமாதல், ஒரு பட்சமாதல் உலருந்தனையும், ரட்சித்துச் சூலத்தைச் செய்வான். [அவசரப்பட்டுச் செய்வானல்லன்] (சுவறுதல் - வற்றுதல்)

The stapaty would make the workshop clean by causing to sweep and he would plaster the floor with cow dung over which decorations with flour varieties will be done. Thereafter, a platform equal to the length of the trident and the breadth equal to half the length of ditto with coarse sand, would be constructed. Over this, the log would be kept facing east with its own 'east' pointing down. He would allow the wood to dry up for a period of 15 days or 1 month and then only he would plunge into chiseling the contour; On no account should be rush up the tooling. (cuvarutal – drying up)

24. சூல இலட்சணம்

664. அனந்தரம் சூலலட்சணம் சொல்லப்படா நின்றது.

(சூலம் - மரத்தில் உருவம் செய்வதற்குரிய அடிப்படைச் சட்டம்)

Thereafter, technicalities have been furnished in regard to the skeleton for images of wood.

(shoolam – skeleton chiseled in wood)

665. கடிக்கு மேல், மத்தகம மளவாக வம்சத்தண்டத்தின் நீளம் கொள்ளுவான்.

(மத்தகம் - தலை; கடி - இடுப்பு)

The mason would keep the length of vamsatandā betwixt the hip and the head.

(mattakam – head; kaṭi – hip)

666. நடுவயிற்றில், நாலிலொன்று பரப்பாவது.

The width of the centre part of stomach should be of one fourth.

667. அந்த சங்குவினுடைய அடிப்பரப்பில் எட்டிலொன்று குறைந்த நுனியாயாவது.

Its tip must be of the width one eighth of that of its base.

668. அந்தச் சூலத்தினடியில் நின்றும் நாபியளவாகச் சதுரச்ரமாயும், ஹிக்காந்தமளவாக அட்டாச்சரமாகவும், அதற்கு மேல் விருத்தமாகவும் செய்வான்.

In that wood skeleton, the artificer would tool the area up to navel in a square fashion and from there up to throat, octagonal and above this, round.

669. மார்பில், குறுக்கான தண்டின் நீளம், விரல் முப்பத்திரண்டு.

Betwixt the navel and the throat the gap must be of fingers 32.

670. அந்தப் பட்சத் தண்டின் அடிப்பரப்பு விரல் ஆறரை ஆதலாவது; விஸ்தாரத்தில் பாதி, கனமாவது.

That shaft should have a width of 6 ½ fingers at its bottom while its thickness, half of its breadth.

671. நுனி மூன்று விரல் பரப்புமாய், நடுவிற்கு நுனி அடைவே நரிதாயிருக்கிற பட்சத் தண்டத்தில், நடுவே மூன்றரை விரல் வெளிவிட்டு, ஹிக்காச் சூத்திரத்திற்குக் கீழே இரண்டு விரல் தாழப் பட்சத்தண்டை மேலாலே, [வம்சத்] தண்டத்தைக் கோர்ப்பான்.

At the upper end of the Patcha shaft, tapering from its mid, having 3 fingers width at its top, having a hole of diameter 3 ½ fingers inside of it, the Vamca shaft should be attached just below 2 fingers from the neck.

672. கடிதண்டுக்கு நீளம் விரல் பதினாறு; அதன் தரம் விரல் எட்டு; அதில் கனம் விரல் நான்கு; நடுவே நான்கு விரல் துளை; நாபிக்குக் கீழே ஐந்து அங்குலம் அளவில் வம்சத்தண்டிலே யோஜிக்கப்பட்டது.

(தரம் - அகலம்; யோஜிக்கப்பட்டது - இணைக்கப்பட்டது)

The kaṭi log will have length of fingers 16, a breadth of 8 fingers and a thickness of fingers 4. It must have a hollow inside with 4 fingers diameter. This should be attached to the vamca shaft just 5 angulās below the navel pit.

(taram – width; yōgikkappaṭṭatu – attached)

673. மார்பில் பட்சத் தண்டாக்ரங்களிலும் கடிதண்டாக்ரங்களிலும் அவ்விடத்திற் கீடாக வளைந்த குடுமிகளைச் செய்வான்.

(குடுமி – உச்சி)

At the extremities of both the pateat tanṭu and the kati tanṭu, the limner would construct the suitable bent – rise

(kuṭumi – ridge)

674. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு முகம் இந்தப் பிரமாணங்களில் பிம்போசிதமான முகம் யாதொன்று அந்தச் சங்கிலியையினாலே சிகரமானம் கொள்ளுதல். இரண்டு அங்குலம் சிகாயாமமாவது. இனி, அஸ்தச் சங்கியை சொல்லப்படா நின்றது.

(அஸ்தம் - கை)

Equal to the number of arms of the idol, the number of faces of the patcattanṭā must be decided. From the paṭcattanṭā, the summit, for joining with kaṭi tanṭā, must be of fingers 2. After this, the number of hands has been put forth.

(astam - chiro)

675. பட்சத் தண்ட விசாலத்தை ஹஸ்த சங்கியையினாலே பஜித்து இதனாலே ஒரு கூறு விரவி, சிகரவியாசமாவது; அது அடி குவிந்திருப்பது.

(பஜித்து – வகுத்து)

The width of the paṭcattanṭā must be divided by the number of arms and one part thereof should constitute the upper extremity of hand, which must taper from top

(bajittu – dividing)

676. கடி தண்ட நுனியினாலே வளைந்திருப்பது சிகரமானம் மூன்று விரலளவாக இருப்பது.

The ridge at the upper end of the kaṭitanṭa must be of 3 fingers in height.

677. அதன் கனம் விரல் ஒன்றரை; நன்றாக விருத்தமாக இருப்பது.

(விருத்தம் - வட்டம்)

Its width must be of fingers 1 ½ ; it should be in a round shape.

(vrttam – round)

678. பிம்பம் நின்றதாகில், தொடை நீளத்தில் மேலே எட்டு விரல் வளர்த்துக் கொள்வான்; இது ஊருச் சூலத்திற்கு நீளமானது.

If the image is a standing one, then the mason would add 8 fingers to the height of thigh to attain the thigh – shaft's height.

679. இருந்த பிம்பமாகில், ஊருத் தீர்க்கத்தில் மேலேற்றக் கடவனல்ல.

If the idol is a sitting one, the limner would not add any height.

680. ஊரு மூலத்திலே தொளையை விட்டு, அதிலே கடிதண்டாக்கிரத்தின் குடுமியை வலுவாக யோஜிப்பான்.

The mason would insert the beetling part at the end of the kaṭitanṭu into the aperture made at the top of thigh.

681. முழங்காலளவை இரண்டு செய்து, ஊருவிற்கும் ஜங்கைக்கும், மேலே ஒரு கூற்றாலே, சிகாமானத்தைக் கொள்வான்; சிகாமானம் விரல் மூன்று; இது ஜங்கைக்கு மேலே செய்யப்படும். ஊருவினுடைய அக்ரம் இரண்டு சிகையோடே கூடி, நடுவிலே துளையு முடைத்தாயிருப்பது. ஜங்கா யாமத்தில் மூன்றிலொன்று சிகாவ்யாசம் ஆவது. ஜங்காக்ரங்களில் சிகைகளை ஊருவினுடைய அக்கிரங்களிலே யோஜிப்பான், நின்ற பிம்பமாகில் சானு சந்தியன்றியே செய்வான்; சந்தி ஹீனமா யிருக்கிற சூலம் ஒருமரத்தாலே செய்யப்படுவது.

(சிகை + வியாசம் = சிகாவ்யாசம்; யோஜிப்பான் - பொருத்துவான்)

Having parceled the height of knee, into 2 parts with one part thereof the limner would chisel the length of thigh and he should attach the other part with the calf. With that measurements, he would have 3 fingers as the length of ridge. The lower end of thigh must have 2 protruding parts and a hole at the centre. One third of the breadth of the upper portion of calf must constitute the width of the protruding part. With the tips of the thigh, he would attach the beetling parts of the calf. If the idol is a standing one, he would chisel the knee without a joint and in and the same log.

(cikai + vyācā = cikāvyāsā ; yōjkippān – he would attach)

682. சங்காத் தீர்க்கத்தின் மேலே, தலமானத்தை ஆரோபிப்பான்.

(ஆரோபிப்பான் - கூட்டுவான்)

The mason would add the height required for the foot to that of the calf.

(ārōbippān̲ - he would add)

683. தொடை நடுவில் மூன்றிலொன்று ஊருத்தண்டத்தில் விஸ்தாரமாவது.

One third of the breadth of the centre of thigh must constitute the width of the base of the thigh.

684. ஊருத்தண்டத்தில், அடியகலத்தில், முக்கால், நுனி யகலமாவது; ஜங்கை அடியும் அதற்கொத்து இருப்பது.

The lower end of the thigh must have a width equal to three fourths of that of its base.

685. ஜங்காத்ர விஸ்தாரம், ஜங்கா மூலத்தில் மூன்றி லொன்றாகக் குறைந்திருப்பது.

The width of the lower end of the calf must be equal to one third of that of its upper end.

686. பாதத் தலாயாமத்தை மூன்று செய்து, இரண்டு தலாயாமமாம்.

Segregating the length of foot into 3 parts, with one part thereof, the breadth of the front edge of foot will be chiseled.

687. தலாக்ர விஸ்தாரத்தை மூன்று கூறு செய்து, இரண்டு கூறு [தலமத்ய] விஸ்தாரம் ஆவது; தலாக்ர விஸ்தாரத்தை மூன்று கூறு செய்து ஒரு பார்ஷ்ணி அகலமாவது.

Bifurcating the breadth of the tip of foot into 3 parts with 2 parts thereof, he would tool the centre of foot and with 1 part, that of the heel.

688. ஜங்காக்கிரத்தில் அதிகாயதமான அகலத்தில் துளையைச் செய்து, குறுக்கே 'சிக்'கென்று இருக்கத்தக்கதாக ஏற்றுவான்; பின்பு, பாகு மூலம் சொல்லப்படா நின்றது.

Having made a wide aperture at the lower end of the calf, he would fix the heel with it quite firmly. Thereafter, upper end of the upper arm has been related.

689. பாகு மூலத்தின் வியாசம் மூன்று.

The width of the top part of the upper arm must be of fingers 3.

690. நுனியகலம் விரல் இரண்டு; பிரகோஷ்ட மூலம் விரல் இரண்டு.

The lower end of the upper arm should be of fingers 2 while the breadth of the forearm near the elbow must measure out to be 2 fingers.

691. இரண்டரை விரல் பிரகோஷ்ட மாகிலுமாம்.

The aforesaid measure for forearm may also be of fingers 2 ½.

692. அடிப்பரப்பில் பாதி பிரகோஷ்டாக்கிர விசாலமாவது.

The width of forearm near the wrist must be of half the width of the ditto arm close to elbow.

693. பாகு, பிரகோஷ்ட [நடு], கோர்ப்பரம், ஜானுவைப் போலேயும் இரண்டு விரல் சிகாமானமும் கொண்டு திருடமாகவோஜிப்பான்.

The edge of the elbow should be chiseled with a measure of 2 fingers which must be equal to the measure of the knee.

694. வம்சத் தண்டத்தினுடைய பார்சுவங்களிலே, பார்சுவத் தண்டங்களை யோஜிப்பான்.

On either side of the shaft meant for back bone, he would attach two shafts of wood.

695. கடியிலே நின்றும் வட்சாந்தரமான தீர்க்கத்தை உடைத்தாய், அதன் தலம் மூன்று விரலாய், வம்சத் தண்டத்திற்கு ஒத்த நீவரத்தை உடைத்தாய், அடியிலும் நுனியிலும் குடுமிகளை உடைத்தாய் இருப்பது.

With a width of 3 fingers, its length must be up to the chest, which should be equal to that of Vancattanu. At top and bottom, it must possess protruding ends for joining purposes.

696. நுனிகளைப் பட்சத் தண்டத்திலும், அடிகளைக் கடிதண்டத்திலும், யோசிப்பான். மூன்று விரல் இடைவெளிகளை உடைத்தாயிருக்கிறதுகளிலே திருடமாக யோசிப்பான்.

The upper tips and the lower ends must be affixed to the paṭcattaṇṭu and the kaṭittantu respectively. He would firmly attach them at the gaps of 3 fingers.

697. அக்ரத்திலும் மூலத்திலும் பார்ச்வத் தண்டத்திலும் நிரந்தரமாக யோசிப்பான்.

The limner would joint it quite tightly without giving any room to shack at the ends and with the pārcuvattaṇṭu.

698. உள்ளங்கை, உள்ளங்கால், காதுகள் இதுகள் செப்புத் தகட்டினாலே யோசிப்பான்.

The mason would make the palm, sole and the ears in copper plate.

699. செவ்வையான பிம்பங்களுக்குச் செவ்வையாகவும், வளைந்த பிம்பத்திற்கு வளைந்ததாகவும் சூலத்தைச் செய்வான்.

For the cocked idols, the shulā must be a straight one and for the bent ones, crooked.

700. தேவர்களுக்கு இப்படிச் சொல்லித், தேவிகளுக்குச் சொல்லப்படா நின்றது.

Having scrolled for Devās like this, now has been enumerated for Devis.

701. மத்யோதரத்தை மூன்று செய்து, ஒரு கூறு வம்சத் தண்ட விஸ்தாரமாவது; எட்டில் ஒன்று குறைந்து நுனியில் செல்ல விருத்தமாயிருப்பது.

The width of the centre part of stomach must be divided into 3 parts, and with 1 part thereof, he should chisel the breadth of Vancattaṇu, while keeping its top's width equal to 1/8 of its own breadth.

702. பாகுபர்யந்தத்தில் விஸ்தாரம் பாகுவின் பாதியாவது; நின்றது வட்சத்தண்டாயதம் ஆவது. அதனுடைய விஸ்தாரமாவது, அதில் பாதி. அதன் பின்பு கடித்தண்டம் சொல்லப்படா நின்றது.

The end of upper arm must have a width equal to half of that of the upper arm. The remaining measure should constitute the length of Vakshattaṇṭu. Its breadth must be equal to half of its height, Thereafter, kaṭittaṇṭu has been dealt with.

703. கடித்தாரத்தை ஐந்து செய்து, நான்கு கூறு அதன் நீளமாவது; நின்றது, முன்போலே செய்வான். விசேஷம் சொல்லப்படா நின்றது.

The breadth of hip must be parceled into 5 parts and with 4 parts thereof, its (katitanta's) length should be estimated. The rest, as recounted before. Now has been delineated its specialty.

704. ஆசனத்தில் வம்சத் தண்டத்தில் மேலே எட்டு விரல் ஏற்றிக் கொள்வான். இதில், பிருஷ்டமானம் விரல் நான்கு நின்றது.

The limner would insert, into the seat to a depth of 8 fingers the vamcattaṇṭu, And into the buttocks part, he would insert it to a height of 4 fingers.

705. ஸ்தானகத்திலே, ஜங்கா தண்டத்தில் நின்றும் கர்ப்ப கர்த்தப் பிரவேசார்த்தம் தலத்தின் கீழே விரல் ஆறு.

In the standing posture of the idol, the artificer would add 6 fingers depth along with that of the calf.

706. சூலம் இப்படிச் சொல்லி உபசூலம் சொல்லப்படா நின்றது.

Thus spoken in extensor the shūlā, now has been plunged into describing upashūlā.

707. சுவர் மத்தியந் தொடங்கி, வட்சத்தில் முற்கூறு முடிவாக உபசூலத்திற்கு நீளமாவது; எட்டு விரல் பரப்பாவது; அதன் நீக்கம் விரல் நான்கு; சூலயோக்ய மானத்தினாலே உபசூலத்தையுஞ் செய்வான்.

The length of upashūlā must equalize the gap covered by the centre of bhitti and the end of the front part of the Vatcattantu. Upashūlā should have a width, 8 fingers; Its thickness must be of fingers 4.

708. சூலப் பரப்புக் கொத்தாய் துளையு முடைத்தாய், இரண்டு குடுமியோடுங் கூடியிருப்பது.

The upashūlā must be having holes and 2 juts for joing purposes. The Upashūlā should have a measure proportionate to that of shūlā.

709. அந்தச் சூலத்தின் நடுச் சுவரிலே துளையாய், அதிலே அடியைக் கிடாவிச் சுற்றிட்டு உரக்கச் செய்வான்.

That Upashūlā's aperture, at its centre wall, must be fixed with the base and made firm.

710. வட்சோத் தண்டத்தையும், கடித் தண்டத்தையும் தரித்த சூலங்களைச் சுவரில் குழியிலே செலுத்தி உரப்பிப்பது. முற்புறத்திலே ஆணி கொள்வான்.

Vakshottaṇṭu, kaṇittaṇṭu and the upashūlāttantu, all these three should be fixed at the hole and nailed at the front.

711. உபசூலச் சிகையினுடைய நுனி, வட்சத் தண்டத்தில் முற்புறத்திற்கு ஒத்து இருப்பது. உபசூலச் சிகையிலும் வம்சாக்சிங்களிலும் துளைகளைச் செய்வான்.

The tip of the jut of the upashūlā must find a position on par with the front part of the Vancattaṇṭu. The artificer should pierce apertures at the top of the upashūlā and at the end of the Vancattaṇṭu.

712. உலோகத்தாலே யாதல், மரத்தாலே யாதல் திருடமாக யோசிப்பான்.

(திருடமாக – உறுதியாக)

At that holes the mason would, by placing metal or wood, make the joint quite tight.

(tiruṭamāka – tightly)

713. பிம்பார்த்தத்திற்குச் சூலம் சொல்லப்பட்டது. ஆகையாலே இந்தச் சொன்ன மார்க்கத்திலே சூலத்தைச் செய்வான்.

This shūlā description has been rendered for making idols. So, he would chisel the shūlā in the manner depicted hitherto.

714. சூலலட்சணஞ் சொன்ன பின்பு, சூலஸ்தாபனஞ் சொல்லப்படா நின்றது.

Having recounted the shūlā characteristics, now has been declared the erection of the skeleton of wood.

25. சூலஸ்தாபனம்

715. அனந்தரம் சூலஸ்தாபனம் சொல்லப்படா நின்றது.

Thereafter, the erection of shūlā has been sketched.

716. கர்ஷணைக்கு விதித்தமானம் நட்சத்திரம், வாரம், முகூர்த்தம் இவற்றை நிச்சயித்து, ஸ்தாபனத்திற்கு முன்னே அங்குரார்ப்பணத்தைச் செய்து, பிரசாதத்திற்கு முன்னேயாதல் ஐசான்யத்திலேயாதல் மண்டலத்தைச் சதுரச்ரமாக ஐந்து, ஏழு, ஒன்பது முழத்திலே மூன்று பத்தியாக்கி, ஒன்பது தாணுமாயிருப்பது.

(கர்ஷணை – உழவு; பிராசாதம் - கோயில்)

As advocated for tilling, the limner would assign a suitable star, day and time before erection. Preceding he installation, he would do the ceremony called Angurārppaṭam. He would parcel the area of a choultry, chosen either in front of a temple or at north – east quarter, into 3 squares of 5, 7 or 9 cubits. The choultry, should be supported by 9 pillars.

(karshanai – tilling; prācātam – temple)

717. [தலம் எட்டு] அம்சம் உயரமாதல், தூண் ஒரு பத்தி உயரமும், பலத்தை யுடைத்தாய், மூங்கிலை உடைத்தாய் நன்னிலை முதலானவற்றாலே மேயப்பட்டு, மேற்கட்டி முத்துமாலை, தர்ப்பைமாலை தரங்கத் தோரணத்தோடுங் கூடி வேஷ்டனத்தோடுங் கூடி இருப்பது.

(தரங்கம் - அலை; வேஷ்டனம் - சுற்றிக் கட்டுதல்)

The floor of the choultry should have a thickness of 8 fingers and the pillars must have a height of 1 patti. The pillars should be sturdy. The entrances should made with bent bamboo sticks. Garlands of pearl should adorn the roof. Durbā grass should be wound round the entrances making wave – like appearance.

(tarangam – wave; Vēshṭaṉam – wound round)

718. நான்கு வாயிலோடுங் கூடின தூண்களும் போதிகையோடு கூடியிருப்பது. நான்கு வாயிலன்றியே நான்கு திக்கிலும் ஜாலகமாய், மண்டபத்தில் மூன்றிலொன்று நடுவே வேதிகையுமாய், வேதிகை யகலத்திலே மூன்றிலொன்று உயரமுமா யிருப்பது.

(போதிகை – அடைக்கட்டை;

ஜாலகம் - சன்னல்;

வேதிகை – மேடை)

The four pillars at the even number entrances must have capitals. Apart from these, windows must adore the four sides. In the centre place of choultry he would have a stage to a length equal to 1/3 of that of the choultry and to a height equal to 1/3 of that of the self – same choultry.

(botikai – capital;

jālakam – window;

vētikai – platform)

719. மூன்று விரல் அகலமுமாய், மூன்று விரல் உயரமுமாயிருக்கிற உபவேதியோடுங் கீழே கூடியிருப்பது.

At the centre of the platform built, should be constructed another stage with a breadth 3 fingers and height equal to 3 fingers.

720. கண்ணாடியில் உள்போல நன்றாகச் செய்வான்; அதிலே பதத்தைச் செய்வான்.

(பதம் - பளபளப்பு)

The artificer would make the surface of the elevated place so firm and polished just like the surface of a mirror.

(patam – sheen)

721. வேதிகையைச் சூழ நாலு கோண முதலான குண்டங்களைச் செய்வான்.

722. சதுரச்ரமாயும், வில் போலவும், விருத்தமாயும், பத்துமம் போலவும், இந்த நான்கு குண்டம் கிழக்கு முதலாகக் கற்பிப்பான். விருத்தக் குண்டத்தைக் கிழக்குக்கும் ஈசானத்திற்கும் நடுவே கற்பிப்பான்.

(விருத்தக் குண்டம் வட்டமான குண்டம்)

The mason would establish the fire pits in the four shapes - square, bow – like, round and lotus shaped in the directions starting from east. He would construct the round one, betwixt the east one and the north – east one.

(viruttak kuṇṭam – round fire trench)

723. கேவலமானத்திற்கு இப்படிக் கற்பிப்பான். கௌரீ சகிதமான பிம்பத்திற்குக் கோணங்களிலே அரசிலைப் போல இருக்கிற குண்டத்தைக் கற்பிப்பான். குண்டலட்சணத்தில் சொன்னாற் போலே எல்லாக் குண்டத்தையும் செய்வான்.

(கேவலமானம் - சாதாரணம்)

This has been uttered for ordinary type. For the idol with Gauri, the pits must be built up with embellishments at corners resembling leaf of peepul. The remaining pits should be constructed with measures and designs as advocated earlier.

(kēvalamanam – ordinary)

724. சாணத்தாலே மெழுகி, மாப்பொடியினாலே அலங்கரித்து, அவ்விடத்திலே பிராமண போஜனஞ் செய்து, பின் புண்ணியாகம் செய்து, மகேந்திர பதத்திலே வாஸ்து ஓமத்தைச் செய்து, வேதிகையையும் அக்கினிக் குண்டத்தையும் பர்யக்கினிகரணம் செய்து, கற்பித்த திவசத்திற்கு முன்னாள் ராத்திரி அதிவாசித்து, வேதிகை மேலே பதினாறு மரக்கால் நெல்லாலே பரப்பி, அதிலே எட்டு இதழும் தாமரைக் கர்ணிகையோடே கற்பித்து, அரிசி, எள்ளு, பொரி, பூ இவற்றாலே அலங்கரித்துச், சயத்தைச் சூழப், புதுப் புடவையினாலே சூழ்ந்து, தூபம், தீபம், புஷ்பம் இவற்றினாலே இருதய மந்திரங்கொண்டு அருச்சிப்பான்.

The Viswakarman would besmear the fire pits with cow – dung, adorn with rice flour, feed the Brahmanās, execute the Puṇyāgā, accomplish the vāstu hōmā up to the mantrā Mahēndra patā, circumambulate the vēti and the fire pit along with fire, reside at that place observing fast in the night preceding the assigned day, spread 16 marakkal of unhusked rice, make an image of lotus with 8 petals at the centre, pink with rice, sesamum, roasted rice and flower, spread a new saree over it, making a bed and worship with flowers, incense, and light, uttering Hrdaya mantra.

725. மண்டபத்திற்குப் புறப்புறத்திலே ஸ்நானம் செய்கிற குழியும் கற்பித்து, அதில் நடுவே மரப்பீடம் வைத்து, அதிலே கிழக்கே முகமாச் சூலத்தை வைத்துப், பஞ்சகவியத்தினாலே அபிஷேகஞ் செய்து, தேவ தேவிகளிருவரையும் அபிஷேகஞ் செய்து, கந்த புஷ்பாதிகளாலே அர்ச்சித்துப், பொன்னாலே யாதல் நூலாலே யாதல் நூற்கயிற்றாலேயாதல் அவர்களுடைய வலக்கையினாலே காப்புக் கட்டி, லம்ப கூர்ச்சத்தோடுங்கூடிப், புதுப்புடவையாலே சுற்றி, நிருத்த வாத்யங்களோடே கூட, கிழக்கே தலையாகவும் மேலே முகமாகவும் கிடத்தி, அதற் கிடப்புறத்திலே உமாசூலத்தையுங் கிடத்துவான்.

The statuary would dig a trench outside the choultry, keep a wooden seat at its centre, place the shūlās with face towards east, bathe with pañcakavyā, shower fragrant and flowers over them, tie their right hands with threads of cotton or of gold and wrap up with a new saree; Afterwards, the artificer would place the shūlās as with countenances upwards and towards east accompanied with dance and music. The Uma's shūla should be kept left to that of Deva's.

726. அந்த இருவரும் தலைமாட்டிலே நூலாலே சுற்றப்பட்டுச் சாபிதானத்தோடுங் கூடிச் கூர்ச்சத்தோடுங் கூடிக், கோடிப் புடவையாலே சுற்றப்பட்டிருக்கிற இரண்டு கும்பமாகக் கற்பித்து, அதை வைத்து அதிலே ஒன்றிலே பதக்கு தண்ணீரும், ஒன்றிலே குறுணி தண்ணீரும் பூரித்துச் சந்தனம், பூ, இவற்றையுங் கொண்டர்சித்து, இதிலே பதக்கு கொண்டது சிவனும், நின்றது கௌரீ கும்பமாகக் கற்பித்துச், சிவ கும்பத்திலே மூலமந்திரமும், கௌரீ மந்திரம் கௌரீ

கும்பத்திலும் நியசித்துக், கந்தாதிகளினாலே அர்ச்சித்து இந்த இரண்டு கும்பத்தைச் சூழ எட்டுக் கும்பத்தை ஸ்தாபித்து, வித்யேசுவரரை அவர்கள் மந்திரத்தினாலே ஸ்தாபித்துக், கந்தாதிகளினாலே அர்ச்சித்து, வாஸ்து ஹோமஞ் செய்த குண்டத்திலே அக்கினியைக் கற்பித்து, அக்கினியாதானம் முதலாக அக்கினிக்கார்யத்திலே கற்பித்தாற் போலே செய்து, அரசஞ்சமித்து கொண்டு கிழக்குக் குண்டத்திலும், ஆக்னேய குண்டத்திலே வன்னியும், தெற்கே அத்தியும், நிருருதியிலே கருங்காலியும், மேற்கே வில்வமும், வாயுத் திக்கிலே நாயுருவியும், வடக்கே அருகும், ஐசானியத்திலே கருங்காலியும், பிரதானக் குண்டத்திலே சமித்துக்களை இருதய மந்திரத்தினாலேயும் நெய்யினாலும் தத்புருஷ மந்திரத்தைச் செய்து, பயறு கலச மந்திரத்தினாலும், சர்க்கரையை அஸ்திர மந்திரத்தினாலும் தனித்தனியே ஓரொன்று நூறு ஓமஞ் செய்வான். திரவியாந்தத்திலே வியாஹ்ருதியினாலும் தேவி தேவர்களுக்கும் ஓமம் சமமாகச் செய்து ஜயாதிரப்யாதானங்களினாலும் ராஷ்ட்ர பிருத்தினாலும் ஓமத்தைச் செய்வான். (ஜயாதி + அப்யாதானம் = ஜயாதிரப்யாதானம்)

The mason would place two small pots, wrapped up with new saree nearer to the heads of the two shūlas, pour water of measure patakku in one of them and the same of measure 1 kuṟuṇi in another muttering mantras, showering flowers on assuming the former pot as Siva and the later. Gauri, using Siva mantra for the first and Gauri mantra for the second; keep another set of 8 pots, invite Vidyēswarās onto them reciling mantras, enkindle fire in the fire pit doing all homās; do homā putting peepul sticks in the eastern pit, vanni loppings in the pit of Agni direction, atti sprays in the southern fire, Rarūṅgāli sprays in the pit of nrruti side, vilvā sticks in the western sacrificial fire, nāyuruvi sprays in the fire situated in the vāyu direction, dried grass in pit of northern - side, karu n?gali sprays in the fire enkindled in the direction of north – east, peepul sprays in the main sacrificial fire uttering the hrdaya mantrā while pouring clarified butter with the mantra, Tatpursusha in the ditto fire and observe homa in the main pit pouring pulse uttering kalace mantrā, and do the ditto with sugar and Astra mantrā. He would repeat the homa 100 times in each case. After this homa he would do homa, for both Deva and Devi in equal measure, called vyāhrdi hōmā. Lastly, he would execute Jayāti hōmā, Abyātāna mantra hōmā and Rāshtrabrth mantra hōmā.

(Jayati + Abyātānā = Jayātirabyātānā)

727. நான்கு திக்கிலும் நான்கு வேதாத்யயனம் பண்ணுவாரும் திக்குகளிலே ஸ்தோத்திரங்களைக் கற்பித்துத், தேவி தேவேசருடைய மூலமந்திரத்தைச் சொல்லி, இருபத்தியெட்டு ஆஹுதியும், ஹிருதய மந்திரத்தினாலே இருபத்தியெட்டு ஆஹுதியும் சூலங்களைப் ஸ்பரிசித்து இருந்து, ஹோமஞ் செய்து, நிருத்தகேய வாத்தியம் இவற்றாலே இராத்திரி சேஷத்தையும் போக்கி, மற்றாம் நாள் விடிவே ஆசார்யன் மூர்த்திவானோடே கூட ஜலஸ்நானமும் செய்வது. வெள்ளை உத்தரீயமும் வெள்ளைப் பூணூலும் தரித்து, வெள்ளைப் பூவினாலே மாலையும் மேற்பூச்சும் பஞ்சாங்கப் பூஷணமும் தரித்துப் பவித்திரத்தோடுங் கூடின கையும் உடைத்தாய்ச் சகளீகரித்துப் பிரஸன்னாத்மாவாய் மண்டபத்தே பிரவேசித்துச், சூலத்தையும் கவச மந்திரத்தினாலே ஆசரித்து, நெய் கொண்டு ஜயாதிராஷ்டிராந்தமாக

ஹோமஞ் செய்து, ஸ்விஷமக்னே மந்திரங் கொண்டு, பூர்ணாகுதியும் பண்ணிக், கர்ப்பக் கிருகத்திலே சென்று எண்பத்தியொரு பதஞ் செய்து, அன்றியே அறுபத்தினான்கு பதஞ் செய்தும் அதிலே பிரம்மப் பதத்தை அறிந்து, ஸ்தானகமாகிப் தைவிகப் பதத்திலும் ஆசனமாகில் மானுஷப் பதத்திலும் ஸ்தாபிக்குமிடத்து, ஆசனத்தைப் பத்ரப் பீடத்திலும், ஸ்தானகத்தை வேதிகையிலும், முன்னே சொன்ன மரியாதியே பீடவியாசமும் அகலமும் கொண்டு நன்றாகச் செய்து: ஆதாரச் சிலையின் மேலே சமாச்ரமாதல் ஆசனாச்ரமாதல், பாதிகனம் எனக் கற்பித்து, ஸ்தானமாகில் கீழே ஆதாரச் சிலையில் கர்த்தத்தைக் கற்பித்துக் குழி ஆறு விரல் தாழ்வும், மூன்று விரல் பரப்புமாய் அதிலே மூலமந்திரத்தினாலே நவரத்தின முதலான ரத்னமாதல் பொன்னாதல் சூலத்தினுடைய பாதத்தின் கீழே வைத்து ..ச்ரமப் பாதத்தின் கீழ்த்தலத்திலே ஆறு விரல் நீளமும் முன்பே கற்பித்து, எல்லா அலங்காரத்தோடும், எல்லா வாத்தியங்களோடுங் கோவிலைச் சுற்றிப் பிரதட்சிணஞ் செய்து, கர்ப்பக் கிருகத்தைப் பிரவேசித்து, மூல மந்திரத்தை உச்சரியா நின்று கொண்டு உரைக்கச், சூலத்தினடியை அந்தக் குழியிலே ஸ்தாபிப்பான். பின்பு அஷ்ட பந்தனத்தினாலே பந்தித்து, அதற்கு இடப் பார்சுவத்திலே கௌரீச் சூலத்தையும் ஸ்தாபிப்பான்.

Stōtrās meant for the four directions should be recited by the scholars well versed in Vedās. 28 homās, uttering mūlamantras of Deva and Devi and an equal number of homas, murmuring hrdaya mantrā, touching, while this process, the wooden images, should be consummated. The night time should be spent on music and dance. On the dawn of the next day, the Achāryan would take bath along with the iord of the function. Thereupon, the limner would, clad in white garb, adorned with a white sacred thread, wearing a garland of flowers of white hue, pinked with ornaments, bearing a cheerful countenance, enter into the adytum; utter kavacamantra for shūlā execute hōmā with jaga etc; mantrās; consummate pūrnāhuti; bifurcate the sanctum sanctorum into 81 squares 64; place the shūlas at the spot known as square for Dēva if the image is a standing one, or at the spot known as square for human if the image is a sitting one; construct the seats with measures calculated above, earmarking seat in the form of leaf for the idol in the sitting style and in the form of vēti for the idol in the standing posture; construct a basic stone of breadth equal to that of the pītā or ¾ of it and of thickness equal to the width of the pītā; bury nine varieties of gems beneath the feet of the idol,if it is a standing one, making a pit of depth 6 fingers and width 3 fingers; circumambulate the temple with the music of drums and other instruments before entering into the adytum; utter the Mūlamantrā while installing the image in the pit earmarked; make the installation strong with ashtabandanā and install the idol of Gauri left to that of Dēvā.

728. ஆதாரச் சிலையில் குழியிலே கர்ப்ப பாஜனத்தை வைப்பான்.

For the idol, Dēvi also, he would keep the binding material, karppājanā in the pit of the basic stone.

729. கர்ப்ப பாஜனத்தின் அகலமும் குழித்தாழ்வும் விரல் ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஆம்.

The pit to hold the idol of Gauri must have a depth of fingers 5, 6,7 or 8.

730. கர்ப்ப பாஜனத்தோடே கூடின விடத்திலே செய்வான். முற்பாடு சொன்ன மாத்திரத்திலே கர்ப்ப நியாசத்தைச் செய்து கந்தப் புஷ்பங்களினாலே அர்ச்சிப்பான். கர்ப்ப பாஜனத்திலே சூலத்தினடியாக ஸ்தாபிப்பான்.

As deliberated earlier, the limner would, fix the image of Gauri in the pit made in the base stone, while worshipping with fragrant flowers.

731. கர்மமெல்லாம் சிற்பியாலே செய்வான்.

All the above technicalities should be executed by a Sirpi (viswakarman).

732. இப்படி, உக்தமான சூலத்தைப் பிரபுவான ஸ்தபதியானவன் செய்வான்.

Thus celebrated wood – idol would be chiseled by an expert Stapati.

733. இலட்சணத்தோடே கூடிச் செய்கிற ஸ்தபதிக்குச் சில்பி என்று சொல்லப்பட நின்றது

Stapati who could tool an idol quite exquisitely will be celebrated as Sirpi.

734. ஸ்தபதியானவன், சித்ரகர்மாபிக்ஞனாகில் அவனைக் கொண்டு செய்வானல்லன்.

If the stapati is not well versed in Chitrakarmas, he will not be entrusted to tool idols.

735. இப்படிப்பட்ட கர்மமறியாதவனைக் கொண்டு செய்தால், கர்த்தாவிற்குப் பொல்லாங்கு உண்டாகும்.

If images are chiseled by green horns, only calamity will befall on lord.

736. இப்படியாயச் சிற்பாச்சாரி கர்மயோக்யம் செய்கிற பொழுது ஆச்சார்யனையும் சஹாவாய் வைத்துக் கொண்டு செய்வான்.

In this way, while the Sirpaccāri making an idol, he would be getting the guidance of his preceptor Achāri.

737. யாதொருபடி சாஸ்திரோக்தமாகச் செய்த சிற்பாச்சாரிக்குக் கர்மம் முகிந்த அளவிலே, பஞ்சாங்கப் பூஷணமாகிற கடுக்கன், மோதிரம், அரைஞாண், கைவளை, தலைப்பாகை இப்படிக்கொற்ற பஞ்சாங்கப் பூஷணமும், வஸ்திரமாபரணங்களும், தனங்களும் அர்ச்சித்துக் கொடுப்பான்.

The lord for whom the Sirpaccari consummated the job of chiseling images, would present the Sirpaccāri with the Pañjangapbūshaṇas viz ear – ring, finger – ring, loins – cord, arm – ring and turban along with money dresses and ornaments.

738. வஸ்திரம், மோதிரம், நிஷ்கம் ஐந்து பொன்னாலே இவற்றாலே ஆச்சாரியனையும் பூசிப்பான்.

One who spends for the installation, must present the Achāri with garbs, finger – ring, and gold of weight 4 nishkā.

739. சூலஸ்தாபனம் சொன்ன பின்பு, ரஜ்ஜு பந்தனஞ் சொல்லாப்பட நின்றது.

Having observed the installation of the wood – skeleton, now has been delineated the tying methods.

26. ரஜ்ஜு பந்தன இலட்சணம்

740. அனந்தரம் ரஜ்ஜு பந்தனம் சொல்லப்பட நின்றது.

Thereafter, tying of the wood – skeleton has been recounted.

741. [சாவே] சந்திகளிலேசெப்புப் பட்டத்தினாலே கட்டுவான்.

At the joints made in the wood –skeleton, the limner would strengthen them by fastening with copper sheets.

742. சூலத்தை அஷ்டபந்தனத்தினாலே பந்தித்துப், பின்பு கயிற்றினாலே பந்திப்பான்.

The mason would anoint over the joints in the skeleton – image with ashṭabandhanā.

743. கருவேலம் பிசின் குருந்துருக்கம், குங்குலி கூலம் மற்றும் பிசின், சர்க்கரை, காவி, நெய், எண்ணெய் இவை எட்டும் அஷ்டபந்தனமாவது.

The gum of Acacia Arabica, gum of Olibanum tree, rasin, resinous gum, Jaggarin, Red – ochre, ahee and Gingely oil – these 8 combined is called as ashtabandhanā.

744. திருவேட்டம் பிசின் கூறு நான்கு, குந்துருக்கம் கூறு மூன்று, குற்குலம் கூறு ஐந்து, சர்க்கரை கூறு ஐந்து, நறும்பிசின் கூறு எட்டு, காலி கூறு மூன்று இந்த ஆறும் பொடி செய்து, நெய்யும் எண்ணெயும் கூட்டிப் பிசைந்து ஒரு மண் பாத்திரத்திலே இட்டுத், தேனுருகினாற் போலே காய்ச்சிச் சூலத்திலே பூசிப், பின்பு ரஜ்ஜு பந்தத்தைச் செய்வான்.

The statuary would mix the powder of 6 measures of Acacia Arabica, 3 measures of the gum of Olibanum, 5 measures of Resin, 5 measures of jaggerin, 8 measures of resinous gum, 3 measures of Red – ochre with ghee and gingely oil and boil in a mud vessel to a condition or honey; he would dauf over the wood – skeleton this before binding on.

745. ரஜ்ஜு பந்தங்கள் நாபி மத்தியத்தில் நின்றும் மூன்று விதமாக மேல் நோக்கியிருப்பது. சுஷுமுனை நடுவே ஓடுவது; பிங்கலை அதற்குத் தட்சிணத்திலே ஓடுவது; இடை அதற்கு இடப்புறத்திலே ஓடுவது. இவை மூன்றுமே பிரதான நாடிகளாகச் சொல்லப்பட்டது.

Three ligatures from the centre of navel should peragrate upwards in 3 ways. The central one moves through cushumuṉai, the left one goes through Piṅgalai and the right moving cord travels in the way called idai. All these 3 are celebrated as important nadis.

746. இரண்டு அங்குலம் பருமையை உடைத்தாயிருப்பது; அதிலே இரண்டு மூன்று இடத்திலே சுற்றப்பட்டிருப்பது.

This ligature must be of 2 inches girth over which the binding cord must run over at 2 or 3 places.

747. அந்த நாடிகள் மூன்றிற்கும், புருவத்திற்கும் நடுவே கூடுவது.

Those 3 nadis should meet at a point between 2 eye brows.

748. அந்த நாடிகள் மூன்றும், மார்பு நடுவிற்குக் கீழ்ச், சிறிது வெளியாய் இருக்கும்; வம்சத் தண்டத்தை ஆச்ரயித்து இருப்பதுஞ் செய்யவும்.

Those 3 nadis should widen one from the other below the centre of chest and be touching the Vancattaṇ ṭu.

749. புருவத்திற்கு மேல் தலையளவாக மூன்று நாடியும் ஒன்றாகக் கூடியிருப்பது. அந்த மூர்த்தாவிற்கு மேலே ஏழு நாடிகளையுடையது.

The three nadis will congregate beyond the eye brows on pate and apart from that there are 7 nadis.

750. கந்தாரி என்றும், ஹஸ்தி ஜிஹ்வை யென்றும், பூஷா என்றும், யசஸ்லினீ என்றும், அலம்புளவு என்றும், குஹு" என்றும், சங்கினீ என்றும் ஆக ஏழு விதமாம்.

They are Gandāri, Hasti gihvai, Pūshā, Yashasviṉī, Alambushā, Kuhu and Shangiṉī in varieties.

751. காந்தாரி இடக்கண்ணிலே செல்லும்; ஹஸ்தி ஜிஹ்வை வலக்கண்ணிலே செல்லும்.

The nādi Gandāri will peragrate through the left eye while Hasti gihvai, right eye.

752. பூசா வலச் செவியிலும், யசஸ்வினீ இடச் செவியிலுமாவது

Pūshā passes through the right ear when Yashasuiṉī, left ear.

753. அலம்புஷை மேட்டிர மூலத்திலும் குதாந்தத்திலும் செல்லும்.

The nādi Alambushai traverses via the base of male organ and the anus..

754. நாபி மத்யமளவாகச் சங்கினீ நாலாவது.

The fourth nādi, Shangiṉī travels across the centre of navel.

755. அந்த நாடிகளிலே நான்கு நாடி, மூன்று யவை கனமாயிருப்பது. நின்ற மூன்று நாடியும் நான்கு யவை கனமர்யிருப்பது.

Four nādis of those nādis, will be having a thickness of yavā 3 and the rest, 4 yavās.

756. சுசும்னை முதலாகச், சங்கினீ முடிவாக நாடிகள் பத்தென்று சொல்லப்பட்டது.

Sushumṉai to shangiṉī 10 nādis have been enumerated.

757. பிரதான நாடி மூன்றுகளுடைய அடிகள், மேட்ராவசானமாவது; அந்த நாடிகளடியிலே நின்றும் பதினெட்டு நாடிகள் வேறுபட்டது.

The three principal nādis should meet at the base of the male organ and from there 18 nādis branch off.

758. [விமலா, கோஷணீ, பிருத்வீ, வாயவீ, சுகனீ, மந்தினீ] ரோதனீ என்றும், ரஸவேதி என்றும், மிருதங்கீ என்றும், ஸ்ரம்ஸினீ என்றும், சப்தம் என்றும், ஸ்பர்சீ என்றும், அங்கபூர்ணை என்றும், சர்வபூ என்றும், வனி என்றும், வாஹினீ என்றும், ஆக நாடிகள் பதினெட்டு விதமாம் பிங்கலையி னடியிலே பிரவேசித்து இருப்பது.

The nādis beneəth the Pińgalai are 18 and they go like – vimaḷā, Koshanī, Prthvī, Vāyavī, Gagaṉī, Mandhiṉī, Rōdhaṉī, Rasavēti, mrtańgī, Sramsiṉī, Saptam, Sparisī, Angapūrnai, Sarvapū, Vaṉi and Vahiṉī.

759. அந்த நாடி மூன்று யவைப் பிரமாணம் பருமையாக இருப்பது.

The foregoing nādis, (nerves) each, will have a thickness of yavās three.

760. அவற்றில், ஆதிநாடி ரஸநாடியாய் வலக்காலில், ஊரு மூலத்தில் சென்றிருப்பது.

Among them, the Atinādi as a Rasanādi reaches the upper end of the right thigh.

761. ஊரு மூலத்தைச் சூழச்சுற்றி, நளகையில் முடிவளவாக இருப்பது.

This ātinādi taking a round in the base of the thigh, will reach the bottom of the calf.

762. அவை எல்லாம் பிங்கல மூலத்தை ஆசிரயித்துக் கீழ் நோக்கி நாணுவது.

These are off shorts of the vein Pińgala and they move downwards.

763. சப்தாதீனி ஆறு நாடிகள் இடையின் மூலத்திலே பற்றி இருப்பது.

The six nādis from Saptā are branches of the nādi Idai.

764 .இவற்றிலே ரசவியாபினியான நாடிகள் இடக்காலிலும் நளிகாக்ரத்தை மறைத்து நிற்கும்.

These Rasanādis, coiling over the left thigh, meet at the lower end of the calf of left shank.

765. நின்றவை சுஷும்னையினடியைப் பற்றி, வம்சத்தில் பார்சுவத்திலே ஏறி, வம்சத் தண்டத்தின் மேலே குறுக்கே பாகுமளவு வியாபித்து இருப்பது; அவைகள் சுகனீயும் மர்த்தனீயும் ரோதினீயும் வலக்கையிலேகிச் செல்லும்.

The remaining six nādis, off shoots of the Shusumn̲ai, move upwards through the Vancattantu and after this, via Pārcuvattanṭu reach, at last, the two bases of the two upper arms. Among these 6 gagan̲ī, Mardhan̲ī and Rōdhin̲ī go the right upper arm.

766 .இரசவாதினியும், மிருதங்கியும், ஸ்ரம்னியும் இடக்கையி லேகிச் செல்லும்; பாகுமூலத்தைச் சுற்றி மூன்றும் ஒன்றாயிருப்பது.

The remaining three viz., Rasavādhin̲i, mrdhangi and Sramn̲i attain the base of the left upper arm.

767. அதில் நுனியே நின்றும் எட்டு நாடியாய், இடத்திற்கும் வலத்திற்கும் ஓடும்.

The veins reached the twin upper arms merge into a single vein in the respective arms and from these two single points, once again 8 nerves branch off and run in the respective paws.

768. கையினடியிலே நின்றும் உள்ளங்கை யளவாகப் பரந்து இருப்பது.

These artilleries must move up to the palm in the twin paws.

769. அவற்றினுணிகளெல்லாம் ஒன்று போல மணிபந்தத்தைச் சுற்றியிருப்பது.

The ends of these nerves will coil round the wrist of the concerned chiro.

770. ஒரு கையாகிலுமாம், அநேகக் கையாகிலுமாம், கைதோறும் இப்படிக் கற்பிப்பான்.

Whether the idol has one chiro or many, the limner would construct the artilleries in the same mode.

771. இப்படிப் பிரதி மைகளுக்குப் பிரதான நாடிகள் இருபத்தியெட்டு.

In this method, 28 veins have been advocated for idols.

772. பிரதான நாடிகளை இப்படி அடத்திலே கற்பிப்பான்.

The mɛson would arrange the principal nādis in this mode.

773. அவற்றிலே நின்றும் பின்னமான நாடிகள் [எட்டு]

Each of the above veins branches into 8 veins.

774. அதிலே நின்றும் எல்லா அங்கங்களையுஞ் சுற்றப்பட்ட நாடிகள்[எழுபத்திரண்டாயிரம்]

From those veins, a total of 72000 artilleries circulate the whole body.

775. செல்லரித்த அரசிலை போலே நாடிகளெல்லலாம் சுற்றப்பட்டு இருப்பது.

The nādis will remain would up just like a termite eaten peepul leaf.

776. மிகவும் பக்குவமான தேங்காய் நார்களால், இந்தச் சகரிகளால் நாடிகளைப் பின்னுவர்.

These veins will be built women wiht fibres of coconut.

777. [ஆறு] யவை பிரமாணமான சகரியைக் கயிற்றாலே சுற்றுவான்.

These veins with a thickness of yavas 6 will be fastened over with ligature.,

778. ரஜ்ஜுவினாலே எட்டிதழுடைத்தான ஹ்ருதய பத்மத்தையும் செய்து, அதன் நாளத்தைப் [நாபி] யளவாகக் கொண்டு சென்று, சுஷும்னையோடே கூட்டுவான். இது ஜீவஸ்தானமாகச் சொல்லப்பட்டது.

The limner would make a lotus of 8 petals with ligature. He would fasten this with the vein shusamna by name. The stalk of the lotus should reach the navel. This is called Jeevastān̲ā by name.

779. மூல மந்திரத்தை ஸ்மரியா நின்று கொண்டு ரஜ்ஜு பந்தாதிகளைச் செய்வான். ரஜ்ஜு பந்தமிப்படிச் சொல்லி, அனந்தரம் மிருத்சம்ஸ்காரம் சொல்லப்படா நின்றது.

(மிருத் - மண்; சமஸ்காரம் - பக்குவம்)

The statuary would utter basic mantra incessantly while tying the ligatures. Having recounted the fastening of cords, now has been pronounced the preparation of day.

(mrth – earth; camskāram – to make suitable)

27. மிருத் சம்ஸ்காரம்

780. அனந்தரம் மிருத்சம்ஸ்காரம் சொல்லப்படா நின்றது.

Afterwards, the mode to make the earth suitable has been articulated.

781. ஜாங்கலம் என்றும், அனுரூபமென்றும், சம்மிச்ரமென்றும் மூன்று விதமாம்.

Jāŋgalam, Anurūpam and Cammiccaram are the three kinds of earth.

782. குழி கல்ல அரிதாயும், மிகவும் த்ருடமாக இருக்கிற மண் ஜாங்கலமாம். நுண்ணிய மணலை உடைத்தாயக் குழி கல்ல எளிதாய், மூன்று முழத்திலே நல்ல தண்ணீர் காணப்பட்டது அனுரூபமாம், இந்த மண்.

Jāŋgalam is that variety which does not give way easily to make a bore and that which is flexible and renders water at a depth of 3 cubits, full of nice sand, is called Anurūpam.

783. அந்த மண் இரண்டும் கூடினது சம்மிச்ரமென்று பெயராம்.

The mixture of these two kinds of soil is known as Sammicram by name.

784. அந்த மூன்று விதமான மண்களில், ஏற்ற தண்ணீரை உடைத்தாய்ச், சுத்தமாய், மனசிற்கு நன்றாகயிருக்கிற இடத்தில், ஆற்றிலேயாதல், ஓடையிலே யாதல், வெளுத்ததாயிருக்குதல், சிவந்திருக்குதல், பொன் போன்றிருக்குதல், கருதியிருக்குதல் செய்த சேற்றை எடுத்து, அந்தச் சேற்றைப் புதுப்புடவையினாலே பாத்திரங்களிலே வடித்துக் கொள்வான்.

The soil among the above 3, of hue white, red, golden or black, should be dug out from under a river or brook and should be filtered over a new cloth.

785. அந்தப் பாத்திரத்திலே இருக்கிற சேற்றை இறுகுமளவும் உலர்த்திப், பின்பு நாற்பால் மரப்பாலடித்துப் பிழிந்து, மருது, கருங்காலி நீரும் இந்த நீர்களைக் கூட்டி, மர்த்திப்பான்.

The artificer would allow the mire to desiccate completely and would add, to it, milky rope from four different trees along with the essence of the barks of the trees Terminalia alata and karuŋgāli and stir well to coagulate.

786. அந்தச் சேறு யாதொரளவில் திரட்டலாம் அவ்வளவு மூலத்தின் பின் செய்கிறகிரமம் சொல்லப்படா நின்றது.

When the mud attains a consistency, the following method should be adopted.

787. கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் இவை இடித்து ஊறின தண்ணீரை மர்த்தித்து, மீளவும் உலர்த்தக் கடவன்.

Also, the statuary would add the essence of the powder of Indian gall – nut, Terminalia Bellerica and Embolic Myrobalan to it and, once again, allow to desiccate.

788. அது மெழுகுப் பதமான அளவில் எடுத்துத் திரட்டக் கடவன்.

When the clod attains the wax – consistency, he would amass it.

789. கைத்தலத்தில் ரேகை யாதொரு அளவில் அந்த மண்ணிலே பத்தும், அவ்வளவிலே மண்ணைத் திரட்டக் கடவன்.

He would form a lump of the clay in the consistency that the lines on the palm must find an impression over it.

790. பதினோரு விரல் சுற்றும் நீளம் நாழி மண்ணளவிற்கு, நாழியாவது மணல் ஒரு கூறும் கல்லைப் பொடி செய்து அந்தப் பொடி ஒரு கூறும், சர்க்கரைப் பொடி ஒரு கூறும், முன்னே சொன்ன மண்ணோடு கலப்பான்.

The mason would mix with the lump of clay, whose circumference should be of 11 fingers measuring 1 nāzhi, one measure of sand, one measure of the powder of stone and one measure of sugar; The latter 3 should form a total measure of 1 nāzhi.

791. கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய் ஊறின தண்ணீர் வார்த்துப் பத்து நாளாதல், எட்டு நாளாதல், ஏழு நாளாதல் மர்த்திப்பான்.

He would add 3 kinds of juices prepared by the maceration of Indian gall- nut, Embolic Myrobalan and Terminalia Bellerica to the lump and knead during 10, 8 or 7 days intermittently.

792. முங்கிலரிசி, கோதுமை, காசாம்பூ நிறமான உளுந்து இந்தப் பொடிகள் முற்பட்ட மண்ணிற்கு எட்டிலொன்று கூட்டி, இளநீர் வார்த்து, அந்தப் பாத்திரத்திலே நான்கு நாள், நாளொன்றுக்கு மூன்று வீதமாதல், ஒருக்காலாதல் மர்த்திப்பான்.

The stone – cutter would add to the lump, spoken whileom, the seeds of bamboo treed from the husk, wheat and phaseolus mango in the hue of the flower of memecylon tinetorium and the water of tender coconut. The measure of the former 3 substances must be of 1/8 of that of the lump prepared earlier. He would knead the mass for 4 days, once a day or thrice.

793. திருவட்டம் பிசின், குக்குலு, குந்துருக்கம், நறும் பிசின் இவற்றைச் செய்து இந்தப் பொடியோடு கூறும், அந்த மண் பதினான்கு கூறும், கட்டித் தயிர் வார்த்து மர்த்திப்பான்.

The limner would add Acacia Arabica to a mixture of Olibanum, Resin and Resinous gum. Taking one part thereof, he would Mix 14 parts of the clay, seen above, along with clotty curd and knead nicely.

794. சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள் இவற்றின் பொடி சமமாகக் கூட்டி, இந்தப் பொடி ஒரு கூறும், மண் பத்துக் கூறும் கூட்டித், தேன், பால், நெய் இவற்றாலே மர்த்திப்பான்.

To the above combination, the mason would add equal parts of the powder of dry ginger, pepper, long pepper and turmeric. The ratio must be 10:1 for the clay and the powder of 4 ingredients. Also he would mix with that, honey, milk and ghee before kneading.

795. விளாம் பிசினும் [வில்வப் பிசினும்], பொடி செய்து, தண்ணீரைக் கொண்டு இது ஒரு கூறும், மண் பதினைந்து கூறும் கூட்டி, எண்ணெய் விட்டு மர்த்தித்துக் குங்குஷ்டம், அரிதாரம், சந்தனம், அகில், கற்பூரம், கோரோசனை இவை தண்ணீரிலே கொண்டு கூட்டி, இது ஒரு கூறும், மண் பத்துக் கூறும் கூட்டிக், குசும்பை எண்ணெய் வார்த்து மர்த்திப்பான்.

The artificer would knead the mass of 15 parts of the clay and 1 part of a mixture, water, powder of Indian gum – Arabic and to gum of creative religious using sesamum oil. Also he would mix Putchock, Orpiment, Sandal, Aquila, Camphor, Bezoar and water; Taking this mixture in 1 part measure and the clay described whileom 10 parts he would knead well along with oil of the seeds of Carthamus tinctorius.

796. பொற்பொடி, வெள்ளிப் பொடி, புற்றுமண், நண்டு வளை மண், ஓடையின் மண், ஆற்று மண், பிரசித்தமான மலையின் மண், கடலின் மண், கலப்பையின் மண், கொம்பின் மண், இவை ஏற்ற மரியாதை கூட்டி, நானாவிதமான கந்தங்களையுங் கூட்டி, விளாம் பிசினையும் வெட்டி, இறுகின தேன் போல மர்த்தித்து, ஐந்து ராத்திரி சென்றவாகே, தேங்காயில் பட்டைச் சாற்றைக் கொண்டு ஒரு விரல், இரண்டு விரல், ஒன்றரை விரலளவும் அந்த மண் மேலே நிற்க விட்டுச் சுவறினவாறே முற்பட்ட மண்ணிற்கு நாலிலொன்று கூட்டி இது முற்பட்ட பூச்சாகக் கற்பிப்பான்.

The stone – cutter would mix, in suitable quantities, gold powder, silver powder, ant – hill mud, orab – hole clay, brook – soil, river clay, mountain earth, sea mud, plough – clay, horn – mud along with variegated fragrant and Indian gum – arabic. He would knead to a consistency of honey before allowing to stand as such for 5 nights. And taking 1 part of this mass and 4 parts from the earth prepared whileom, he would combine a clay to render a first coat.

797. ரஜ்ஜுவின் மேலே அந்த மண்ணைப் பூசி, அதின் மேலும் ரஜ்ஜுவினாலே சுற்றுவான். இரண்டு ரஜ்ஜு பந்தத்திற்கு நடு, ஒரு விரலாதல், இரண்டு விரலாதல், மூன்று விரலாதலாவது. அதன் மேலும் மணல் பூசி, உலருமளவும் பரந்திருந்து மண் பூசுவான். ஆகையாலே மண் பூச்சு மெல்ல மெல்லச் செய்வான்.

The limner would smear over the ligatures once and aft which he would again tie the cords over the coating. The in – between thickness, between the two cord tying, must be of either 1 finger or 2 fingers or 3. Over this, he would give a sand wafting and allow to dry up. Thereafter he would furnish again a coat of the clay prepared whileom.

798. சூலத்திற்குப் புறம்பே கொள்ள வேண்டும் பருமை நான்கு கூறு செய்து, ஒரு கூறு அளவும் பூசுகிறது; அனுருபமென்று பெயராம்.

Having divided the thickness over the wood – skeleton into 4, he would smear the clay with 1 part thereof. This is called Anurūpam by name.

799. இரண்டு அம்சமளவும் பூசுகிறது மிச்ரமென்று பெயராம். மூன்றம் சமளவும் பூசுகிறது. ஜாங்கலமென்று பெயராம்.

Following the same mode, if he coats with 2 parts thereof, it received a name Misram while with 3 parts, Jāṅgalam.

800. அந்த அந்தத் தேசத்திலே சம்ஸ்காரஞ் செய்து, அந்தக் கூறைப் பூசுவது.

All these should be executed with earth of the concerned land following the above norms.

801. மிஞ்சின கூறையும் கல்க லேபனம் செய்வான். ஒரு கூறு கல்கலேபனம் செய்யுமிடத்து, அந்தக் கூறை நான்கு கூறு செய்து, ஒரு கூறு கல்கத்தினாலும் இரு கூறு பஞ்சு கூட்டின கல்கத்தினாலும், நின்றது கல்கலேபனஞ் செய்து அப்புறம் படலேபனமாவது.

He would smear with the remaining 1 part thereof making it a coating of Kalkam. For this he would divide the clay into 4; one part of clay should be mixed with Kalkam; another part, with cotton fibers and Kalkam; the rest with Kalkam. He would render a wafting three times with these in the order described here.

802. மிருத் சம்ஸ்கார மிப்படிச் சொல்லிக், கல்கச் சம்ஸ்காரம் சொல்லப்படா நின்றது.

Recounting thus, the preparations of clay, now has been delineated the modes of making Kalkam.

28. கல்க விதானம்

803. அனந்தரம் கல்கவிதானம் சொல்லப்படா நின்றது.

(கல்கம் - வலிமைப் பொருட்கள் சேர்ந்த கூட்டுப் பசை)

Thereafter, characteristics of Kalkā have been articulated.

(Kalkam – tenacious paste)

804. ஆற்றிலேயாதல், வாவியிலேயாதல், குளத்திலேயாதல், உவர்த்தண்ணீராதல், ஸஸ்ய சேட்சத்திரத்திலேயாதல், உறைத்த சுக்கு போல நிறமாய், நுண்ணிதாய், மணலோடுங் கூடி இருக்கிற சுக்கான்கல் பார்த்துக் கழுவி, உலர்த்தி நன்றாகப் பொடி செய்வான்.

The artificer would gather limestone, sand composed, giving a hue equal to that when a dried ginger is scratched against a rock, from a river, pond or a shrine and wash before drying up and powdering.

805. கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய் கசாயத்திலே அறைத்துத் திரட்டி உலர்த்துவது.

He would grind the mass along with the decoction of 3 substances namely Indian gall-nut, Embolic Myrabalan and Terminalia Bellerica. Having ground he would allow to dry up.

806. ஐந்து மடங்கு விளாம் பிசினும் ஐந்தரைக் கூறு ஜலமாதல் ஆறு கூறு ஜலமாதல் விட்டு ஊற வைத்துக் கொள்வான்; ஒருவன் கையாம்.

The limner would macerate 5 parts of Indian gum –arabic in water of 5 ½ parts or 6. A single individual's hand must execute this.

807. இந்த ஊறினது, முற்படத் திரட்டி வைத்த கல்கத்தோடு (சேர்த்து) வெண்ணை போல அரைப்பான்.

Adding this maceration with the Kalkam amassed whileom, he would triturate to the consistency of butter.

808. பின்பு, பருத்திப் பஞ்சோடு கூட்டிப் பிசறி அரைப்பான்.

After that, he would pulverize the mass with cotton.

809. அந்த அரைத்த கல்கம் வாழைத் தண்டு முறிந்தாற் போல இருந்தால், அந்தக் கல்கம் கொண்டு பூசுகிறது முற்பட்ட கல்கமாம்.

If this mashed paste gives a consistency like the 'breaking of the spandex of the plantain', its coating is termed as the first coating.

810. பிசினிற்கு மும்மடங்கு, மூன்றரை நான்கு மடங்கு ஜலம் கூட்டுகிறது நடுவில் பந்தம் என்று பெயராம்; இது மூன்று விதமாம்.

If he adds water of parts 3, 3 1/2 and 4 than one part of the Indian gum-arabic each time, then it is called Matya bandhā; this is three varieties.

811. கல்கத்திற்குச் சரி தண்ணீர் வார்த்து ஊறினது ஒரு விதமாம்.

In another type, the mass should be macerated with water equal to the amount of the paste.

812. அந்தக் கல்கத்தை அடவிலே இரண்டு நெல் கனம், மூன்று நெல் கனம் பூசி உலர வைப்பான். பிளவு துளைப்படுதல் செய்யின் அதை வர்ச்சிப்பான்.

The Kalkam (paste) should be coated to a thickness of 2 rice – corns or 3 and be allowed to dry up. He would remove the chinks, if any.

813. இரண்டு மாதமாதல், ஒரு மாதமாதல் உலர்த்துவான்.

He would permit it to dry during a time of 1 month or 2.

814. கூர்ச்சத்தை வைத்து, [அண்ட] ஜங் கொண்டரைத்துப், பின்பு ஸ்வச்ச ஜலத்தினாலே கல்கத்தைக் கூட்டிப், பிரமாணாந்தமளவும் நிறைப்பான்.

After that, he would triturate sacrificial grass with clay adding pure water to make a paste. He would smear this over the organs taking care that the paste reaches the tips of the organs as well.

815. பிரமாணத்தை அனேகமாகச் செய்வான்; சோதித்துச் சமமாக நயிப்பான்.

The limner would smear the paste watching the size of the organs. He would render the coating quite evenly.

816. அங்கமென்றும், உபாங்கமென்றும், பிரத்யங்கமென்றும் இவற்றை இலட்சணங்களோடே கற்பிப்பான்.

The limer would furnish elegant contour to the main organs, ornaments and vehicles in a quite sterling way.

817. கை, கால், வயிறு முதலானவை அங்கமென்று பெயராம்.

Chiro, shank, stomach and the like are known as main organs.

818. பூஷணங்கள் உபாங்கமென்று பெயராம்; ஆயுதம், வாகனம் இவை பிரத்தியங்கமென்று பெயராம்.

Ornaments are termed as Upāṅgāsm while weapons and vehicle are known as Pratyaṅgam.

819. விளாம் பிசினும் இரண்டு, மும்மடங்கு தண்ணீரில் ஊறினதாலே புடவையைத் தோய்த்துப் போர்த்துவான்; பின்பு கல்கத்தைப் பூசுவது.

Thereat, choking a new cloth in the solution of Indian gum – arabic, in which water content must be of 2 or 3 measures more than the gum, he would wrap up the organs of the idol. Over this he would anoint the Kalkam (paste).

820. அந்தக் கல்கத்தை, யவையில் எட்டிலொன்று பூசின பின்பு, பத்து நாளைக்கு மேல், சுர்சத்தினாலே பூசுவது.

The thickness of the paste coating must be of 1/8 of an yavā. Ten days after, he would anoint over with the gum water mentioned whileom.

821. அதின் மேலே கிடப்பதாயிருக்கிற பணிகளைப் பூஷிப்பான்.

Over that, he would make the embellishments.

822. பின்பு, இறுகப் பூசுவது; அதன் மேலே வெள்ளையை வைப்பான்.

Thereat, he would render a firm coat of the paste over which would be given a peart white wash.

823. சகலச் சித்திர விக்கிரகத்திற்குக் கல்க விதானம் சொல்லப்பட்டது.

Thus has been enumerated the paste coating for all sorts of idols.

29. வர்ண சம்ஸ்கார இலட்சணம்

824. அனந்தரம் வர்ணசம்ஸ்காரம் சொல்லப்படா நின்றது.

Thereafter, combination of colors has been articulated.

825. சிவத்திலே நின்றும் ஒரு பரமாணு சத்பாவனா தோன்றி, அதிலே நின்றும் சாந்தி தோன்றி, அதிலே நின்றும் சக்தி தோன்றி, அதிலே நின்றும் நாதந்தோன்றி, அதிலே நின்றும் பிந்து தோன்றி, அதிலே நின்றும் ஆகாசந் தோன்றி, அதிலே நின்றும் வாயு தோன்றி, அதிலே நின்றும் அக்கினி தோன்றி, அதிலே நின்றும் ஜலம் தோன்றி, அதிலே நின்றும் புவனம் தோன்றி, புவனத்தில் நின்றும் வர்ணங்கள் தோன்றிற்று. அந்த வர்ணங்கள் வெள்ளை என்றும், சிவப்பென்றும், பொன்னிறமென்றும், கறுப்பென்றும் நான்கு விதமாம்.

Sivam caused to issue out an atom from which calmness came out. This Tranquility rendered forth Sānti, from which Sakti; from which Sound, from which a Dot, from which Sky, from which Air, from which Fire, from which Water, from which Earth, from which Colors developed. Those tints are four types – white, Red, Golden and Black.

826. ஜலத்திலே வெள்ளையும், அக்கினியில் சிவப்பும், பிருதுவியில் பொன்மையும், காற்றிலே கறுப்பும் உண்டாக்கப்பட்டது.

The White tinge issued forth from water; the Red, from fire, the Golden from Earth and the Black from Wind.

827. [விஷ்ணு, மகேசுவரன், கௌரீ, உருத்திரன்] இவர்கள், வர்ணங்களுக்குக் கிரமத்திலே, அதி தேவர்கள்.

Vishnu, Maheswarā, Gourī and Rudra are the deities for these tinges, in order.

828. அந்த வர்ணங்களுக்கு பிராமணன் முதலான நான்கு வமிசமுமாம்.

Four sects have been assigned to those four tints, starting from Brahmaṇā, in order.

829. அந்த வர்ணங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே நான்கு விதமுண்டு.

Four kinds are there for each of those tinges.

830. சுவேத மென்றும், சுக்கிலமென்றும், தவள மென்றும், அவதாத மென்றும் நான்கு விதமாம்.

Svētam, Sukkilam, Tavalam and Avatātam are the four.

831. முக்தாபமென்றும், சந்திர்வர்ணமென்றும், வெள்ளை இரண்டு விதமாம்.

White hue is also of varieties – Muktāpā and Moon colored.

832.சங்கவர்ணமென்றும், சுக்கில வர்ணமென்றும் ஒரு விதமாம்.

Conch – hue or Sukkilatint is also ascribed to white.

833. வெள்ளி, பசுவின் பால் இவற்றுக்கு ஏற்ற நிறம் தவளமாம் இரண்டு விதமாம்.

The Tavalā hue is of two kinds – one like silver and the other one like milk.

834. நட்சத்திரத்தோடொத்த நிறம் அவதாதம் ஒருவிதமாம்.

Avatātām, a hue, will resemble the tint of star.

835. அருணமென்றும், ரக்தமென்றும், சோணமென்றும், பாடலமென்றும், சிவப்பு நான்கு விதமாம்.

Red hue is of 4 kinds – Aruṇam, Raktam, Cōṇam and Pāṭalam.

836. முயலின் ரக்தம் அருணமென்றும், செம்பரத்தம் பூவிற்கொத்தது ரக்தமென்றும், முருங்கம் பூவிற் கொத்து சோணமென்றும், செம்பஞ்சிற் கொத்து பாடலமென்றும் அறிவான்.

He would know that the tint resembling that of the blood of rabbit is Aruṇam, similar to the shoe-flower, Raktam, just like the flower of the Muringa tree, Cōnam and similar to Red cotton, Pāṭalam.

837. பொன் போலவும், பிசகமென்றும், பீதமென்றும், ஹரிதரமென்றும், மஞ்சள் நான்கு விதமாம்.

Yellow is of 4 varieties – Golden, Pisakam, Pītam and Haritam.

838. சுவர்ண வர்ணம் பொன்னிறமென்றும், மஞ்சள் நிறம் பிசங்கமென்றும், அரிதாரம் பீதமென்றும், பூனைக் கண் நிறம் அரிதமென்றும் பெயராம்.

That tint which resembles that of Gold is called Golden, which is like turmeric, Picaṅgam, which is similar to orpiment, Pītam and which is just like the eye of cat, Haritam.

839. நீல மென்றும், சியாம மென்றும், காளமென்றும், கிருஷ்ணமென்றும், கறுப்பு நான்கு விதமாம்.

Black color is of 4 kinds – Nīlam, Syāmam, Kālam and Krishnam.

840. மேகம் போல நிறம் [நீலமென்றும்], காட்டுக் காக்கை போல நிறம் சியாமமென்றும், மயில் நிறம் காளமென்றும், வண்டின் சிறகு கிருஷ்ண மென்றும் அறிவான்.

He would know that the hue matching the cloud is Nīlam, that resembling crow, Syāmam, that comparable to peacock, Kālam and that just like the wing of a chafer, Krishnam.

841. இப்படி, ஸ்வதந்திரமான வர்ணம் பதினாறு விதமாம்.

Likewise, independent colours are of 16 types.

842. பூமியிலே, சுவேதம் உண்டாச்சுது; சிவப்பு அன்னத்தின் காலிலே உண்டாச்சுது.

In the earth were white tint and red hue, which can be seen from the colour of the foot of swan, formed.

843. அன்றியே, சாதிலிங்கம், ரக்த வர்ணம் ஆக ரக்த வர்ணம் இரண்டு விதமாம; கோதாவரியிலே உண்டாச்சுது, மஞ்சள் கல்; காசம்பூ நிறமானது, ரஜாவர்த்தம்; சியாமபாஷாணத்தின் சாரம். சியாமமும், தீபத்திலே உண்டாகும் பொடி கறுப்புமாக, இந்த வர்ணங்கள் பூமியிலே உண்டாமென்று அறிவான்.

Red is of two kinds – colour of vermilion and that of blood. Yellow stone formed at Godāvari river. Rajāvartta stone is like the flower of Memecylon tinctorium. The green coloured arsenic will receive the name Syāmam. The lamp – soot will render a black tint. These colours have formed in Earth.

844. இவை ஆகாசத்தின் வர்ணங்கள்; அவற்றிலே உண்டாம் வர்ணங்கள் அநேகமென்றறிவான்.

He would know that these are the basic tints from which innumerable hues have developed.

845. சுவேதமும் லர்சாசாரமும் தீவிலுண்டான தூளி என்றறிவான். தாமரை, நீலமும், மற்றையதும் தாதுவினுண்டாகிறது நலமாம். இப்படி, ஸ்வப்பிரதானமான வர்ணங்கள் பிம்பங்களுக்கு யோக்கியமாம்.

White colour clay and red resinous dye are formed in islands. Red hue, as a lotus, and blue, like a dark lily are formed in ores. In this way, natural colours are convenient and apt for idols.

30. சுதா கர்மார்ஹக நிருபணம்

846. சுதாகர்மத்திற்கு யோக்கியமான வர்ணம் சொல்லப்படா நின்றது.

Description of colours applicable on clay idols has been enumerated.

847. பொற்கென்ற கல்லைப் பொடி செய்து, இளநீரை வார்த்து வேக வைத்தால் சிவந்த நிறமாம்.

Yellow stone should be triturated, and boiled adding tender coconut – water to obtain red substance.

848. அந்தச் சிவப்பு, சுதா கர்மத்திற்கும் ஆம்;. சங்கு சுட்ட வர்ணம் வெளுப்பாம்.

That red substance is suitable for clay works. When couch is heated, white tint is obtained.

849. சியாமமும் ராஜா வர்த்த மென்கிற பாஷாணமும்தான் [சுதா] நிறங்களுக்கு நன்றென்று சொல்லப்பட்டது; மற்றுள்ள வர்ணங்கள் [சுதாகர்மாவுக்கு ஆகாது].

Syāmam and Rājāvarttam are the two stones are quite suitable for colouring the clay idols; the rest, unsuitable.

850. அனந்தரம் சம்ஸ்கார விதானம் சொல்லப்படா நின்றது.

Thereat, the combination of colours has been uttered.

851. வெண்மையும் சிவப்பும் சரியாகக் கூட்டினால் கௌரீ வர்ணமுண்டாம்.

Equal parts of white and red furnishes a hue called <u>Gaura</u> colour.

852. வெண்மையும் சிவப்பும் சமமாய்க் கலந்தால், கர்புர மென்கிற நிறமுண்டாம்.

If white and red are added in ratio 1:1, a hue known as Karbura is obtained.

853. வெண்மையும் கறுப்பும் சரியொக்கக் கலந்தால் தூம்ர வர்ணமாம்

<u>Dhūmra</u> tint will be received when equal shares of white and black are mingled.

854. பொன்மையும், சிவப்பும், பொன்மையும் சமமாகக் கூட்டினால், கம்பு நிறமாம். (பொன்மை - மஞ்சள்)

The colours white, red and yellow do combine in equal ratio to form a tint known as Kambu.

855. சிவப்பும் பொன்மையும் சரியொக்கக் கூட்டினால் மகிழம் விதை போலேயாம்.

Equal measures of red and yellow will furnish a hue similar to the hue of the seeds of Mimusops elengi.

856. பொன்மையும், சிவப்பும் இரட்டித்தால், உதிக்கிற ஆதித்தனுடைய கிரணங்கள் போல வர்ணமுண்டாம்.

The hue of the rays of the rising sun will be attained when yellow and red are mixed in a ratio of 1:2.

857. கறுப்பிற்குச் சிவப்பு இரட்டி கலந்தால் காஷாயமென்கிற நிறமுண்டாம்.

When in a ratio of 1:2, black and red are combined, a tint Kāshāyam will be received.

858. வெண்மைக்கு இரட்டி பொன்மை கலந்தால், பிங்கலமென்கிற நிறமாம்.

The colour Piṅgalā will be obtained, when one measure of white is added to 2 measures of yellow.

859. வெண்மைக்கு மும்மடங்கு பொன்மை கூட்டினால், கலாரமென்கிற நிறமாம்.

Three measures of yellow should be added to 1 measure of white to obtain the hue Kalāram by name.

860. கறுப்பிற்கு இரட்டி பொன்மை கூட்டினால், தண்ணீர் நிறமாம்.

If yellow tint is mixed with black, in the ratio 2:1, water hue can be received.

861. கறுப்பும் பொன்மையும் சரியாகக் கூட்டினால் அருகு நுனி நிறமாம்.

When black and yellow are added in equal proportion, the resultant hue will be like that of the tip of grass blade.

862. அரிதாரமும் சியாமமும் சரியொக்கக் கூட்டினால், கிளிச் சிறகு நிறமாம்.

Yellow and green, mingling together in equal proportions, will yield a hue similar to that on the wing of parrot.

863. அதுதானே அரிதாரம் அதிகமாகில் நெல் முளை போன்ற நிறமாம்.

In that combination, if yellow is increased the resultant tint will be that of rice – grain.

864. பச்சையில் பாதி அரிதாரமும், பாதி குங்குமமும் கூட்டினால் பயிரின் நிறம் போலப் பச்சை நிறமாம்; கறுப்பும் செம்பஞ்சும் சமமாகக் கூட்டினால் நாவற் பழ நிறமாம்.

Green, yellow and Kumkum (red) can combine, in the ratio 1:1/2:1/2 to yield the hue of corn while black and cempañcu (red) can mix together to render a tint similar to that the jumbo – fruit.

865. சாதிலிங்கமும் செம்பஞ்சுச் சாறும் கூட்டினால் லோகிதம் செய்கிற வர்ணமாம்.

If vermilion and the juice of red cotton are added, the resultant colour will be that of copper.

866. கறுப்பும் நீலமும் சரியாகக் கூட்டினால் மயிர் நிறமாம்.

When, in equal quantities, black and blue are combined, the resultant colour will be that of hair.

867. சஸ்ய சியாம மென்கிற வர்ணமும் சிவப்பும் கூட்டினால் மஞ்சரடி நிறமாம்.

(மஞ்சரடி – மஞ்சிட்டி)

Corn – green and red can combine to yield the tint comparable to that of Bixa orellana.

(Mañjaraṭi – Mañjiṭṭi (Bixa orellana)

868. கறுப்பும் சிவப்பும் சரியொக்கக் கூட்டினால் தேன் நிறமாம்.

If black and red are mixed in equal ratio, the final colour will be that of honey.

869. அது தானே சிவப்பு மிஞ்சுகில் மானுஷ வர்ணமாம்.

In that coagulation, if red is in excess, the resultant tint will be human – hue.

870. மானுஷ வர்ணத்திலும், சிவப்பு மிஞ்சினால் ரூட்சமான வர்ணமாம்.

After the result of human – tint, if red is added in excess, the end colour will be an execrable one.

871. அதில் நின்றும் பசுமைக் கொத்த நிறம் உண்டாகிறதில்லை.

From that mixture, no green hue can be obtained.

872. அவற்றுகளில் யாதொரு திரவியம் அல்பமானது பகுவானதோடு கூடுகில் மிகுந்த சாரமாகச் சொல்லப்பட்டது. பகுவான திரவியம் அல்பமான திரவியத்தோடு கூடுகில் அல்பசாரமென்று பெயராம். சாரத்திலே நின்றும் அதிகமும் மிஞ்சினதும் சொல்லப்பட்டா நின்றது.

In the combinations, if little amount is added to greater measure then it is called Bahucāram; if greater quantity is mixed with less measure, then it is known as Alpācaram. Only to obtain the desired tint, this type has been advocated.

873. வர்ணங்களுடைய அனுகூலத்திற்கு ஈடாகக் காமியப்படி கலாசப்பட்டது.

(காமியப்படி - விருப்பப்படி)

To obtain the required colour combination, as per our will, such mixing has been articulated.

31. வர்ண லேபனம்

874. அனந்தரம் வர்ணலேபனம் சொல்லப்பட்டா நின்றது.

Thereat, anointing of colour has been recounted.

875. சிலையாலும், மரத்தாலும், செங்கலாலும் மூன்று விதமாகிறதற்கு வர்ணலேபனம் பண்ணுவது.

Colour coating can be given to the idols made of stone, of wood and of brick.

876. சைலஜமான பேரங்கள் வர்ணலேபனம் செய்யுமிடத்து, அங்கோபாங்கமிவையும் சிலையினாலே செய்து, மேலே கீழே போர்த்து, அதின் மேலே சர்க்கரையைப் பூசி, அதன் மேலே சிக்கனம் பூசி, அதன் மேலே வெள்ளை முதலானவற்றைப் பிம்பத்திற்கு உச்சிதமானவற்றைப் பூசுவது; பின்பு, பிரதிஷ்டையைச் செய்வான்

(அங்கோபாங்கம் = அங்க + உபாங்கம்; சர்க்கரை = சுக்கான்)

When colour washing the idols of stone, the limner would make the ornaments and weapons also in stone. He would cover all these with a cloth over which he would smear limestone and chikkanam (greasy oil) in order, before smearing the needed hue. After that he would fix the image on the proper seat.

(aṅgobāṅgam = aṅgam + ubāṅgam; Carkkarai – limestone)

877. அன்றியே, சிலாபேரத்திற்குச் சிலை போர்த்தாநின்று ஏழியில், சர்க்கரையை யவை யளவு பூசி, அதன் மேலே சிக்கணம் பூசி, அதன் மேலே வெள்ளை வழித்துப், பின்பு பிம்பத்திற்கு உசிதமான வர்ணத்தை வைப்பான்.

Or, without covering the idol with cloth, he would apply limestone and chikkanam, in order, over the image after which would be given a white wash, before coating with a suitable colour.

878. வர்ணப் பின்னமான சிலாகற்ப பிம்பமிப்படிச் சொல்லபபட்டது.

Thus has been advocated for the idols having multi hues.

879. முன்பு சூலஸ்தாபன கர்மத்திற்குச் சொன்னாற் போலச் செய்வான்.

If the image is of wood, he would do all prescribed for the establishment of wood – skeleton of image.

880. சித்திரமாதல், அர்த்தச் சித்திரமாதல் நன்றாக வெந்த செங்கல்லோடும் சாந்தோடுங் கூட்டி, அங்கம் பூரணமாகச் செய்து, பின்பு சீலைக்கிழி போர்த்திப், பின்பு சர்க்கரை முதலானவற்றை ஜைலஜமான பிம்பத்திலே செய்தாற் போலச் செய்வான். இப்படி (இஷ்டகாகர்ப்பம்) சொல்லப்பட்டது; தாருமிச்ரமானதும் இப்படிச் செய்வான்.

The limner would make idol, in full stature or half, with brick and mortar; Thereat, covering the image with cloth, he would render coatings, in order, with limestone etc., as articulated whileom. Thus recounted for brick idol and this holds good for wood images also.

881. வர்ணகர்ப்பம் இப்படி மூன்று விதமாகச் சொல்லப்பட்டது.

Painting on idols, thus, has been uttered in 3 kinds.

882. ஸ்வச்ச ஜலத்தோடே கூட, முற்பாடு வெண்மை நிறத்தைப் பூசுவான்

At first, he would, white wash the idol for which he would add only pure water.

883. அடவே மூன்று பிரகாரம் வெள்ளை பூசுவது.

Likewise, three coatings will be given on.

884. அதன் மேலே, பாண்டு வர்ணத்தைப் பூசுவான்.

(பாண்டு - வெள்ளை)

Overwhich, he would paint the tint Pān?duram.

(Pāndu – White)

885. வெள்ளையான பிம்பத்தோடே கலக்கிறது பாண்டுர மென்று பெயராம்.

White hue on idols will attain the name Pānduram.

886. பிம்பங்களுக்குப் பாண்டு வண்ண மொழிய ஸிதவர்ணமுண்டாகாது.

(சிதவர்ணம் - வெண்மை)

On idols, white tint will not appear as pure white.

(Sitavarnam – white hue)

887. ரக்தவர்ண நிபமானது, பாண்டு வர்ணமென்று கற்பிக்கப்பட்டது .

Only the honey – hue has been marked as white tint.

888. ஸ்வச்சப் பந்தமென்றும், மத்யப் பந்தமென்றும், மேதுரப் பந்தமென்றும் மூன்று விதமாம்.

Adhesive is of 3 kinds – Svaccap bandham, Matyap bandaham and Mētura bandham.

889. விளாம்பிசினாலே இந்த மூன்று பந்தத்தையும் (செய்ய வேண்டும்).

This 'fix' should be prepared from Indian gum –arabic.

890. ஸ்வச்சப் பந்தம் எண்ணை போல இருக்கும்; மத்யப் பந்தம் தேன் போல இருக்கும்; மேதுரப் பந்தம் இளம் பசுந்தயிர் போல இருக்கும்.

The suaccā adhesive will look like oil; matyap bandhā, honey and Mēturā, curd.

891. மேதுரத்தினாலே அஷ்ட கல்கத்தினுடைய சந்தானத்தைச் செய்வான்.

Using thick liquid the statuary would make the combination of Asṭakalkā. (a kind of paste)

892. மத்திய வாரியினாலே கல்கமர்த்தனத்தைச் செய்வான்.

With medium liquid, the limner would pound the paste.

893. கல்கத்தை ஸ்வச்ச ஜலத்தினாலே அரைப்பான்.

The artificer would grind the tenacious paste adding light – liquid.

894. சுதா கர்மத்திலே, சோச்சர்ம, மஹிசச்சர்மங்களை வெந்த ஜலத்தினாலே வகையாகச் செய்வான்.

(கோச்சர்மம் – பசுத்தோல்; மஹிசச்சர்மம் - எருமைத் தோல்)

In regard to plaster works, the limner would use the water in which was boiled the skin of cow or buffalo.

(Gōccarmam – skin of cow; Mahicaccarmam – hide of buffalo)

895. அல்லாதது செய்வானல்லன்.

He will not use plain water.

896. நிர்யாச ஜலத்தினாலுள்ள பந்தத்தினாலே உக்தமர்த்தனத்தைச் செய்வான்.

If the paste is want of water, he would add water in which was imbued Indian gum – arabic.

897. கல்கத்தைப் பதினாறு கூறு செய்து, ஆறு கூறாதல், ஐந்து கூறாதல், நான்கு கூறாதல் விளாம் பிசினாலுள்ள ஸ்வச்ச ஜலத்திலே ஒடுக்க இது அரைத்துப் பூசுவான்; அது சிக்கணமென்று பெயராம்.

The tenacious paste should be parceled into 16 parts. Taking 6 parts or 5 or 4 it should be ground adding Indian gum – arabic macerated water. This coating is termed as chikkanam.

898. சிக்கண மென்றும் கல்கசாரமென்றும் சிக்கணம் இரண்டு விதமாம்.

Chikkanam is of two types, Chikkanam and Kalkasārā.

899. நீர் விழுக்காடு செய்கிறது சுதையினாலே; நீர் விழுக்காடு அன்றியே இருக்கிற இடத்தில் சர்க்கராத்ரவத்திலும் செய்வது. ஆகையாலே சிக்கணம் இரண்டு விதமாம்.

Two types of adhesives (chikkanam) are there; one is using Indian gum – Arabic and another is adding the powder of limestone.

900. சிக்கர்ஹமான பந்தத்தைப் பத்து கூறு செய்து, இதில் ஒரு கூறு குறைந்த பந்தம் வெள்ளைப் பூச்சிற்கு யோக்கியமாம்.

For white washing purposes, in the measure of adhesive, 1 part should be minimised.

901. ஸித பந்தனக் கர்மத்தில், பந்தத் துல்லியமான சிக்கணத்திலேயாதல் சித பந்த சமமாதல்; அதில் கால், ஒன்று, குறைத்துக் கொள்ளுதல் செய்தால் துவிதீயப் பந்தமாம். அந்தந்தப் பந்தனங்கள் தோறும் அப்படியே கொள்வான்.

He would add the adhesive, Chikkanam has told for white washing; or he can lessen the adhesive by ¼ or 1 measure.

902. ஆறு விதமான பந்தங்களுக்கும் அடவே இப்படிக் கொள்ளுவான்.

He would adopt this mode for 6 varieties of coating, in order.

903. முற்பட்டதிலே நின்று சொல்லப்பட்ட பந்தங்களினாலே ஆறு வர்க்கங்களையும் பூசுவது.

Six kinds of painting, as advocated whileon pertaining to primary coating, must be executed in order.

904. பத்திரமென்றும், ரஹிதமென்றும், பிந்து வென்றும், தூபமென்றும், உத்வத்திகமென்றும், பிரவர்த்தனமென்று வர்ண லேபனம் ஆறு விதமாம்.

Colour coating is of 6 types – Pattiram, Rahitam, Bindu, Dhūpam Utvattikam and Pravarttanam.

905. நீளப் பூசுகிறது பத்திரமென்று பெயராம். குறுக்காகப் பூசுகிறது ரஹிதமென்று பெயராம். சிதறினாற் போலப் பூசுகிறது பிந்துவென்று பெயராம். இதில் சூட்சுமமாயிருக்கிற பிந்துவானது தூபமென்று பெயராம். அதில் நுண்ணிதாயிருக்கிற பிந்துவானது உத்வர்த்தனமென்று பெயராம். அதிலும் பிரிந்து [நுண்ணிதாக இருக்கிற] பிந்துவானது பிரவர்த்தனமென்று பெயராம். சுவர்ணத்தோடே கூடியிருக்கிற லேபனம் ஆறு வர்ணக் கிரமத்தையும் ஒன்றுக்கொன்று இப்படிப் பூசுவது.

Coating lengthwise is termed as Pattiram; similarly, crosswise, Rahitam; sprinkling, Bindu; minute sprinkling, Dhūpam; still minute sprinkling, Utvarttanam; still minuter sprinkling, pravarttanam. Adding the powder of gold, he would render all these paintings.

32. பக்த இலட்சணம்

906. அனந்தரம், பக்தலட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, the characteristics of devotee have been enumerated.

907. எல்லாப் பக்தர்களுக்கும் பதம் நான்கு விதமாம்.

There are four stags for all devotees.

908. சாலோக்ய மென்றும், சாமீப்யமென்றும், சாருப்யமென்றும், சாயுஜ்யமென்றும் நான்கு விதமாம்

Sālōkyam, Sāmīpyam, Sārūpyam and Sāyujyam are the four levels.

909. புருசனாகிலும், ஸ்திரீயாகிலும், யாதொரு பதத்தை வியாபித்தார்கள், அந்தப் பதத்திற்கு அனுகூலமான பிரதிமையைச் செய்வது.

According to their stage, the devotees, would cause to make the relevant idols.

910. தன்தன் சாதிக்கடுத்த அடையாளத்தோடே கூடியிருப்பர், சாலோக்கியப் பதத்தில் பிராபித்தவர்கள்; சாமீப்யப் பதத்தில் பிராபித்தவர்கள், அப்படி இருக்குதலில் [சிலவற்றைத்] தம்முடைய அடையாளமாக உடையராதலாயிருப்பது.

Those who are in the Sālōkyā line, would wear their caste emblem while those at the stage of Sāmipyā would don a few aspects lesser than the former.

911. பாலை யென்றும், யௌவன மென்றும், விருத்த மென்றும், அவர்கள் மூன்று விதப்பட்டு இருப்பார்கள்.

They fall under three categories – Infants, youngsters and old.

912. மூன்று வயசிற்கு மேல் பதினாறு வயசுமளவு பாலரென்றும், அறுபது வயசளவு யௌவனமென்றும், அதற்கு மேல் விருத்தரென்றும் பெயராம்.

Infants fall under the age group of 3 to 16, while youths up to 60 and old beyond that.

913. பாலராயுள்ளவரைப் பஞ்சதாலத்தினாலே செய்வது; அதற்கு நதமான விரல் யவை எட்டு.

The idols of Infants should be prepared with the measurement known as Pañcatālā. Height diminution will be, in this case, yavās 8.

914. ஸ்தாதை மென்றும், ஆஸன மென்றும், யான மென்றும், நிருத்த மென்றும் பக்தர்களுக்கு நான்கு விதமாம்.

The four postures of adherents are – Standing, Sitting, about to Walk and Dancing.

915. ஆபங்கமாதல், சமபங்கமாதல் ஸ்தானகத்தைச் செய்வான்.

The standing posture of idol may be either straight or slanting a little.

916. தத்தம் ஜாதிக்கு அடுத்த அடையாளமும், பஞ்ச முத்திரையும், இருதயத்திலே அஞ்சலியும், இடப்புறத்திலே மழுவுமாக ஸ்தானகத்தைச் செய்வது; ஆசனம் சொல்லப்படா நின்றது.

In the standing posture, the idol should have a war – axe at left, folded hands against chest, five signets and ceste mark. After that sitting has been recounted.

917. பத்மப் பீடத்திலேயாதல், பத்திரப் பீடத்திலேயாதல், இடக்கால் மடித்து, வலக்கால் நாணவிட்டுக், கைகள் முன்போலே யாவது. ஆசன மிப்படிச் சொல்ல, யானம் சொல்லப்படா நின்றது.

Sitting on a lotus – seat or leaf – seat, the idol should keep its left leg folded and right shank hanging while hands as marked whileom. Sitting pose thus explained, now yānam has been taken up for elucidation.

918. வலக்கையிலே மழுவும், இடக்கையிலே பாசமும் அன்றியே, வலத்திலே அம்பும், (இடத்திலே வில்லும்) நடக்கிறதிலே உத்யோகராகவும் யானத்தைக் கற்பிப்பான். இந்த வில்லும் அம்பும் பிடிக்கிற வசமல்லவென்றாயின், கிரந்தத்திலேதானே வலத்திலே அம்பும், இடத்திலே வில்லும் அர்த்தம் கொள்ளலாம்.

In the Yānam pose, the image will arrest a war – axe in the right chiro while a noose in the lift. Or it can hold a low in the left and an arrow in the right chiro. And the image should be chiseled in such a manner that it should show an appearance that it is about to walk.

919. பால, யௌவன, விருத்தரென்று மூன்று வகைப்பட்ட வயசுதோறும் அடவே பக்தர்களுக்கு யோக்கியமான நிருத்தம் மூன்று விதமாம்; சாத்துவிகமென்றும், ராஜசமென்றும், தாமசமென்றும் மூன்று வகையாக இருக்கும்.

The dance pose will exhibit 3 characters – Goodness, Passion and Arrogance suitable to Infant, Youth and Old in order.

920. அவற்றில் முற்பாடு சாத்துவிக நிருத்தம் - சொல்லப்படா நின்றது.

Among them, firstly, the dance full of purity has been delineated.

921. பக்தர்களுடைய உயரமானத்திலே சொன்னாற் போலே செய்வது.

In regard to the height of the idols of adherents, it must be fixed as advocated to them specifically.

922. ஆறு, ஏழு அந்தம் நதமானமாவது.

The diminution in height must be up to 6 or 7 aṅgulās.

923. இடக்கால் ஸ்வஸ்திதமாயிருப்பது; வலக்கால் எடுக்கப்பட்டுப் பீடத்திற்கு மேலே நான்கு விரல் தூக்கி நிற்பது; அன்றியே பீடத்திற்கும் எடுத்த காலுக்கும் ஐந்து, ஆறு, ஏழு ஆதலாவது.

The left shank should be straight while the right, uplifted, should be above the seat at a height of 4 fingers or 5 or 6 or 7.

924. பிரம்மச் சூத்திரத்திற்கும் எடுத்த காலில் அங்குஷ்டத்திற்கும் நடு நீக்கம் விரல் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஆவது.

Betwixt the great toe of the lifted foot and the thread called Brahmaccūtrā, the gap must be of fingers 4, 5, 6, 7 or 8.

925. வலக்கை சூசி ஹஸ்தமும் இருக்கப்பட்டது; ஹிக்காந்தமாக இருப்பது.

The right chiro must hold a needle and it must be at the level of chest.

926. அந்தச் சூசி ஹஸ்த மணி பந்தத்தில் நின்று சூத்திரமளவாக நீக்கம் விரல் பதிமூன்று.

Betwixt the wrist of the self- same chiro, and the thread noted above, the distance must be fingers 13.

927. அந்தக் கையில், கோர்ப்பரத்திற்கும் பிரம்மச் சூத்திரத்திற்கும் நடு நீக்கம் விரல் பதிமூன்று.

In the self – same chiro, the gap betwixt the Brahmaccūtrā and the elbow should be fingers 13.

928. இடக்கை தண்ட ஹஸ்தமாய் ஹிக்காச் சூத்திர மளவும் எடுக்கப்பட்டிருப்பது.

The left chiro, equipped with a mace, should be at the level of the Hikkāccūtrā ie., upper – chest.

929. மணி பந்தத்தின் மேல் ஹிக்காச் சூத்திர மளவாய், அதில் நின்றும் அந்தக் கைத்தலம் நாணுவது.

That chiro, above the wrist, at the level of chest, should sag down. (nānuvatu – slacking down)

930. லலாட மத்தியத்திலும், நாசாக்கிரத்திலும், இக்கா மத்தியிலும், நின்ற காலில் நளிகா மத்தியத்திலும் பிரம்மச் சூத்திரம் லம்பித்து, அந்தச் சூத்திரத்திற்கும், இடப்புறத்து நாபி மத்தியத்திற்கும் நீவரம் விரல் ஒன்றரை.

The Brahmaccūtrā must peragrate through the centre of forehead, tip of nose, centre of chest and the heel of the straight shank keeping a distance of finger 1 ½ from the centre of the navel.

931. சூத்திரத்தில் நின்றும், நின்ற காலில் முழங்காலிற்கும் விரல் ஏழு, எட்டு ஆவது.

Betwixt the self – same thread and the knee of the straight shank, the gap should be of fingers 7 or 8.

932. லலாடத்திற்கும் பிரம்மச் சூத்திரத்திற்கும் இடை நீக்கம் விரல் இரண்டு.

The intermediate gap between the forehead and the Brahmaccūtrā should be of fingers 2.

933. நாசாக்கிரத்திலும் உதர மத்தியத்திலும் பிரம்மச் சூத்திரம் ஸ்பர்சித்திருப்பது.

The Brahmaccūtrā should touch the tip of nose and the centre of stomach.

934. அன்றியே வலக்கால் பீடத்திலே நின்றதாய்க் குஞ்சித்திருப்பது.

Or the right shank, stamping on the seat, may be in a slanting pose.

935. இடக்கால் எடுக்கப்பட்டு நின்றவற்றிற்கு அனுகூலமாயிருப்பது.

The left shank, just lifted, should balance the rest.

936. எல்லா ஆபரணத்தோடுங் கூடிப் பாலர்களாகில் நிர்வாணமாதல், புடவை உடுத்தாதல், கௌபீனமாதல் கற்பிப்பான்.

The limner should tool the Infant idols as pinked with all ornaments, clad in saree or fore lap or naked.

937. யௌவனமும் விருத்தமும் நானாவிதமான வஸ்திரங்களினாலே அலங்கரிக்கப்பட்டு இருப்பது.

The images of youth and old must be bedecked with variegated garments.

938. சாத்துவிகம் இப்படிச் சொல்லி, இராஜசம் சொல்லப்படா நின்றது.

Purity thus recounted, now has been articulated what is called Passion.

939. சூசியொழிந்து அந்தக் கை வக்ரத் தண்டமாதல், அஞ்சலியாதல் செய்வது.

In the Passion - filled idol, instead of needle holding chiro, he would make a mace arresting or worshipping – chiro.

940. பீடத்திற்கும் எடுத்த காலிற்கும் நீக்கம் விரல் [பத்து], ஒன்பது, எட்டு ஆவது.

Betwixt the seat and the lifted shank the distance must be fingers 10, 9 or 8.

941. நின்றது முன்போலச் செய்வது இராஜசமாம்.

Rest, as advocated whileon for the case of Passion – filled idols.

942. தண்ட ஹஸ்தத்தை ஒழிந்து இடக்கை கடித்தலத்தை ஸ்பர்சிக்கச் செய்வது.

In cases of Arrogant – idols, instead of baton wielding chiro, the mason would make the left chiro as touching the hip.

943. வலக்கை தண்ட ஹஸ்தமாக எடுத்து, நின்று கொண்டு [உயரத் தூக்கிய முகத்தை] யுடைத்தாயிருப்பது.

While the right chiro arresting a baton, the countenance should be one of erected up.

944. ஒரு விரலாதல், இரண்டு விரலாதல் பீடத்தினின்று காலை எடுத்து வைப்பது.

Betwixt the seat and the shank the gap must be of finger 1 or 2.

945. பஸ்மோத்தூளனம் செய்யப்பட்ட அங்கத்தையும், உருத்திராட்ச மாலையையும் [கொண்ட] அலங்காரத்தை யுடைத்தாயிருப்பது. தாமசம் இப்படிச் சொல்லப்பட்டது. பக்தலட்சணம் இப்படிச் சொல்லப்பட்டது.

Wearing ash on person fully and rosary is the characteristic feature of arrogant – filled idol. Thus delineated Tāmāsā idols and enumerated thus the characteristics of adherents.

33. சண்டேசுவர இலட்சணம்

946. அனந்தரம் சண்டேச்வரலட்சணம் சொல்லப்படா நின்றது.

Thereafter, the characteristics of Chandēswarā have been contemplated.

947. சிவனுடைய கோபம் சண்டேச்வரன் என்று பெயராம்.

The wrath of Sivā is known as Chandēswarā.

948. கணேசாவரணத்திலே ஈசானத் திக்கிலே பூசிக்கப்பட்டது.

In the Ganēshā – cycle of places, Chandēswarā must be worshipped at north – east.

949. அந்த ஆதிச் சண்டேச்வரன் இகத்திலே யுகந்தோறும் சண்டேச்வரருண்டாகி நிற்கிறார்கள். ஆயுதங்களும் நாமதேயங்களும் வெவ்வேறாம். திரேதாயுகத்திற்குப் பிரசண்டனென்கிற பெயருமாம்; சுவேத வர்ணமுமாம். பதினாறு கைகளும், வாகனம் யானையும், சூலம், மழு, வஜ்ஜிரம், வாள், அங்குசம், சூரிகை, அபயம், தண்டம் இவை வலத்தில் எட்டுக் கைகளுக்கும்; இடத்தில் கட்கம், பிண்டிபாலம், பாசம், மணி, வரதம். வியாக்கிரகரம், சூசி, நாகம் இவை இடத்தில் எட்டு ஆயுதமுமாய்ச் சடாமகுடமுமாய்க் கொடிதான கண்ணுமாக இருப்பது.

(வியாக்கிரம் - புலி)

The primeval Chandēswarā takes birth in every yuga – in various names wielding various weapons. Prachandā is the name in Trētā yuga. Of white hue, with 16 hands, on the vehicle elephant, holding trident, war – axe, thunder – bolt, sword, goad, dagger, refuge – yielding gesture, mace in right hands and arresting sword, missile weapon, noose, bell, wish – yielding gesture, tiger mudrā, needle, snake in left hands – was the picture of Chandēswarā.

(vyāgram – tiger)

950 .திரேதாயுகத்தில் எட்டுக் கையும், சிவந்த நிறமும், வக்கிரச் சண்டனென்கிற பெயரும், விரிந்த சடையும், குதிரை வாகனமும், சற்றுச் சிரித்த முகமும், அபயம், சூலம், மழு, பட்டையம் இவை வலப்புறம்; வரதம், கேடயம், பாசம், மணி இவை இடக்கைகளில் பிடித்திருப்பது.

In the Trētā Yugā, his name was Vakracchandan; of red hue, with 8 hands, with spreading hair, on a horse vehicle, with a smiling countenance, holding refuge – yielding gesture, trident, war – axe and sword in right hands and wish – granting gesture, shield, noose and bell in left hands – was his posture.

951. துவாபர யுகத்திலே நான்கு கையும், பொன்னிறமும், சிம்மவாகனமும், சடா மண்டலமும், வெள்ளைப் பூணூலும் தரித்திருக்குங் கையும், இவற்றோடே கூடினதான முகமும், மழுவும், சூலமும் வலக்கையிலும், பாசமும் அங்குசமும் இடப்புறத்திலும் பத்திரப் பீடத்திலிருப்பும் பேரச்சண்டன் துவாபரயுகத்திற்கு இப்படிச் சொல்லப்பட்டது.

(பேரம் - சிலை)

In the Dvāpara Yuga Chandan was having 4 hands,of golden hue, on a vehicle of lion, with a hair style known as Jaṭāmandala, wearing a white sacred cord, holding a war – axe and a trident in right hands, arresting a noose and a good in left hands and sitting on a leaf – seat.

(bēram – statue)

952. கலியுகத்திலே, இரண்டு கையும், சாந்தமுமாய், சடாமகுடமுமாய் அன்றியே கேசப்பந்தமாதல், கறுத்த நிறமாதல், சௌம்யமான கண்ணும் முகமுமாய், ஆபங்கமாதல், சமபங்கமாதல், அன்றியே சமபாதஸ்தானமாதல்; பங்கமாகில், வலக்கால் குஞ்சித்து, இடக்கால் நின்றதும் அன்றியே வலக்கால் நின்றும் இடக்கால் குஞ்சித்தும்வீரச்சண்டேசனென்று பெயருமாய், ஸ்தானகமாதல், ஆசனமாதல், இடக்காலை மடித்தும் வலக்காலை லம்பித்தும், அன்றியே வலக்காலை மடித்தும், இடக்காலை லம்பித்தும், வலக்கையிலே மழுவும் இடக்கை வரதமும் [அன்றியே] இருதயத்திலே அஞ்சலி செய்தும், மழுவன்றியே இருக்கில் புஷ்பமாலையோடுங் கூடி, அஞ்சலி ஹஸ்மமுமாய்ச் சற்றே வலத்தில் லம்பிக்கப்பட்டு முகமுமாய், விருஷப வாகனமுமாய்க் கணயசம் தசத்தாலத்தினாலே எல்லா அங்கங்களையும் கற்பிப்பான்.

In the Kali Yuga the following will be Chandēsa's posture; With 2 hands, having a tranquil countenance, wearing a hair – crown called Jaṭāmakuṭ or a hair style known as Kēsapbandam, of black hue, with placid eyes, standing in a straight pose or slanting or partially tilting, if tilting, either heaping the right shank straight and the left ditto bent or keeping the left shank straight and the right ditto bent, under the name Viracchandēswarā, either standing or sitting, if sitting, the left shank should be folded while the right ditto should be hanging down or vice versa, holding a battle – axe in right chiro and a boon – rendering gesture in left chiro or with folded hands against chest or if war – axe eschewed having the folded hands with a garland, tilting the face just towards right and on a bull vehicle. The idol, should be chiseled keeping the measurement known as Tasattālam of last variety.

953. சண்டேச்வர இலட்சணம் இப்படிச் சொல்லிப், பூ மாலை லட்சணஞ் சொல்லப்படா நின்றது.

Thus explained the the characteristics of the idol of Chandēswarā, now has been enumerated the Land measurements.

34. பூமி மான இலட்சணம்

954. நான்கு கோணம், ஆயுதம் நான்கு கோணம், விஷமமான கோணங்கள், யோன்யாகாரம், அர்த்தச் சந்திரன், முக்கோணம், வட்டம், ஐந்து கோணம் ஆகப் பதினாறு பேதத்தினுடைய மானம் சொல்லப்பட்ட நின்றது. (மானம் - அளவு)

Measurements of lands in sizes of square, rectangle, triangle, circle, half-moon peepul leaf pentagon etc., 16 in number, have been pondered over.

955. கீழ்ப் பார்சுவம் தொடங்கி, வடக்கு முடிவாக எல்லா ஸ்தலத்தையும் அளப்பது.

Starting from east, and ending in the north, all directions can be brought under measurement.

956. புஜமென்றும், அஸ்தமென்றும், கரமென்றும், பார்சுவமென்றும், முழத்திற்குப் பெயராம்.

Bhujam, Hastam, Karam,Pārcuvam – all denote cubit.

957. புஜமென்கிற முழத்தினாலே முழத்தைச் சோதித்து, அதனால் நான்கு திக்கிலும் ஒவ்வொரு யவை குறைந்து சமாச்ரமாம்.

Samāsram is nothing but a square bering on 4 sides length equal to 1 yavā less than 1 cubit.

958. சமாச்ரமிப்படிச் சொல்லி, ஆயதாச்ரம் சொல்லப்பட்ட நின்றது.

Having mentioned, thus, Smāsram, now has been uttered Ayatāsram.

959. கிழக்கு மேற்கு இரண்டு முழம் வைத்துத், தெற்கும் வடக்கும் ஒரு ஒரு முழம் வைக்கிறது ஆயதாச்ரமாம்.

Ayatāsram is nothing but a rectangle having 2 cubits on each of east and west wings while 1 cubit on each of south and north sides.

960. ஐந்து மாஷங் கொண்டது பாதமாம்; நான்கு பாதங்கள் கொண்டது வாடிகையாம்; ஐந்தரை தண்டங் கொண்டது கூப்பிடு தூரமாம்; கூப்பிடு இரண்டு கொண்டது அர்த்தக்கண்டம், அர்த்தக் கண்டத்தில் இரண்டு கொண்டது கண்டம்; கண்டத்தில் நான்கு கொண்டது யோஜனை என்று பெயராம்.

Five Māsās constitute 1 Patām; 4 Patās make 1 Vāṭikā; 5 ½ Dandams give rise to 1 Kūppiṭu tūram ('calling distance'); 2 Kūppiṭu distances constitute 1 Ardhakanṭam; 2 Ardhakan?ams form 1 Kanṭam; 4 Kanṭams give rise to 1 Yōjanā.

35. கிராமாதி இலட்சணம்

961. அனந்தரம் கிராமாதிகளுடைய இலட்சணம் சொல்லப்பட்ட நின்றது.

Thereafter, the features of villages etc have been expounded.

962. பதினைந்து தண்டு தொடங்கித் தொண்ணூற்றியொன்பது தண்டளவும் இரண்டு முழம் ஏற்றினால் கிராமவிஸ்தாரம் நாற்பத்திமூன்று பேதமாம்; இது அந்தியாபாசமென்று பெயராம்.

There are 43 kinds villages based on the breadth of each keeping widths 15 tantūs to 99 and raising every time by 2 cubits. This is termed as Anthyābhasam.

963. நூற்றியொன்று தொடங்கி, முன்னூற்றியொரு தண்டமளவும் பத்துத் தண்டுவர்த்தித்தால், இப்பிரமாணம் ஆபாசம்.

Beginning from 101 and ending with 301, changing by 10 every time, is called Abhāsam.

964. முன்னூற்றியொரு தண்டு தொடங்கி மூவாயிரமளவும் நூறுநூறு வர்த்தித்ததால் விகற்பப் பேதம் இருபத்தியெட்டு.

Starting from 301 tanṭūs if we increase the breadth by 100 tanṭus each occassion, we will obtain 28 varieties in toto.

965. மூவாயிரம் தண்டு தொடங்கி, ஐயாயிரம் தண்டளவும், நூறுநூறு தண்டு விவர்த்தித்தால் ஜாதிபேதப் பிரமாணம் இருபத்தியொரு பேதமாம்.

Up to 5000 tanṭūs, from 3000 tanṭūs, if we change the measure by 100 tanṭūs every time, we will get 21 types.

966. 5000 தண்டு தொடங்கி, 8000 தண்டளவும் 100, 100 தண்டு வர்த்தித்தால், ஜாதிபேதப் பிரமாணம் 31 பேதமாம்.

From 5000 tanṭūs to 8000 tanṭūs, increasing by 100 tanṭūs, at each occassion, we will receive 31 patterns.

967. கிராமங்களுக்கு விஸ்தாரம் இப்படிச் சொல்லி, ஆயாமம் சொல்லப்பட்ட நின்றது.

Breadth, for the villages, has been thus uttered, now length has been articulated.

968. விஸ்தாரம் சமமாகவும், அன்றிக்கே ஒன்றேகால், ஒன்றரை, ஒன்றேமுக்கால், இரண்டாகிலுமாம்; இப்படி ஐந்து விதமாகச் சொல்லப்பட்டது.

Five designs have been suggested in which we have length equal to width, 1 ¼ times, 1 ½ times, 1 ¾ times or 2 times of breadth.

969. அகலத்தையும் நீளத்தையுங் கூட்டிக் குழி மாறிக்கொள்வது.

(மாறுதல் - பெருக்குதல்).

By multiplying length and breadth its area kuḻi should be calculated.

(māṟutal - multiplying)

970. அந்தக் குழியை எட்டுப் பெருக்கிப், பன்னிரண்டு கழிக்க ஆயமாம்.

Kuḻi must be multiplied by 8 and the number 12 should be subtracted from it to obtain Ayam.

971. எட்டுப் பெருக்கி, இருபத்தியேழு கழிக்க நட்சத்திரமாம்.

Multiplying the Kuḻi by 8 and subtracting the number 27 from it, we will get Star.

972. நான்கு பெருக்கிப், பன்னிரண்டு கழிக்க இராசியாம்.

Zodiac can be received by multiplying the Kuḻi by 4 and deducting the number 12.

973. ஒன்பது பெருக்கிப், பத்துக் கழிக்க வியயமாம்.

Multiplying the Kuḻi by 9 and keeping the subtrahend as 10, we will get vi̲yayam.

974. குழியை மூன்றால் பெருக்கி, எட்டில் கழிக்க யோனியாம்.

The multiplicand Kuḻi must be multiplied by 3 and having the subtrahend as 8, we will get Yōni.

975. ஒன்பது பெருக்கி, முப்பது கழிக்க திதியாம்.

Kuli should be multiplied by 9 and keeping the subtrahend as 30, we will get Titi.

976. ஒன்பது பெருக்கி, ஏழு கழிக்க வாரமாம்.

Multiplying Kuḻi by 9 and deducting 7 from the answer the result will be day.

977. ஆயம் மிகுந்தும், வியயம் குறைந்தும் சம்பத்திற்கு இருப்பு உண்டாம்.

If the area has more length than width, it will fetch wealth.

978. வாரங்களில், திங்கள், புதன், வெள்ளி, வியாழன் இவை வர்த்தனத்தை உண்டாக்கும்.

In days, Monday, Wednesday, Friday and Thursday will bring prosperity.

979. மற்றுள்ள வாரங்கள் ஆகாது; கிரகிக்கில் விபத்துண்டாம்.

The rest of the days are no good; if plunged to design the land etc on those days, it may invite accidents.

980. கர்த்தாவினுடைய ஜன்ம நட்சத்திரம் தொடங்கி, வாஸ்து நட்சத்திரமளவாக எண்ணினால் ஜன்மமும், இரண்டு, நான்கு, ஆறு, ஒன்பது இந்த நாட்களும், அநுஜன்மும் இவை நன்றாகச் சொல்லப்பட்டது; நின்றவற்றை வர்ஜிப்பது.

Counting from the birth star of the executor up to that of the Vāstu, the birth star, and from this the 2, 4, 6 and the 9th days have been advocated. The rest should be discarded.

981. ஆறாம் இராசி, எட்டாம் இராசி, பன்னிரண்டாம் இராசி, லக்கினம் இவை வர்ச்சிப்பது.

Counting from the birth star of the lord, the sixth, eighth, twelfth and birth zodiac sign should be execrated.

982. திதி, வாரம் முதலாயுள்ளவற்றில் பொல்லாத யோகங்கள் கூடினால், அதுவும் வர்ச்சிப்பான்.

When the evil Yōgās combine with the days, he would spurn than also.

983. கர்த்தாவினுடைய நட்சத்திரத்திற்கும், வாஸ்து நட்சத்திரத்திற்கும் விரோதமாகில் அதுவும் வர்ச்சிப்பான்.

If the stars of the lord and the Vāstu are incoherent, he would despise them too.

984. இப்படிப் பல பிரகாரமாகப் பரீட்சித்து, வாஸ்து வின்யாசஞ் செய்வது.

Likewise, all aspects taken into account, the Vāstu plan would be consummated.

985. பிரவேசிக்க அரிதாயிருப்பதாய், எல்லா ஜாதிகளோடு கூடின எல்லாத் திரவியங்களோடுங் கூடின, இராஜக்ருகத்தோடு கூடியிருக்கிறது. துர்க்கமென்று பெயராம்.

That which is difficult of access, possessing all materials and wealth, having a palace, is termed as Durgam.

986. ஒரு பதத்திற்குச் சகளமென்று பெயராம்; நான்கு பதத்திற்கு வைசகல மென்று பெயராம்.

An area of 1 sq.ft., is called Sakalam and that of 4, Vaichakam.

987. ஒன்பது பதத்திற்குப் பீடமென்று பெயராம்; பதினாறு கூடினது மகாபீடமென்று பெயராம்.

A square of area 9 ft., is called Pītam and that of 16 sq., ft., is indicated as Mahāpīṭam.

988. இருபதத்தைந்து பதத்திற்கு உபபீடமென்று பெயராம்; முப்பத்தியாறு பதத்திற்கு உக்கிரபீடமென்று பெயராம்.

Twenty five sq., ft., area is known as Upapīṭam and 36 sq., ft., ditto will be understood as Ugrapītam.

989. நாற்பத்தியொன்பது பதத்திற்கு ஸ்தண்டிலமென்று பெயராம்; அறுபத்தி நான்கு பதத்திற்கு மண்டுகமென்று பெயராம்.

Stanṭilam is that which must have 49 sq., ft., area and 64 sq., ft., area should be called as Manṭūkam.

990. எண்பத்தியோரு பதத்திற்குப் பரம்சாயிபதமென்று பெயராம்.

An area of 81 sq., ft., is nothing but Paramshāyi padam.

991. நூறு பதம் விஷ்டரமென்று பெயராம்; நூற்றி இருபத்தோரு பதம் ஸ்தானீயமென்று பெயராம்.

100 sq., ft., area will be called as Vishṭram and 121 sq., ft., Stānīyam.

992. நாற்பத்தி நான்கு பதம் தேசீயமென்று பெயராம், நூற்றியறுபத்தி- யொன்பது பதம் உபய சண்டிதமென்று பெயராம்.

Dēshi is that which consists of 44 sq., ft., area while Ubhaya, 169 sq., ft.,

993. நூற்றித் தொண்ணூற்றியாறு பதம் பத்திராசனமென்று பெயராம்.

Bhadrāsanam is that area which consists of 196 sq., ft..

994. நூற்றியிருபத்தைந்து பதம் பத்தும கர்ப்பமென்று பெயராம்.

A square of area 125 sq., ft., will be called as Padmagarbham.

995. இருநூற்றி ஐம்பத்தியாறு பதம் திரியுதபதமென்று பெயராம்; பதினாறு குழி சொல்லுவது.

An area equal to sq., ft., 256 is termed as Triyuta padam which is equal to 16 Kuḻis.

996. இருநூற்றி எண்பத்தொன்பது பதம் விருத்தபோகமென்று பெயராம்; பதினேழு குழி சொல்லுவது

Vruttabhōgā is nothing but a square of area 289 sq., ft., and the same will be equated to 17 Kuḻis.

997. முன்னூற்றி இருபத்திநான்கு பதம் கண்டாஷ்ட்க பதமென்று பெயராம்.

An area of land consisting of 324 sq., ft., will be called as Kanṭāsṭaka padam.

998. முன்னூற்றியறுபத்தோரு பதம் கணிகாம்சமென்று பெயராம்; [பத்தொன்பது குழி சொல்வது].

Ganikāmsham is a square with an area of sq., ft., 361 and this will be equal to 19 Kuḻis.

999. நாற்பது பதம் சூரயவிசாலமென்று பெயராம்; இருபது குழி சொல்லுவது.

A square containing 40 sq., ft., area will be called as Sūryavisālam; This is equal to 20 Kuḻis.

1000. நானூற்றி நாற்பத்தியோரு பதம் சுசம்ஹிதமென்று பெயராம்; இருபத்தியோரு குழி சொல்லுவது.

Susamhita padam is nothing but a square of area 441 sq., ft., when calculating in terms of Kuḻi, it will arrive at 21 Kuḻis.

1001. நானூற்றியெண்பத்தினான்கு பதம் சுப்ரதிகாந்தமென்று பெயராம்; இருபத்திரண்டு குழி சொல்லுவது.

The square Supratikāntakam must have an area of sq., ft., 484; In kuḻi calculation, it works out to 22 Kuḻis.

1002. ஐநூற்றி இருபத்தியொன்பது பதம் விசாலமென்று பெயராம்; இருபத்திமூன்று குழி சொல்லுவது.

If a square ground has on area of 529 sq., ft., then it will be termed as Visālam; In kuḻi interpretation, it amounts to 23 Kuḻis.

1003. 576 பதம் விப்ரகர்ப்பமென்று பெயராம்; 24 குழி சொல்லுவது.

A square with an area 576 sq., ft., attains the name Vipragarbham; In kuḻi measurement, it comes to 24 Kuḻis.

1004. அறுநூற்றியிருபத்தைந்து பதம் விச்வேசமென்று பெயராம்; இருபத்தி ஐந்து குழி சொல்லுவது.

A visvēsam must contain 625 sq., ft., area; In kuḻi rendering, it works out to 25 Kuḻis.

1005. அறுநூற்றி யெழுபத்தாறு பதம் விபுலபோகமென்று பெயராம்; இருபத்தியாறு குழி சொல்லப்பட்டது.

That will be called Vipulabhōgam if the square has an area of 676 sq., ft., This is equal to Kuḻis 26.

1006. எழுநூற்றி யிருபத்தொன்பது பதம் விப்ரதிகாந்தமென்று பெயராம்; இருபத்தியேழு குழி சொல்லப்பட்டது.

That square will be termed as Vipratikāntam if it contains 729 sq., ft., area. This constitutes Kuḷis 27.

1007. எழுநூற்றியெண்பத்தினான்கு பதம் விசாலாட்சமென்று பெயராம்; இருபத்தியெட்டுக் குழி சொல்லுவது.

For Visalākṣham we must have an equal to 784 sq., ft., This forms into 28 Kuḷis.

1008. எண்ணூற்றி நாற்பத்தியோரு பதம் விப்ரகமென்று பெயராம்.

An area spreading into 841 sq., ft., will be termed as Viprakam.

1009. தொள்ளாயிரம் பதம் விச்வேசசாரமென்று பெயராம்.

Nine hundred sq., ft., square receives the name Visvēsacāram.

1010. தொள்ளாயிரத்தறுபத்தியோரு பதம் ஈச்வரகாந்தமென்று பெயராம்; இதை முப்பத்தியோரு குழி என்றறிவான்.

Īswarakāntam is nothing but a square whose area must be 961 sq., ft., When calculated in Kuḷis, it works out to 31 kuḷis.

1011. ஆயிரத்து இருபத்திநான்கு பதம் இந்திரகாந்தமென்று பெயராம்.

When a square has an area 1024 sq., ft., it will be indicated as Indrakāntam.

1012. கிராமங்களுடைய வின்யாசார்த்தமாகச் செய்யப்பட்ட பதம் பேதம் முப்பத்திரண்டு பேதமாம்.

Likewise, there are 32 kinds of areas in regard to village land plans.

1013. அந்த முப்பத்திரண்டு பதத்திலே ஆதியிலே ஐந்து பதம் அந்தியாபாசமென்று பெயராம்.

Among the 32 squares, at the outset, the first 5 squares will be called as Antyābhāsam.

1014. அதற்கு அடுத்த ஐந்தும் ஆபாசமென்று பெயராம்; அதற்கு அடுத்த ஐந்தும் விகற்பமென்று பெயராம்.

The next 5 squares will go by the name Abhāsam when the 5 adjacent to these will be called as Vikalpam.

1015. அதற்கு அடுத்த ஐந்தும் சந்தமென்று பெயராம்.

Chandam will be the name for the next 5

1016. நின்றது பன்னிரண்டு ஜாதி என்று பெயராம்; இப்படிப்படவே சொல்லப்பபட்டது.

The remaining 12 will be termed as Jāti. In this fashion they have been recounted.

1017. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து தண்டில் இவற்றில் தனக்கு வேண்டியதினாலே வீதியகலம் கொள்வான்.

The statuary would devise the width of a street as wide 1, 2, 3, 4 or 5 tanṭus.

1018. வாஸ்து மத்தியத்தில் உண்டாயிருக்கிற, கிழக்கு முகமாயும் வடக்கு முகமாயும் இருக்கிற வீதிகள் பிரம்மவீதி என்று பெயராம்.

The streets at the centre of the lay-out, facing east and north will be designated as Brahma streets.

1019. துவாராயதங்களோடு கூடினது ராஜவீதி என்று பெயராம்.

The broad street with entrance will attain the name Rājavīti.

1020. குறுக்கே வாசலையுடைத்தானது நாராசமென்று பெயராம்.

That street with entrance in the side way will be known as Nāracam.

1021. மதிலினடிப் பரப்பு அகலத்தை மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டுக் கூறு செய்து, இதில் ஒரு கூறு குறைத்துத் தலைப்பரப்புக் கொள்வது.

Bifurcating the width of the base of the fort-wall into 3, 4, 5, 6, 7or 8 parts, he would fix the breadth of the summit the same with parts keeping the subtrahend as 1 part thereof in each case.

1022. சிலையாதல், செங்கல்லாதல்; மண்ணாலேயாதல் கற்பிப்பது.

The wall of the fort can be built either with stone, brick or clay.

1023. குடைபோலேயாதல், நீர்க்குமிழி போலேயாதல், ஓந்தி முதுகு போலேயாதல், யானை முதுகு போலேயாதல் மதிற்றலையைச் செய்வது.

The crest of the fort-wall can be constructed in the shape of either umbrella, water bubble or back of chameleon.

1024. செங்கல்லாலும் கருங்கல்லாலும் செய்யப்பட்ட மதில் தலைகளை உளுந்து, பயறு [இவைகளைச்] சிக்கணமாகச் செய்து, பூசிப், பொன் மெழுகு ஆகும்போலப் பூசுவது.

In cases of the crests made of bricks and black-stones, an over-coating of the paste prepared from black-gram and pulse should be given and smeared puntil a golden-wax appears.

1025. மண் சுவராகில், மரங்கொண்டு மூடிப், புல், இலை இவற்றாலே மேய்வது.

If it is mud-wall, it should be covered with wood, grass and leaves.

1026. அந்தக் கோட்டை மதிலை ரட்சிக்கிறவர்களுக்கு, அந்தக் கோட்டை உள்ளும் புறமும் வேண்டின மானத்தாலே, பேல்நாய்ச் சாய்கை (?) கட்டுவது.

(மானம்- அளவு)

For the convenience of the protectors of the fort, with the required measures, suitable structure must be built.

(Mānam – measure).

1027. அதற்குப் புறம்பே, வேண்டினதாலே அகழைச் செய்வது.

Beyond that, moat, in the desired size, should be constructed.

1028. தெருவின் நுனியில் தேவாலயத்தைச் செய்வானல்லன்.

The mason would not build temple at the end of a street.

1029. வாபீ, கூபங்களும் இவற்றை எல்லாவிடத்திலும் கற்பித்ததுப், பிரம்மாம்சத்திலே ஈச்வரன் சபையும், வாருண திக்கிலே ஹரிமந்திரமும் செய்வது.

The limner would dig tank and well in suitable places without strict injunctions as to locations. He would erect Siva temple at the centre and on the west, a Vishnu temple.

1030. கிழக்கே குசவனும், வடகிழக்கே முடிதிருத்துபவரையும் வைப்பது.

The settlement for pot - makers will be earmarked in the east and in the north – east for barbers.

1031. தெற்கே கணக்கனையும் வைப்பது.

South direction will be allotted for the residences of Kanakkas (account writers).

1032. மீன் வாணியரை மேற்கே நிறுத்துவது.

The fish vendors will be given places in west wing.

1033. வாணிபனையும், கடைத்தெருவையும் வடக்குத் திக்கிலே வைப்பது.

The merchants and bazaars should remain in the north side of village.

1034. கோட்டைக்குப் புறத்திலேயாதல் உள்ளேயாதல் கிழக்கே கன்னாரை யிருத்துவது.

Either inside the fort or outside, in the eastern wing, the braziers will rendered places to dwell.

1035. கோட்டைக்குப் புறத்திலே தென்கிழக்கே, தூரத்திலே, வண்ணாரை இருத்துவது.

Outside the fort, in the South-east wing, far away will be given spot for launderers.

1036. அதற்கு தென்கிழக்கே கூப்பிடு தூரத்திலே ஆதிதிராவிடர்களை இருத்துவது.

South – east of that wing will be placed, the s.c., beyond a distance of a call.

1037. அதன் கிழக்குப் புறத்திலே வடகிழக்கிலே நூறு தண்டளவிலே சுடுகாடு கற்பிப்பது.

East of it, in the side north – east, keeping 100 tanṭus in between, will be established the cremation ground.

1038. அன்றியே, வட மூலையிலே, நூறு தண்டளவில், சுடுகாடு ஆகிலுமாம்.

Or, in the north corner, leaving 100 tanṯus gap, a cremation field can also be set up.

நூல் முற்றும்

THE END

பின்னிணைப்பு - 1

ஸ்மிருதிகள் - 18

1. மனு ஸ்மிருதி
2. பராசர ஸ்மிருதி
3. யாக்ஞவல்கிய ஸ்மிருதி
4. கௌதமர் ஸ்மிருதி
5. ஹரிதர் ஸ்மிருதி
6. யம ஸ்மிருதி
7. விஷ்ணு ஸ்மிருதி
8. சங்க ஸ்மிருதி
9. லிகித ஸ்மிருதி
10. பிருகஸ்பதி ஸ்மிருதி
11. தக்ஷ ஸ்மிருதி
12. ஆங்கிரஸ் ஸ்மிருதி
13. பிரசேதாஸ் ஸ்மிருதி
14. சம்வர்த்த ஸ்மிருதி
15. ஆசனாஸ் ஸ்மிருதி
16. அத்திரி ஸ்மிருதி
17. ஆபஸ்தம்ப ஸ்மிருதி
18. சதபத ஸ்மிருதி

பின்னிணைப்பு - 2

உபஸ்மிருதி - 18

1. ஜாபாலி ஸ்மிருதி
2. நாசிகேதாஸ் ஸ்மிருதி
3. ஸ்கந்த ஸ்மிருதி
4. லௌகாக்ஷி ஸ்மிருதி
5. கஸ்யப ஸ்மிருதி
6. வியாச ஸ்மிருதி
7. சனத்குமார ஸ்மிருதி
8. சந்தனு ஸ்மிருதி
9. ஜனகா ஸ்மிருதி
10. வியாக்ர ஸ்மிருதி
11. காத்தியாயன ஸ்மிருதி
12. ஜாதுகர்ண்ய ஸ்மிருதி
13. கபிஞ்சல ஸ்மிருதி
14. போதாயன ஸ்மிருதி
15. கணாத ஸ்மிருதி
16. விஸ்வாமித்திர ஸ்மிருதி
17. வைதீநாசர் ஸ்மிருதி
18. கோபில ஸ்மிருதி

பின்னிணைப்பு - 3

சில மரங்களுக்குரிய வடமொழிப் பெயர்கள்

தமிழ்	வடமொழி
1. இலவு	சம்மலீ
2. புளி	திந்திரிணீ
3. வேம்பு	நிம்ப
4. புங்கம்	கரம்ஜ
5. கடுக்கை	ஹரீதகீ
6. விளா	கபித்தம்
7. எருக்கு	அர்க்க
8. இலந்தை	பதரீ
9. தான்னி	விபீதஹ
10. வெண்கருங்காலி	சல்ய

பின்னிணைப்பு - 4

தானியம் முதலியவற்றிற்குரிய வடமொழிப் பெயர்கள்

தமிழ்	வடமொழி
1. துவரை	ஆடகீ
2. சீரகம்	ஜீரணஹ
3. மிளகு	மரீஷம்
4. கடுகு	கதம்பகம்
5. கருமொச்சை	ராஜமாஷம்
6. தட்டைப் பயறு	மகாமாஷம்
7. சாமை	முனிப்பிரியம்
8. கருஞ்சோளம்	கிருஷ்ணமாஷம்
9. உளுந்து	மாஷம்
10. பாசிப் பயறு	மகாமுத்கம்
11. தினை	திஷ்யகம்
12. எள்ளு	திலஹம்

பின்னிணைப்பு - 5

வடமொழிக் கலைச்சொற் பொருள்

அபிகாரம் - நெய் போன்றவற்றை மேலே விடுவது.
ஆர்க்கியம் - கைகளைச் சேர்த்து நீர்வாங்குதல்
அன்னார்த்தி - அன்னத்தை விரும்புபவன்
ஆசமனீயம் - நீர் பருகுதல்
உத்வாசனம் - கிளப்பிவிடுதல்
உத்தூளனம் - தூவுதல்
உபசாரம் - குற்றேவல் (விசிறிவிடல் போன்றவை)
ஏகோத்திஷ்டம் - ஒருவனை உத்தேசித்தல்
ஜகிகம் - இந்த உலகு
ஆமுஷ்மிகம் - மேலுலகு
குசதீர்த்தம் - தர்ப்பை நீர்
கூர்ச்சம் - தர்ப்பை முறுக்கு
க்ஷாளனம் - அலம்புதல்
கௌணாதிகாரி - இரண்டாம் அதிகாரம் பெற்றவன்
சுருவம - அக்கினியில் நெய்விடப் பயன்படுத்தும் மரக் கரண்டி
அரோத்திரியன - வேதம் படித்தவன்
த்விஜர் - அந்தணர், வைசியர், சத்திரியர்களைக் குறிக்கும் பெயர்ச் சொல்
திரியக்யோனி - விலங்கு யோனி
நக்தம் சாரி - இரவில் சஞ்சரிப்பான்
நியாசித்தல் - தொடுதல்
பரிஷேசனம் - சுற்று
பாத்தியம் - கால் கழுவும் நீர்
புரோஷணம் - தெளித்தல்
மார்ஜனம் - கழுவுதல்
யஜித்தல் - யாகம் செய்தல்
யாஜ்யர் - யாகம் செய்விப்பவர்
லேபனம் - பூசுதல்
விசர்ஜனம் - கழித்தல்



சென்னை அச்சக தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,
எண்.6, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5. போன் : 2844 6287